அரசியல்துறை செயலகம்

# வெளிச்சம்



வைகாசி
ஆனி
2002

விலை
25/=





விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

# வெளிச்சம்

கலை, இலக்கிய சமூக இதழ்

தமிழீழ தேசியத்தலைவரின் கருத்துரையுடன்

**சிறுகதைகள்**

பெருமாள் கணேசன்
வல்வை ந. அனந்தராஜ்
வேணி சின்னத்தம்பி
ஆதித்தநிலா

**கட்டுரை**

அ. அன்ரனி

**களவெளிப்பாடுகள்**

தூயவன்
முல்லை யேசுதாசன்
வசந்தன்
சுஜிந்திரா

பொதுசன யாழ்ப்பாண



**கவிதைகள்**

மாலிகா
புதுவை இரத்தினதுரை
அலையிசை
ஆத்மரிஷி
கரவை தர்ஷிகா
யாத்திரீகன்
ஞாபகன்
கருணைரவி
யாழ். சுதா
வன்னிவாசன்
சித்தாந்தன்
இ. றோமியஸ்
த. டே. ஸ்காட்
ந. மயூரரூபன்
ப்ரியாஜெயக்குமார்
சந்திரன்
ம. அருள்ஜோண்சன்
புஸ்பதேவன்

மற்றும் தூது, கடிதம் என்பனவும்.


**தொகுப்பும் அமைப்பும்**

ஆசிரியர்குழு

**அச்சுப்பதிப்பு**

வவுனியா வடக்கு
ப. நோ. கூ. சங்கப் பதிப்பகம்
புதுக்குடியிருப்பு

**ஓவியங்கள்:**

தயா
கோபாலி
நிலாந்தன்
முல்லைக் கோணேஸ்
ராஜன்
பயஸ்

**வெளியீடு**

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
நாலாம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு
தமிழீழம்

# தலைவாசல்

வைகாசி — ஆனி, 2002 இதழ்: 78

இலங்கையில் சமாதானம் என்பது இப்பொழுது உலகம் முழுவதும் அறிந்ததொரு நிகழ்ச்சித் திட்டமாயிருக்கிறது.

இந்தச் சமாதானத்துக்கான ஏற்பாட்டில் உள்வெளிச்சக்திகள் பலவும் ஈடுபட்டிருக்கின்றன. அவரவர் நோக்கம், அவரவர் நலன் என்பனவும் இந்தச் சமாதான ஏற்பாட்டு வேலைத்திட்டத்தின் பின்னாலுள்ளன. ஆனாலும் பொதுவாக போரை முடிவுக்குக் கொண்டு வருதல் என்பது சமாதானத்துக்கான வேலைத்திட்டத்தின் முதன்மை அம்சம். அதன் முதற்கட்டமாக யுத்தநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அது புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஓரளவுக்கு எல்லாத் தரப்பிலும் ஆதரவுமுண்டு.

இந்த யுத்த நிறுத்தமும் போரை முடிவுக்குக் கொண்டுவருதலும் சமாதான நடவடிக்கையின் முதல் அம்சம்தான். ஆனால் சமாதானம் என்பது பிரச்சினையைத் தீர்க்காதவரையில் கேள்விக்குள்ளாகியே இருக்கும். பிரச்சினைக்கான தீர்வைக்காணாதவரையில் சமாதானம் சாத்தியப்படப்போவதும் இல்லை. சமாதானம் சாத்தியமில்லையெனில் எட்டப்பட்ட புரிந்துணர்வும் அதன்வழியான யுத்தநிறுத்தமும் பயனற்று மீண்டும் போர் மூளக்கூடியதொரு அபாயச்சூழல் தோன்றிவிடவும்கூடும்.

எனவே, போரை முடிவுக்குக் கொண்டுவருதல், சமாதானத்தை எட்டுதல் என்பனவெல்லாம் பிரச்சினைக்கான தீர்வைக்காண்பதிலேயே முழுமையாகத் தங்கியிருக்கிறது. பிரச்சினையைத் தீர்ப்பதில்தான் முழு வெற்றியையும் பெறமுடியும்.

தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதிலும் அவர்களது உரிமைகளை அங்கீகரித்தலிலும் அவர்களுடைய பிரச்சினையை நேர்மையுடன் உண்மையாக அணுகுவதனூடாகவுமே தீர்வை நோக்கி நகரமுடியும்.

இதற்கு உள்-வெளிச்சக்திகள் யாவும் தம்மைத்தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். சமாதானம் சகலரினதும் மெய்யான விருப்பமாகவும் உண்மையான ஈடுபாடாகவும் இருந்தால் அதற்குத் தீர்மானகரமான தயார்ப்படுத்தலும் சரியான அணுகுமுறையும் வேண்டும்.

மாறாக சமாதானத்தை தம்நலனுக்கானதொரு உபாயமாக மாற்ற முனைந்தால் கதை முற்றிலும் வேறுவிதமாக அமைந்துவிடும்.

சமாதானம் தேவை என்ற குரல்கள் ஓங்கியொலித்தால் மட்டும் போதாது அவை பலம் பெறவும் வேண்டும்.


இதேவேளையில் சமாதானம் என்பதோ தீர்வு என்பதோ வந்தாலென்ன விட்டாலென்ன என்று சிலர் இருக்கக்கூடும். ஆனால் தமிழ்பேசும்மக்கள் அப்படியிருக்க முடியாது. ஏனெனில் மற்றவர்களைவிட தமிழ் பேசும்மக்களுக்கே பிரச்சனைகள். அவர்களுக்கே தீர்வு தேவை. எனவே தீர்வை நோக்கி அவர்கள் நகரவேண்டியும் விழிப்பாக இருக்கவேண்டியும் உள்ளது.

வெற்றியை நோக்கி நகர்க்கப்படும் போரைப் போலவே சமாதானத்தையும் வெற்றியை நோக்கி நகர்த்த வேண்டும். போரில் ஏற்படும் நெருக்கடிகள், பின்னடைவுகள் போல சமாதானத்துக்கான நடவடிக்கைகளின் போதும் நெருக்கடிகளும் பின்னடைவுகளும் ஏற்படக்கூடும். இவற்றையெல்லாம் கடந்தே நிலையான நீதியான சமாதானத்தின் வெற்றியைப் பெற வேண்டும். இதற்கும் பாடுபடுதலும் அர்ப்பணித்தலும் வேண்டும்.

தமிழர்தரப்பு இதனைப் புரிந்துகொண்டே நீண்டகாலமாக சமாதானத்துக்கான கதவுகளைத் திறந்துவைத்திருந்தது. இப்பொழுதும் அதுபொறுமையுடனும் நிதானத்துடனும் சமாதானத்துக்காகப் பாடுபட்டும் வருகின்றது.

எனவே சமாதானத்துக்கான இந்தத் தருணத்தை எவரும் கைதவறவிடக்கூடாது.

00




யாருமற்ற ஊருக்குள்
ஓவென்று இரைகிறதே காற்று.
என்ன நடந்தது இங்கு
எல்லோரும் எங்கு போய்விட்டனர்?
தெருவில் புழுதியளையும் சிறுவரெங்கே?
அல்லிப் பூவாட்டம்
ஆற்றில் குளித்தெழும் பெண்களைக் காணோமே.
உலாவரும் கொம்பன் மாடுகளும் தொலைந்தனவா?
பாடும் குயில்களும் கிளிகளும் பறந்தனவா?
சலசலத்தோடும் இரணைமடு வாய்க்காலின்
சந்தன நீரை உறுஞ்சியவன் எவன்?
நெற்றியிலிட்ட ஒட்டுப் பொட்டாய்
நிலவுவருமே
எவன் களவெடுத்துப் போனான் அதை.
காடதிரக் கேட்குமே காத்தான் கூத்துப்பாட்டு
அண்ணாவியின் வாயை அடைத்தவன் யார்?
அழுத நாளிற் கூட கலகலவென்றிருந்த ஊருக்கு
எவரிட்ட சாபமிது?
கண்பட்டுப் போனதோ கற்பகவிருட்சம்?
கட்டிய கச்சையை அவிழ்த்து
ஏன் மேலாக்குப் பிடிக்கின்றனர் எல்லோரும்.
சிறையிலிருந்த போதே சிரித்தவர்கள்
ஒப்பந்தம் என்றதும் உருகிப் போனார்களா?
ஓமந்தைக்கு அப்பாலான உலகில்
தங்கமழை பொழிவதாக யார் சொன்னது?
மூச்சுவிடக் காற்றைத் தவிர
எல்லாவற்றுக்கும் தடையிருந்தது நேற்று.
எவரும் அழவில்லையே அப்போது
வரும் பகையெதிர்க்கும் வல்லமையுடன்
நிமிர்ந்த வாழ்வுக்குரியராய் இருந்தோம்.
வீதி திறந்ததும் ஏனிந்த விபரீதம்.
இடிதாங்கி விட்டு இருக்கிறது மாங்குளம்
தேகமெங்கும் குண்டுபட்டும்
போகப் புறப்படவில்லையே புளியங்குளம்
இவர்களுக்கு மட்டுமேன் இத்தனை அவசரம்?

மாலிகா



**"எத்தனை துன்பங்களை எதிர்கொண்ட போதும் எமது மக்களின் மனவுறுதி தளர்ந்து விடக்கூடாது"**

**தமிழீழ தேசியத்தலைவர்**
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

அரசியல்வேலை என்பது வெறும் பிரச்சாரமாக மட்டும் அமைந்துவிடக் கூடாது. ஏனெனில் பெரும்பாலான எமது மக்கள் போராட்டம்பற்றி தெளிவு உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். முன்பொரு காலம் போராட்டம்பற்றித் தெளிவில்லாத மக்கள் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய நிலை வேறு, இன்று எமது மக்கள் போராட்டத்தின் அவசியம்பற்றி நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனினும் போராட்டத்தின் விளைவுகள் அவர்களை நேரடியாகப் பாதிக்கின்றன. போராட்டத்தின் நிமித்தம் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். பெரும் துன்பத்தைச் சுமந்துவருகிறார்கள். அவர்களை இந்தத் துன்பங்களிலிருந்து மீளச் செய்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இந்தநோக்கிலேதான் எமது வேலைத் திட்டங்கள் அமையவேண்டும்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் சாவும், அழிவும், துன்பமும், துயரமும் தவிர்க்கமுடியாதவை. பெரிய தியாகங்கள் அர்ப்பணிப்புகள் புரிந்துதான் நாம் எமது விடுதலையை வென்றெடுக்கவேண்டும். சுதந்திரம்பெற்ற மக்களின் வரலாறும் இதுதான். எத்தனை துன்பங்களை எதிர்கொண்ட போதும் எமது மக்களின் மனவுறுதி தளர்ந்துவிடக்கூடாது. நம்பிக்கையீனம் தோன்றிவிடக்கூடாது. மக்களுக்கு உறுதியும் நம்பிக்கையும் ஊட்டும் வகையில் எமது பிரச்சாரங்கள் அமையவேண்டும்.

நாம் ஒரு தேசியப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். நாம் வர்க்கப் போராட்டத்தை முன்நடத்தவில்லை. தேசியப்போராட்டம் என்றால், எல்லா வர்க்கத்தினரையும் ஒரே அணியில், ஒரே இயக்கத்தில் ஒன்றிணைத்து தேசிய விடுதலைக்காகப் போராடுவது என்பது தான் அர்த்தம்.

எமது மக்கள் சமுதாயத்தை மூன்று வர்க்கப் பிரிவினராக வகுக்கலாம். ஒன்று வசதிபடைத்த மேற்தட்டு வர்க்கம், இரண்டாவது நடுத்தர வர்க்கம். மூன்றாவது சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழை பாட்டாளி வர்க்கம்.

தேசியப் போராட்டத்தின் நிமித்தம் எல்லாச் சமூகப் பிரிவினரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. மேற்தட்டு வர்க்கத்தினரும், நடுத்தரவர்க்கத்தினரும் வெவ்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். எனினும் சமூகத்தின் கீழ்மட்டத்திலுள்ள ஏழை மக்களே பெரிய அளவிலான பாதிப்பிற்கு இலக்காகியுள்ளார்கள். வேலையில்லாப் பிரச்சினை இம் மக்கள் மத்தியில் பூதாகாரமாக எழுந்துள்ளது. இம் மக்களின் நாளாந்த வாழ்க்கை ஒரு ஜீவமரணப் போராட்டமாக மாறியுள்ளது. நாம் சகல சமூகமட்டங்களிலுமுள்ள எமதுமக்களோடு இணைந்து, அவர்களுக்கு உதவி செய்து அனைவரையும் அணைத்துச் செல்லும் அதேவேளை ஏழை மக்களின் துயரங்களைத் துடைப்பதில் எம்மாலான முழு முயற்சிகளையும் செய்யவேண்டும். வேலையற்று, வறுமைக்கோட்டில் நின்று அல்லல்படும் இம் மக்களுக்கு வேலைவாய்ப்பளித்து, அவர்களின் கூட்டு உழைப்பை ஊக்குவிக்கும் வகையில், எமது வளத்திற்கும் சக்திக்கும் ஏற்ற வகையில் வேலைத் திட்டங்களை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

# சமாதானம் தேடுகின்ற தரப்பும் சிதைத்திடத் துடிக்கும் சக்திகளும்

அ. அன்ரனி



இலங்கையில் பொருளாதார அழிவிற்கும், இனங்களுக்கிடையேயான ஒருமைப்பாட்டுச் சிதைவிற்கும் முடிவுறா இனப் போரே காரணமாக அமைந்துள்ளது.

அரசாள்வோர், ஆளப்படுவோர், அடக்குமுறையினைக் கையாள்வோர், அடக்கப்படுவோர், என இரு சாரார்க்கிடையில் ஏற்படும் ஒவ்வாமை, கருத்து வேற்றுமை என்பன தொடர்வதினாலேயே இன்று வரை அது தொடர்கின்றது.

இருப்பினும் கடந்த பொதுத் தேர்தலானது சமாதானத்துக்கான ஆட்சி மாற்றத்தை உண்டுபண்ணியது. போரே தீர்வு எனும் செல்நெறியில் மூழ்கியிருந்த கட்சியானது தேர்தலில் கடும் தோல்வி கண்டது. சமாதானமே வழி என சுட்டி நின்ற ஐ.தே.மு மக்களால் அரசாளும் கட்சியாக தெரிவு செய்யப்பட்டது. தேர்தல் காலத்தில் அளிக்கப் பட்ட வாக்குறுதியின்படி பேச்சுக்கள் மூலம் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஐ.தே.மு அரசாங்கம் முன் வந்தது. முதற் கட்ட நடவடிக்கையாக போர் நிறுத்தத்தினையும் ஏற்படுத்தியது. விடுதலைப்புலிகளுடன் கலந்தாலோசித்து ''புரிந்துணர்வு ஒப்பந்தம்'' எனும் காத்திரமான நகல் ஒன்று கைச்சாத் தாகியது.

இவ் ஒப்பந்த வரைபு பூர்த்தி செய்யப்பட்ட தானது இந்நாட்டின் பல் இன மக்களினாலும் வரவேற்கத்தக்க விடயமாக நோக்கப்படுகிறது. இதுவரை காலமும் அடக்கு முறைக்குள்ளாக்கப் பட்டு வந்த தமிழினமும் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்டது. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து அவர்களது வாழ்வியலை மதித்து படையினரும் அவர்களைக் கட்டுப்படுத்துவோரும் நடந்து கொள்ள வேண்டுமென புலிகள் தரப்பால் அறிவுறுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதே ஒப்பந்த நகல் ஆகும். அதன்படி தமிழீழ மக்களது சுதந்திர நடமாட்டத்திற்கு ஊறு விளைவிக்கும் படையினரது நடவடிக்கைகள் ஒவ்வொன்றாக கவனத்தலெடுக்கப்பட்டு முற்றாக நீக்கப்படும் எனும் வாக்குறுதியும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய அரசாங்கத்தால் ஓரிரு நல்ல முன் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆயினும் இன்று வரை படையினரதும் சமாதானத்தை விரும்பாத சில தீய சக்திகளினதும் நடவடிக்கைகள் சமாதான வழிகளைச் சிதைக்கின்ற செயல்களாக தொடர்ந்த படியேயுள்ளன. இது ஒரு கவலை தரும் விடயம். சமாதானத்திற்கு விரோதமான நடவடிக்கைகளை முடக்கி விட்டு மீண்டும் போர் உருவாக்கப்படுவதையே இத்தரப்பினர் முற்று முழுதாய் விரும்புகின்றனர். இதன் மூலம் இவர்கள் சாதித்துக்கொள்ள நினைப்பது பலவாக இருந்தாலும் கடந்த கால போர் இவர்களது ''ஆயுதக்களஞ்சியங்களை'' நிரப்பி வைத்ததென்பதை நாமென்றும் மறக்கவில்லை. எனவேதான் போர் தணிந்து விட்டால் தமது பிழைப்பில் மண் தான் எனும் பயம் இவர்களை இத் தீய தூண்டுதல் நடவடிக்கைகளில் இறங்கும் படி தூண்டியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளில் சிலர் நேரடியாகவும், பலர் திரைமறைவிலும் செயற்படுவதை காணமுடிகின்றது. சில

உறுமய, ஜே.வி.பி, வீரவிதான போன்றவர்களோடு சேர்ந்து கொண்டு அரச கட்சியான பொ. ஐ. முன்னணியானது இந்நடவடிக்கையில் விஷப்படமெடுத்து ஆடுகின்றது. போதாக்குறைக்கு அரசியல் தலைவர்கள் பலரும், கணிசமான மகா சங்கத்தினரும், காடைத்தனமான அரசியல் சித்தாந்தத்தில் ஊறிய தடியர்களும் களமிறங்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அதிகமாய் படைத்தரப்பினரையும், ஆயுத மேந்திய தமிழ் விரோதக் குழுக்களையும் நாடியிருப்பதையும் இனங்காணக் கூடியதாய் உள்ளது.

ஏனெனில் தமது வாய்ச்சவாடி அரசியல் கொள்கைப் பிரகடனத்தால் பெரும்பான்மை சிங்கள மக்களிடையேயும், வெளி உலகிலும் தமிழர் தரப்பு நியாயங்களைக் கொச்சைப்படுத்தி விட இவர்கள் கட்டி நின்ற கங்கணம் தோல்வி கண்ட நிலையில் மனம் நொந்து போன இவர்கள் ஆயுதக்கலாசாரத்தின் மூலம் தாம் நினைக்கும் அரசியல் இலாபத்தை எட்ட முடியுமென்பதினை இனம் கண்டுள்ளார். அதற்கான நல்லதொரு வாய்ப்பாக படையினரை ஏவி விட்டு மீண்டும் உருவாகும் போரின் மூலம் காரியம் சாதிக்க முயல்கின்றனர்.

சமாதான நடவடிக்கைக்கு இவர்களது செயற்பாடுகள் பல குழப்ப நிலையை ஏற்படுத்தலாம். இதுவொரு புறமிருக்க நாம் இங்கே இன்னொன்றையும் சுட்டிக்காட்ட வேண்டும். இனச்சிக்கல் விடயத்தில் இன்றைய ஆட்சியாளர்களாகிய அரசுக்கும் அரசாளுகின்ற அரசாங்கத்திற்குமிடையே கருத்தொற்றுமை நிலவியதாக இல்லை. அரசாங்க கட்சி எடுக்கின்ற எந்தவொரு முடிவினையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் மறுதலித்தும், குறைத்து மதிப்பிட்டும் பூசி மெழுகியும் வருகின்றார். இத்திரிசங்கு நிலையில் மாற்றம் ஏற்படுத்துகின்ற வரையில் ரணில் அரசாங்கம் எடுக்கும் எந்த விதமான சமாதான நடவடிக்கையெதுவும் முழு வெற்றி யீட்ட முடியாதென்பது கண்கூடு. எனவே முதலில் சந்திரிகாஅரசையும் அதனோடிணைந்த பேரினவாத சக்திகளிடத்திலும் இனமுறுகல் விடயத்தில் மனமாற்றத்தினை ஏற்படுத்தி சமாதானப்பாதையை சீரமைக்க வேண்டும். அதற்கான முழு முயற்சியை அரசாங்கம் எடுக்குமா? எடுக்க முடியுமா? இக் கேள்விகளுக்கான விடைகள் சந்தேகமளிப்பவையாகவே இருக்கின்றது.

உண்மையில் இந் நாட்டில் ஏற்பட்ட இனமுறுகல், தீர்வு விடயத்திலும் சரி, பிற அரசியல் விடயங்களிலும் சரி ஆட்சியாளர்களிடையேயும், அரசாளப்படுகின்றவர்களிடையேயும் சரி, அரசுக்கும் கட்சிகளிடையேயும் சரி எந்தவொரு விடயத்திலும் எக்காலகட்டத்திலும் கருத்தொற்றுமை நிலவியதாக இல்லை. கருத்துச் சமநிலைத்தட்டு அதிகமாக அரசு எடுக்கும் நிலைப்பாட்டின் பக்கமே சாய்ந்திருக்கும். அந்தளவிற்கு மக்கள் கொடுக்கும் வாக்குக்கு எதிராக அரசு பின்பு மாறி சில விலைபோகும் சக்திகளை தமது கருத்தின் பக்கம் சார்ந்திருக்கும் வண்ணம் தோழமையை ஏற்படுத்தியிருக்கும். நல்லதோ கெட்டதோ அரசின் நிலைப்பாட்டிற்கு ஒப்புப்பாடும் இவர்களுக்கு இறைசித்துண்டங்களாக ஏதோ சில தேவைகள் நிறைவேற்றி வைக்கப்படும். இந்நிலையில் அரசுக்கும் மக்களுக்கும் இடையே எவ்வாறுதான் கருத்து ஒற்றுமை நிலவும்? அதுவும் சிறுபான்மைத் தமிழ் மக்களின் இனச்சிக்கல் தீர்வு விடயத்தில் தீர்க்கமானதொரு கருத்தொற்றுமையை ஏற்படுத்த முடியும்?

ஆயினும் புலிகள் சமாதானத்தேடலில் இன்னும் அக்கறையுடனும் நிதானத்துடனும் தான் நடந்து கொள்கின்றனர். பலமுறை ஆயுதப்படையினரால் சீண்டப்பட்டபோதிலும் புலிகள் சிவப்புக்கொடி தூக்காது பச்சைக் கொடியைப் பறக்கவிட்டபடியே உள்ளனர். அதுமாத்திரமன்றி தமது உண்மை எண்ணங்களையும் தமது நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கொரு நல்ல உதாரணமாக பேச்சு வார்த்தைக் காலகட்டத்திற்கு முன்போ அன்றி தேவை யேற்படும்போதோ சமதானத்திற்காக சம்பந்தப்பட்டவர்களுடன் தாம் பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்குத் தயார் என அறிவித்திருந்தனர். ஜனநாயகத்திற்கு விரோதமிழைக்காத விடயங்களெதுவாயினும் அவர்களுடன் கலந்தாலோசித்துசமாதானத்தின் தேவையை வலியுறுத்தி வைக்கவும் புலிகள் தயாராய் உள்ளனர் என்பதினை இதன் மூலமும் தெளிவுபடுத்தி வைத்திருக்கின்றனர்.

ஆகவே புலிகள் சரியான நிலைப்பாட்டை தெளிவுற அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொண்டு அவர்களது எண்ணங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாவண்ணம் செயற்பட வேண்டும். அதைவிடுத்து பழைய அரசியல் பாணியிலான புலிகள் ஆட்களை, இணைக்கிறார்களென்றும், ஆயுதங்களைக் கடத்துகிறார்களென்றும், போருக்கு தயாராகிறார்களென்றும் கூச்சலிடுவதும், பேச்சுவார்த்தை முயற்சிகளைக் குழப்புவதும் தேவையற்றதொன்று. இவ் நடவடிக்கைகள் அனைத்திற்கும் காரணமாய் அமைந்திருக்கும்


போரை நிறுத்துவதற்கே சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன. ஆகவே அதன்மூலம் சமாதானம் ஏற்பட்ட பின்னர் புலிகளுக்கு இந்நடவடிக்கைகளில் ஈடுபடும் தேவையெதுவும இருக்காது தானே? அதனை விளங்கிக் கொள்ளாது ஏதோ கால்போன போக்கில் நடப்பதுபோன்று பேரினவாதிகள் நடந்து கொள்வாராயின் அது ஒரு முட்டாள்த்தனமான செயலொன்றாகும். அதுமாத்திரமன்றி அரசாங்கமும் இவர்கள் விடயத்தில் தெளிவானதொரு முடிவைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அரசாங்கம் இவர்களது போர்க்குணத்துக்குத் தீனிபோடும் வகையில் இசைவாக நடக்கக் கூடாது. மக்கள் எதிர்பார்ப்போடு எடுக்கும் சமாதானத்தை நோக்கியே எந்தவொரு முடிவிலும் ஈடாட்டமோ நிலைகுலைவோ, தயக்கமோ, தாமதமோ ஏற்படுத்தக்கூடாது. ஏனெனில் அண்மையில நடந்த சில சம்பவங்களும், அரசாங்கத்தின் காலதாமப் போக்கும் கண்டிக்காத போக்கும் தமிழ் மக்களிடையே அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கையின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. நாளை அச்சந்தேகம் வளர்ந்து அவநம்பிக்கையை ஏற்படுத்தி மீண்டும் போரை ஏற்படுத்தி விடக்கூடாது என்பது மக்கள் அனைவரினதும் ஆசையாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று மாதங்கள் கடந்து விட்டது. இருந்தும் இன்னும் தமிழர் தரப்பு பிரச்சனைகள் பல ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தீர்த்துக் கொள்ளப்படவில்லை: மக்கள் மீது அரச படையினரால் பிரயோகிக்கப்பட்டு வந்த அடக்கு முறை வடிவங்கள் இன்னமும் தொடர்ந்தபடிதான் உள்ளன.

அண்மையில்கூட யாழ் தீவுப்பகுதியில் புலி உறுப்பினர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல், மூதூரில் பணிமனைதாக்கப் பட்டமை, தென்தமிழீழத்தில் புலி உறுப்பினர்கள் பலர்கைது செய்யப்படுகின்றமை, கடற்போக்குவரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றமை, கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்வது எனப்பல திட்டமிட்ட குழப்பல் முயற்சிகள் நடை பெறுகின்றன. இன்னும் கூட தகுந்த எதிர் நடவடிக்கைகள் எதுவும் அரசாங்கத்தால் மேற்கொண்டதாய் இல்லை. இது சமாதானத்தை நோக்கியதான நகர்விற்கு தடைக்கல்லாக அமைந்து விடக்கூடாது.

அத்தோடு கடந்த 13. 07. 2002 இல் தமிழீழ கடற்பரப்பு பிரதேசத்தில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த இரு றோளர்கள் கடற் படையினரது தாக்குதலின் போது மூழ்கடிக்கப் பட்டன. படகினுள் ஆயதங்களோ அன்றி தடைசெயயப்பட்ட பொருட்கள எவையும் இல்லையென உறுதிப்படுத்தப்பட்போதிலும் தாக்குதல் நடைபெற்றது. இவை போன்றவை தொடரும் யுத்த நிறுத்த மீறல சம்பவங்களாகவேயிருக்கின்றன. கண்காணிப்பு பிரதிநிதியுடன் இருந்த றோளர் படகொன்று தாக்கப்பட்டமை எவ்வகையில் யுத்த நிறுத்த மீறல் இல்லையென அரசால் எண்பிக்க முடியும். அதுமாத்திரமன்றி இத்தாக்குதலை நியாயப் படுத்துகின்றவகையில அரசும் அறிக்கை



வெளியிட்டிருப்பதானது மக்கள் மத்தியில் விசனத்தையே ஏற்படுத்தியிருக்கின்றது. தொடர்ந்தும் கடல் பாதுகாப்பை பலப் படுத்தும் முயற்சியிலீடுபடுவதோடு கடற் படையினரது செயலைக் கண்டிக்காது கடற் படையினரைத் தட்டிக் கொடுக்கின்ற வகையில் அவர்களுக்கு மேலதிக அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வகை முடிவுகள் உண்மையில் பல சிக்கல்களை ஏற்படுத்திவிடும்.

அதாவது தொடர்ந்து இனங்களிடையே முரண்பாடுகள் தொடர வழி செய்யும் நட வடிக்கைகளை உடன் தடைப்படுத்தா விட்டால் அரசாங்கம் இன்னும் பல பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். ஏனெனில் தொடர்ந்த போரினால் தனியே தமிழ் மக்கள் மட்டும்

பாதிக்கப்படவில்லை. கணிசமான தொகையில் சிங்கள மக்கள் கூட பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்நாட்டில் தொடரும் அரசியல் இழுபறி நிலையினால் முழு இலங்கையுமே பாதிப்படைந்துள்ளது. இதுஒருவகையில் சிங்கள மக்கள் மாறி, மாறி வந்த அரசியல் அதிகாரத்தை உருவாக்கும் தலைமையினை எதுவித நிபந்தனையுமின்றி, தெளிவுமின்றி தேர்வு செய்து கொண்டமையினால் ஏற்பட்ட விளைவே ஆகும். இனங்காண மறந்து தேர்வு செய்ததன் பலனை பாவம் அவர்களும், தமிழினத்தோடு சேர்ந்து அனுபவிக்க வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதனைச் சிங்கள மக்களும் ஐயம்திரிபட விளங்கிக்கொண்டால்தான் உண்மையான அபிலாசைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதொரு சரியான தலைமையினைத் தமக்கு உருவாக்கமுடியும். அந்தவகையில் எப்பாடு பட்டேனும் சமாதானத்தை நிலைநாட்டியே தீருவேன் எனும் குறியோடு செயற்படும் ஐ.தே.மு. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு தடையாய் உள்ள சக்திகளை ஓரங்கட்ட அழுத்தம் கொடுக்க வேண்டும். ஏனெனில் இவர்களை உடனே புறம் தள்ளுவதும் ஓரம்கட்டுவதும் ஐ. தே. மு. அரசாங்கத்திற்கு சுலபமான காரியமாயிருக்காது. ஏனெனில் இவர்கள் இன்று உருவாக்கப்பட்டவர்களல்ல. காலம் காலமாய் பேரினவாத தீனியூட்டி அந்தந்த காலகட்ட அரசுகளால் வளர்க்கப்பட்டவர்கள். ஏதோ ஒருவகையில் முன்னைய ஐ தே. க. அரசும் இப்படியான பலரை உருவாக்கியிருந்தது. அதனாலேயே சமாதான விரோதிகள் விடயத்தில் புதிய அரசாங்கம் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடுகின்றது.

இவ்வகையில் இருதலைக்கொள்ளி எறும் பின் நிலையிலிருந்து அரசாங்கம் முதலில் விடுபடவேண்டும். பின்னர் அமைதி நோக்கி நகரும் தனது நிலைப்பாட்டிற்கு முழு மக்களினதும் ஆதரவைத் திரட்டிக் கொண்டு களத்தில் இறங்க வேண்டும். அப்போது தீயசக்திகளது கைங்கரியம் தானாக பெட்டிப்பாம்பாக அடங்கிப்போகும். பின்னர் தனது உண்மையான மனப்பக்குவத்தோடு தமிழர் தரப்பை பேச்சுவார்த்தை மேசையில் சந்திக்கும்போது எதிர்பாராத பல நல்ல முடிவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதுவே இன்றைய இலங்கை மக்கள் பெரும்பாலானோரின் விருப்பமாகவும் உள்ளது. 00



## உயிர் ஒடுங்கல்

நீ என்னையே பார்க்கின்றாய்
பயம் மினுங்கும்
என் கண்களின் மடிப்புக்களில்
வன்மங்களைப் பூசுகிறாய்
மோகினியாய் என்னை உருவகித்து
உயிர் முடிச்சுக்களின் இடுக்குகளில்
அச்சக் கரிகளை அடைக்கின்றாய்
சொற்களைப் புகைக்க விட்டு
என் மொழியை விழுங்குகின்றாய்
சொல்லடங்கிய மொழி
உன் இடைகளேறிப்
புதையப் புதைய
தற்கொலைதாரி என
துப்பாக்கியை வீசிவிட்டு ஓடுகின்றாய்
மொழிகளற்ற ஒருவனின்
பார்வைகளைத் திருடிக் கொண்டு.

கருணை ரவி

# தூது

வன்னி
யூலை, 2002

அன்புள்ள வதியனுக்கு,

வணக்கம். எப்படியிருக்கிறாய்? நளினிக்கும் பிள்ளைகளுக்கும் எங்களின் அன்பைச் சொல். சுகவிசாரிப்பைக் கூறு. மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்று உன்குரலைக் கேட்டதில் நிறையச் சந்தோசம். நேரில் பார்க்க முடியாவிட்டாலும், கதைக்க வாய்த்ததில் ஒரு நிறைவு. கனிவான அதேகுரல். அதே பரிவு. அதே உரிமை, எல்லாவற்றின் மீதுமான அதே அக்கறை. கண்டம் மாறிப் போய்க் கனகாலம் ஆனபோதும் சொந்த ஊருக்குத் திரும்புவது பற்றியே இன்னும் சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள். நாதனுடன் பேசும்போது அவனும் ஊர்திரும்புவதையே விரும்புகிறதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இப்பொழுது வெளிநாடுகளிலிருந்து இங்கே வரும் நம்மவர்களின் தொகை பெருகியிருக்கிறது. சொந்த நாட்டுக்கு வருவதில் அவர்களுக்கிருக்கும் ஈடுபாட்டையும் சொந்த ஊரில் நிற்கும்போது அவர்களுடையும் சந்தோசத்தையும் நிறைவையும் பார்க்கின்றேன். இந்தத்தவிப்பு சாதாரணமானதல்ல. இதுவே உங்களுக்குள்ளும் ஆட்டிப்படைக்கிறது. எப்பொழுதும் அந்நியத் தன்மை நிரம்பிய மனதுடன் ஒரு பிறத்தியானாக ஓரிடத்தில் இருப்பதையும் பிறத்தியானாக ஓரிடத்தில் நடத்தப்படுவதையும் சகிக்க முடிவதில்லை. உனக்குள்ளிருக்கும் சமூகவிழிப்பு மேலும் சொந்த தாயகத்தை நோக்கி உன் கவனத்தைத் திருப்புகிறது. நாதன் பெரிய அவாவுடன் எப்ப ஊருக்கு நிரந்தரமாகத் திரும்பி நிம்மதியாக வாழலாம் என்று தவிக்கின்றான்.

இந்தப் புரிந்துணர்வு காலத்தின் சிறு அமைதிக்குள்ளேயே எத்தனை மாற்றங்கள் நிகழ்கின்றன? உறவுகள் வருகின்றன. சேருகின்றன; விருந்தினர்களும் வெளியாட்களும் வருகிறார்கள். வியாபாரிகள் வருகிறார்கள். புதிய பொருட்களும் வருகின்றன. எங்கும் மெல்லியதொரு மகிழ்ச்சியும் ஆரவாரமும் பூத்துத்தானிருக்கிறது. இது தொடருமா? சடுதியாக வாடிவிடுமா? என்று யாருக்கும் தெரியாது. ஆனால், எல்லோரிடமும் இந்த சமாதான நடவடிக்கை பற்றிய அச்சமும் கேள்வியும் உண்டு.

புரிந்துணர்வு நடவடிக்கையில், அதிலுள்ள பல விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பின்னடிக்கிறது. அரசை நீதியாகச் செற்படத் தூண்டும் மக்கள் எழுச்சிப்போராட்டங்கள் நடக்கின்றன. இன்னும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கவில்லை. தொடங்கும் காலப்பகுதியோ நிகழ்ச்சி நிரலோ இன்னும் முன்வைக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. எல்லோரையும் விட நாம்தான் இதில் அதிகம் கவலைப்பட வேண்டியிருக்கிறது. பிரச்சினை எங்களுடையது. அதற்கான போராட்டத்தை, எத்தனையோ தடைதாண்டி சுமையேற்று, வலிகளைத்தாங்கி நடந்து வந்த பெரும் பயணத்தை நிகழ்த்தியவர்கள் நாம். வெற்றியோ தோல்வியோ அதிகம் பாதிப்பது நம்மைத்தான். இதனால்தான் நாம் விழிப்பாக இருக்கிறோம். இந்த விழிப்பு போராடும் மக்களுக்கு எப்போதும் அவசியம். இந்த விழிப்புடன்தான் இங்கே கண்டனப் பேரணிகளும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடக்கின்றன.

பழைய பாதைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன என்றார் ஒரு நண்பர். ஒரு பாதை திறப்பு என்பது அது புதிய பாதையாக இருக்க வேண்டும்; உண்மையான அர்த்தத்தில். ஆனால் ஏற்கனவே இருந்த பாதையைப் பூட்டிவிட்டு



மீண்டும் திறப்பதை புதிதாகப் பாதை திறப்பதாகவே அரசு காட்ட விளைகிறது. புதிதாகப் பயணங்கள் நிகழ்கின்றன. புதிய சூழல் பிறந்திருக்கிறது என்று பலரும் எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள். ஒரு சமூகத்தின் வளர்ச்சியை மட்டுப்படுத்தி விட்டு, தடுத்துவிட்டு பின்பு சிறு இடைவெளியை அளிப்பதனூடாக அதிமேலற்படும் சிறு மாற்றத்தை புதிய சூழல், புதிய வளர்ச்சியென்பதா? அதன் இயல்பான வளர்ச்சிக்கு அனுமதித்திருந்தால், அல்லது அரசு பாரபட்சம் காட்டாதிருந்தால் இப்போதுள்ள நிலைமையைவிட இன்னும் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்குமே.

சமாதானப்பேச்சுவார்த்தையும் தீர்வும்கூட அரசாங்கத்தாலும் சில ஊடகங்களாலும் இப்படித்தான் நோக்கப்படுமோ, கையாளப்படுமோ என்று அஞ்சுகிறோம். எல்லாவற்றையும் பறித்துவிட்டு அல்லது தடுத்துவிட்டு பின்பு சிறிதளித்து தருவதனூடாக முழுவதையும் கொடுத்துவிட்டதான ஒரு மயக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால், நாம் விழிப்பாகவே இருக்கிறோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலமாகிய இப்போதைய சூழலில் பலவும் ஓரளவுக்கு சுமுகமடைந்துவருகிறது. அல்லது அப்படித் தோற்றம் தருகிறது. ஆனால் இதற்குள் ஒரு நிறைவான மகிழ்ச்சியும் மலர்ச்சியும் ஏற்பட்டிருப்பது உண்மை. இதை சகலரும் நிறைவானதாகவும் உயிர்ப்புள்ளதாகவும் மாற்ற வேணும். சகலருக்கும் சமாதானத்தை முழுமைப்படுத்துவது தவிர்க்கமுடியாத ஒரு பொறுப்புவாய்ந்த அவசியபணியாகும்.

ஒரு காலகட்டத்தில் போர்பற்றிப் பேசினோம். இப்பொது அதிகமதிகம் சமாதானம்பற்றிப் பேசுகிறோம். நாம் சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது மறுபக்கத்தில் போர்பற்றி அரசதரப்பில் சிந்தித்துக் கொண்டிருப்பதாகவும் பேசிக்கொள்கிறார்கள். கடந்தகாலங்களில் நமக்கு ஏற்பட்ட அனுபவங்களும் அப்படித்தானே இருந்தன. எனவே எதனையும் நாம் சந்தேகிக்காமலும் இருக்க முடியாதல்லவா?

நண்பனே!

உன்னுடன் அன்றுகதைத்தபிறகு நான் உடுத்துறைக்குப்போனேன். முன்பு போல தரவைக்குள்ளால் போகமுடியாது. அந்தப்பாதை இன்னும் மிதிவெடி அச்சத்திலிருந்து மீளவில்லை. இப்போது அது புழக்கத்திலுமில்லை மாவிலங்கைத்தோட்டம் உட்பட எங்கும் தென்னைகளெதுவும் இல்லை. வீடுகளோ, வேறு மரங்களோ என்று ஒன்றும் மிஞ்சவில்லை. பதிலாக மண்ணரண்களும் முட்கம்பிச் சுருள்களும் மிதிவெடிகளும் நிறையவுண்டு. கைவிடப்பட்ட சிதைந்துபோன காவலரண்கள் தானுண்டு. புதுக்காட்டுச்சந்தியாலதான் பயணம் நடக்கிறது. தரவை விரிந்து ஊர்களையும் தன்வசப்படுத்தியிருக்கிறது. கடற் கரையில் மட்டும் சிலவீடுகள் பாதியாகவும் அரை குறையாகவும் மிஞ்சியிருக்கின்றன. சனங்கள் கடற்கரைப்பக்கமாக வரத்தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் குறைவாகத் தானிருக்கிறார்கள். தொழில் மெல்ல தொடங்கியிருக்கிறது. ஆனாலும் கொழும்புக்கு மீனோடு லொறி ஓடுகிறது.

தரவையில் எந்த வீடும் மிச்சமில்லை. வயலுக்குள்ள வல்லிபுரம் அண்ணை கோடை வெங்காயம் வைக்கிற ஞாபகம் வருகிறது. இப்ப வயலெது, வளவு எது என்றும் பிரித்தறிய ஏலாது. வல்லிபுரம் அண்ணைவவுனியாவில ஒரு கொமினிகேசன் சென்ரர் (தொலை பேசித்தொடர்பகம்) வைத்து நடத்திக்கொண்டிருக்கிறார். தமிழ்ப்பதிகளில வன்னி தவிர மற்றெங்கும் இதுவொரு புதுத்தொழில். அதேமாதிரிமிக்சர் கடைகளும் அப்பிள் கடைகளும் வழிக்குவழி புதிசா முளைச்சிருக்குதுகள்.

---

# தூது தூது தூது தூது தூது

இப்பொழுது கொமினிகேசன் சென்ரர்களும் லொட்ஜ்களும் முக்கியமான அம்சமாகிவிட்டன. ஈழத்தமிழர் வாழ்க்கையில் ஒவ்வொரு தொலைத் தொடர்பகங்களிலும் தங்கள் உறவினரின் தொலைபேசி அழைப்புக்காக தினமும் பலர் காத்திருக்கிறார்கள். இதில் பாதிப்பேர் லொட்ஜ்களில் வாரக்கணக்காக, மாதக்கணக்காகத் தங்கி தொலைபேசியில் கதைப்பதற்காகவும் காசு வருவதற்காகவும் காத்திருக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வரும் காசில் பெரும்பகுதி ரெலிபோனுக்கும் லொட்ஜ்க்கும் சாப்பாட்டுக்கடைக்கு மேபோகுது. இதுக்கொரு மாற்றுவழியை யாரும் யோசிப்பதாகவும் தெரியவில்லை. போக்குவரத்துச் செலவு, தங்குமிடச்செலவு, ரெலிபோன் செலவு, தவிர பிறசெலவுகள், அலைச்சல், காசு இன்றும் வரவில்லை என்று 'உண்டியல்' செய்பவர்கள் செய்யும் தாமதம் எல்லாவற்றுக்குப் பதிலாக மாதா மாதமோ அல்லது குறிப்பிட்டதொரு காலப்பகுதியிலோ வாங்கிகளூடாக பணத்தை வெளிநாடுகளிலுள்ளோர் இங்கே அனுப்பலாம். வேண்டுமானால் மிக அவசியமானவற்றுக்கு தொடர்பு கொள்ளலாம். சொந்தத் தொலைபேசியில்லாதவர்கள் படும் சிரமமும் செய்யும் செலவும் சொல்லிமாளாது. இதை நீங்கள் நிச்சயம் கவனமெடுக்கவேண்டும்.

தூது

வடி, யாழ்ப்பாணத்தைவிட வவுனியா நிறைப்பெருத்த மாதிரியும் மாறியிருப்பதாகவும் தெரியுது. வடபகுதியின் ஒரு முக்கியமான நகரமாக வவுனியா வந்துவிட்டது. தொண்ணூறுக்குப் பிறகு வடபகுதிக்கான இடைத்தங்கல் கனமாகவும் தொடர்புமையமாகவும் வவுனியாதான் இருந்து வந்திருக்கிறது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முந்திய B.B.C யின் ஒலிபரப்பில்கூட, நீ இதனை அவதானித்திருப்பாய். ஊடகங்களில் மட்டுமல்ல மக்களின் பெரும்பாலான தேவைகளுக்கும் அரச நிர்வாக தொடர்புகளுக்கும் வவுனியாதான் மையம்.

தூது

யாழ்ப்பாணம் 85க் குப்பிறகு யுத்தத்தின் மையப்பிடிக்குள் சிக்கியிருந்ததால் அதன் முகம் பெருமளவுக்கும் சிதைக்கப்பட்டேயிருக்கிறது. இப்பொழுது குண்டு வீச்சால் கட்டிடங்களும் மரங்களும் சிதைந்து விட்டன. சொத்திழப்பும் உயிரிழப்பும் அதனை வெறுமையாக்கியிருக்கிறது. சனங்கள் ஒவ்வொருபோதும் விட்டோடி விட்டோடி அது சோபையிழந்துவிட்டது. பலவற்றுக்குப் பாரமரிப்பாளர்களும் இல்லை உரித்தாளரும் இல்லை. பதிலாக இவர்களில் பலர்வவுனியாவுக்குப் பெயர்ந்து வவுனியாவில் வாழத்தொடங்கி நகராக்கியிருக்கிறார்கள்.

தூது

யாழ்ப்பாணத்தில் இப்போது மின்சாரம் வந்திருக்கிறது. ஓரளவுக்குப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. போக்குவரத்தும் சீராகத் தொடங்கியிருக்கிறது இழந்துபோன வாழ்வை ஈடேற்ற ஒவ்வொரு யாழ்ப்பாணத்தாரும் உழைக்க வேண்டியிருக்கிறது. அப்படித்தான் அவர்கள் இப்போதிருக்கிறார்கள். யாருக்கும் ஓய்வில்லை. ஒவ்வொருவரும் இரண்டு அல்லது மூன்று வேலை செய்கிறார்கள்.

நீண்ட நாட்களின் பின் கொழும்புக்கும் போயிருந்தேன். கொழும்பும் நிறைய மாறித்தானிருக்கிறது. தங்களின் வாழ்க்கைத் தேவைகளுக்காகவும் வாழ்க்கை வசதிகளுக்காகவும் உழைத்தல்; சிந்தித்தல் என்பதே பொதுமொழியாகியிருக்கு. கிட்டத்தட்ட யாழ்ப்பாணத்திலும் இதுதான் நிலைமை. ஒரு குட்டிக் கொழும்பாக யாழ்ப்பாணம உருவாகி வருகிறது; அல்லது மாற்றப்பட்டு வருகிறது என நினைக்கிறேன்.

தூது

யாழ்ப்பாணத்திலிருந்து புராதன பொருட்களெல்லாம் கொழும்புக்கும் பிற இடங்களுக்கும் விலைப்பட்டுப் போய்க் கொண்டிருக்கின்றன. கவர்ச்சிகரமான விலையைக் கொடுத்து இங்கப் பொருட்களை வாங்கிச் செல்கிறார்கள். எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு வெறுங்கையர்களாக நிற்கப்போகிறோமா "என்று அகிலன் கேட்கிறான். ''யாழ்ப்பாணத்தின் பல ஓவியங்களும் நல்ல புகைப்படங்களும் அழிந்து போய்விட்டன, சில பாதுகாக்க வசதியற்றிருக்கின்றன'' என்று இன்னொரு நண்பர் ஆதங்கப்பட்டார். இப்போது கணணியில் இவற்றை சேமித்துப் பாதுகாக்க வாய்ப்பிருந்தும் ஒருவரும் இதற்கு முயற்சிக்கவில்லை. சிந்திப்பதாகவும் தெரியவில்லை. யுத்தத்தில் எதுவும் அழிந்து போகலாம் என்பதால் முடிந்தளவுக்கு எல்லாவழிகளிலும் பாதுகாக்க வேண்டியவற்றைக் காக்க வேண்டுமல்லவா;

தூது

கடிதம் போடு எல்லோருக்கும் எங்கள் அன்பு. அன்புடன்,

விதுல்ஜன்

# தேவி எழுக



புதுவை இரத்தினதுரை

தேவி எழுக
இந்தச் சிறுமுல்லைக் காடதிர;
ஆவி கலங்குமெமை ஆதரிக்க நீவருக.
தேவி எழுக
இந்தச் சிறுமுல்லைக் காடதிர.
கூவும் குயிற்பாட்டெம் குடிமனையிற் கேட்டிடணும்.
தூவும் மழைச்சாரல்
சுடு நிலத்தில் வீழ்ந்திடணும்.
தவித்த வாயடங்கத் தண்ணீர் பெருகிடணும்.
அவித்த கிழங்குண்டு
அந்தரித்த உயிர்களுக்கு
விதித்த தீர்ப்பதனை விலக்கிச் சுகம் தருக.
நதியில் இறங்கிடணும் நம் கால்கள்
இற்றை வரை
கொதித்த உடலமெலாம் குளிரும் நிலை வரணும்
வாசலெங்கும் கோர வல்லூறின் எச்சங்கள்.
வீசும் காற்றினிலும் வெடிமருந்தின் உச்சமணம்.
சாவின் மணம் போதும்
சாக்காட்டின் பூமத்தம்
பூவின் மணம் போதும்
புது வசந்தம் வீசட்டும்
இரந்திரந்து எல்லா இரவற் திண்ணையிலும்

உறங்கியதும்
பட்ட உத்தரிப்பும் போதுமடி.
கரம் தொழுதோம் எங்கள் கண்ணீருக்கென்னபதில்?
வரம் தருவாய் அழுத வாசலினி விளங்கட்டும்.
விண்ணைக் கிழித்துந்தன் விழிதிறந்து
எமைப் பார்த்துப்
புன்னகையை நல்காய் பெருமாட்டி.
கையிலுள்ள
உடுக்கினொலியிந்த உலகேழும் ஆர்ப்பரிக்க
மிடுக்கோடுனது சிறு மெட்டியொலி கேட்டிடனும்.
கண்டி நெடுஞ்சாலைக் கரையெங்கும்
பூமலர்ந்து
வண்டுதும் பாடல் வரனும்;
ஊர்புகுமெம்
தேர்களிலே உந்தன் திருமுகமே இலங்கிடனும்.
நீர்தெளித்து வைத்த நிறைகுடங்கள் யாவினிலும்
நெற்றித் திலகம் நிலைத்திடனும்;
வன்னியிலே
பெற்ற வரங்களுடன் போகுமெம் பிள்ளைகளின்
வெள்ளைப் புரவிகளால் வீதியெலாம் ஜொலிப்புறுக.
கள்ளி; சிறுநெருஞ்சிக் காட்டிடையே தீயெழுக.
மீண்டும் துளிர்த்தெங்கள்
முல்லை வனம் பூச்சொரிக.
தோண்டும் குழியிருந்து
சுனை நீர் பெருகிடுக.
இடையில் கடல் கடந்து இடம் பெயர்ந்தோம்
இன்றோ பார்
தடைகள் உடைத்தெங்கள் தார் வீதி மீளுகிறோம்.
ஆறு வருடமதாய் ..
அடை காத்து
அடை காத்து
வீறுடைய குஞ்சுகளை வெளியே வரச் செய்தோம்.
சூரியனின் சூடில் சூல் கொண்ட மலையிலினிக்
காரிருட்டு மேகம் கவியாது;
விடுதலையின்
வேரினிலே எந்த விஷ எறும்பும் கடியாது.
மீன்பாடும் வாவி மிளிரும்
இரணை மடு
வான் பாயும்; கோண வரை மீது முகிலிறங்கும்.
பாலாவி நீர் கொண்டு பாடும்;
கீரிமலை
ஆளாகி மீண்டும் அழகாய் புதிதுடுக்கும்.
வன்னிமண் தன்னை வணங்குகிறோம்;
இத்தனை நாள்
கண்ணின் இமையாகிக் காத்தாள்
அவள் முலையில்
பாலருந்திப் பெற்ற பலத்தால் நிமிர்ந்துள்ளோம்;
தேவி எழுக
இந்தச் சிறு முல்லைக் காடதிர;
ஆவி கலங்குமெமை ஆதரிக்க நீ வருக.
தேவி எழுக
இந்தச் சிறு முல்லைக் காடதிர.

ஒரு கவனக் குவிவு

# படைத்தல் ரசித்தல் பற்றி
## மேலும் சில குறிப்புகள்

நீண்ட நாட்களுக்குப் பிறகு 'வெளிச்சம்' வடக்குக்கு வந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் அதே போதில் நிலாந்தன் அவர்கள் படைத்தல் - படைப்பாளி ரசித்தல் - ரசனைத்தரம் இவைகள் பற்றி எழுதியிருந்த கருத்துக்கள் குறித்தும், அக்கருத்துக்கள் என்னுள் விளைவித்தவையுமான சில அபிப்பிராயங்கள், கருத்துக்கள் பற்றியும் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலில் அவரது கருத்துக்களோடு நான் மிகவும் உடன்படுகிறேன் என்பதைச்சொல்ல விரும்புகிறேன். ஆத்மார்த்தமான உள் உந்துதலோடு படைக்கப்படுகின்ற ஒரு ஆக்கம் படைப்பாளியின் மொழியாற்றல், உணர்வைத் தொற்றவைக்கும் திறன் என்பவற்றைப் பொறுத்துத் தனது தரத்தைத் தீர்மானித்துக் கொள்கிறது - இவ்விடயங்களில் ஓரளவு ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டாலும் கூட ஒரு நல்ல படைப்பில் இந்த அம்சங்கள் பொதுவாக அமைந்தே இருப்பதை அவதானிக்க முடியும்.

நிலாந்தன் சொல்வது போல படைத்தல் ஒரு சுய கண்டுபிடிப்புக்கான கிரியை தான் - தன்னுள் சுடர்கின்ற ஒரு உண்மையை ஒரு கலைப் படைப்பாக்கித் தரும் ஒரு படைப்பாளி தன் படைப்பினூடாகத் தன்னையே தருகிறான் என்பதே மெய் தன்னுள் உருவாகியதை அவன் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள விழையும் போது படைப்பு வெளி வருகிறது.

படைத்தலுக்கான உந்தல் போல ரசிப்பதற்கான உந்தலும் ஒருவரிடத்தில் ஏற்பட முடியும் - ரசிகன் என்ற நிலையில் ஒருவர் ஒரு படைப்பினுள் நுழையும் போது தன்னை - அல்லது தன் வாழ்வு சார்ந்த ஒரு கூறினை அந்த எழுத்தில் (படைப்பில்) அடையாளம் காண்கிறார் - அந்த படைப்பாளனதும் ரசிகனதும் அந்தராத்மாக்களின் அடையாளம் காணலே நிகழ்கிறது எனலாம்.

ஒருவருக்குள் உறைந்திருக்கும் உள்ளுணர்வு இன்னொருவரால் அடையாளம் காணப்படும் நிகழ்வானது ஒரு படைப்பினூடாகவும் ரசிப்பினூடாகவும் இலகுவாக இடம் பெற முடியும் - அந்தப்படைப்பு ஒரு ஓவியமாக, கவிதையாக, இசைவடிவமாக எதுவாகவேனும் இருக்க முடியும். ஒரு இசைக் கலைஞன் ஆத்மார்த்தமாக உள்ளுணர்ந்த ஒன்றை ஒரு இசைவடிவமாக்கும் போது அதனுடன் ஒன்றித்துப் போகும் ரசிகன் அந்தப்படைப்புத் தனது உச்சத்தைத் தொடும் கட்டத்தில் தன்னை இழந்து போகிறான்- படைப்பாளி தன் படைப்பினூடாகத் தொடும் ஒரு உன்னத சிகரத்தை ரசிகன் தனது ரசிப்பினூடாகச் செய்கிறான் - எனவே படைத்தலும் ரசித்தலும் தன்னைத்தானே அடையாளம் காணும் முயற்சிகளே என்பது மிகவும் உண்மையானது. இத்தகைய ஒரு சூட்சுமக்கிரியை இடம் பெறுவதனால்தான் கலை இலக்கியப் படைப்புக்களோ அல்லது வேறெந்தப் படைப்புகளோ ஆத்மசம்பந்தம் பெறுகின்றன.

மேற்சொன்ன எதனோடுமே சம்மந்தமுறாமல் வெறும் வியாபாரத்தை அல்லது கிளறும் அல்லது சீண்டிப் பார்க்கும் வேலையை நோக்கமாகக் கொண்டு வெளிவரும் எந்த ஆக்கத்தையும் படைப்பு எனக்கூறிக் கொள்ள முடியாது. அவை வரும் - வந்தவேகத்திலேயே காணாமலும் போகும் ஆனால் படைப்புக்கள் - வாழும்! - காலம் கடந்து வாழும்!! மனிதன் உள்ளவரை! மனிதம் உள்ளவரை!!

ரசனைத்தரம். மேம்பாடு பற்றியும் நிலாந்தன் கருத்துக் கூறியிருந்தார். நல்லதை- தரமானதை ரசிக்கும் தன்மையை ஊட்டும் முயற்சி பாடசாலை மொழிக்கல்வியூடாக ஆரம்பிக்கப்படலாம் என்று கருதுகிறேன். தமிழ் மொழியைக் கற்கும் மாணவர்களிடத்தில் ஆரம்பத்திலிருந்தே நல்ல விஷயங்களை அறிமுகம் செய்து அதிலுள்ள நல்ல அம்சங்களை- நயங்களை- உச்சங்களை அடையாளம் காட்டி- அவற்றில் ஒரு ரசனையை ஊட்டமுடியும்.

இந்தப் பணிக்கு நாம் எமது மொழி ஆசிரியர்களை மட்டும் நம்பியிருக்கலாமா? இந்த இடத்தில் மிகத்துக்கத்தோடு நான் சொல்ல விரும்புவது - எமது ஆசிரியர்களின் ரசனைத்தரம் எப்படியிருக்கிறது என்பது பற்றிய விசனம் தான். இன்றெல்லாம் ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியராக அல்லது ஒரு கலைப் பட்டதாரியாக இருந்தால் அவருக்குத் தமிழ் கற்பிக்கும் தரம் உண்டு என்ற கருத்தே எமது தமிழ்ப்பிரதேசங்களில் நிலவுகிறது - அந்தத் தகுதிகள் மட்டும் போதுமா? என்பது சிந்திக்கப்பட வேண்டிய விஷயம். வாசிப்பு பற்றி - தமிழ்பற்றி- இலக்கியம் பற்றி ரசனையோ பழக்கமோ இல்லாத ஆசிரியர்களிடத்தில் சிக்கிக்கொண்டு தமிழ் மொழியும் தமிழ் மாணவர்களும் தமிழ்மொழிப்பாடப் பெறுபேறுகளும் போன- போகின்ற போக்கைப் பார்த்தால் மிகவும் வேதனையாக இருக்கிறது.

ரசனைத் தேர்ச்சி பற்றி எழுத நேர்ந்ததில் மேற் சொன்ன விடயங்களை விபரிக்க நேர்ந்து விட்டது. மன்னிக்கவேண்டும்.

ந. சத்தியபாலன்

---

# மலரும் பொழுதுகளில் என் நினைவு

அவர்களின் கருமேனி தழுவும்
கரையோரத் தென்றலாய்
இறுதிவரை அவரைத் தாலாட்டும்
அலைகளாய்
அவர் விழிகளிலே பிரகாசிக்கும்
விடியலின் ஒளியாய்
அவர் மார்பிலே தவழும்
நஞ்சு மாலையாய்
அவர்கள் வேகமாய் செலுத்தும்
வெடிமருந்துப் படகாய்
இறுதியில் அவர் உடற்துகள் கலக்கும்
உப்புநீராய்
அவர் சேதி சொல்ல வந்து மண்டியிடும்
மடக்காய்
எந்நாளும் இருக்கவே
விரும்புகிறேன்.



மது



# எமக்கென்றொரு வீடு

எத்தின தடவை மேஞ்சாச்சு;
ஒழுக்கில்லாத இடம் ஒண்டுமேயில்லை.
தலைவாசலும் அப்படி.
தலைவைச்சு படுக்கிற இடமும் அப்பிடி.
நடு அறைக்குள்ள இன்னமும் கறையானும் புத்தும்.
அடி விறாந்தையிலதான் கொஞ்சம் ஆறுதல்.
அதுக்கும் பிரச்சனையாத்தானிருக்கு.
ஒழுக்கில்லாத இடம் ஒண்டுமில்லை.

காத்து, கச்சானாய் வந்து கலைச்சுது.
கொண்டலாய் வந்து கூரையைப் பிரிச்சுது.
சோழகம் எண்டும் வந்துது.
பந்தல் புரட்டி பனங்காயுறுட்டி விசாகமெண்டு
மாறி மாறிப் புரட்டி எடுத்து,
புயலெண்டும் வந்து ஒரு பக்கத்தைப்புடுங்கி
மாரி மழையாய் சில காலம்
பேயறைஞ்சு பேசி...
போன முறையுமொருக்காக் கூரையொழுகினது;
போட்டுத்தாறதெண்டு,
கூரைக்கு கோபுரம் வச்சவை.
அரசமர நிழலில நிண்டு கொண்டு
அனுதாபப் பட்ட மாதிரியழுது
இருந்த வீட்டுக்கும், எட்ட நின்று கல்லெறிஞ்சவை.
இருந்ததும் இல்லாமல்போய்
படுக்க நிக்க ஏலாம பதறி, பரிதவிச்சு
எத்தினதரம் மேயுறதும் பிரிக்கிறதும்,
பிரிக்கிறதும் மேயுறதும்.
உடைக்கிறதும் கட்டுறதும்
கட்டினதை உடைக்கிறதும்.
எங்கட வீட்டிலதானே நாங்கள் இருக்கிறம்,
ஏன் ஒண்டுக்கும் பிடிக்கேல்ல.

நிலையமே பிழையாம்?
பேயங்கள்
நாங்களெடுத்த நிலையமே?
பாட்டனும் பூட்டனும் எடுத்த நிலையம்.
நிலையம் சரி.
அதில மாற்றமில்லை.
பழைய வீடெண்டாலும்
உடைபட்டுப் போனதெண்டாலும்
இது எங்கட வீடு.

எத்தனையக் கண்டுட்டம் இதுக்குள்ள,
எத்தனை இழப்பு
எத்தனை இழவு, அலைவு.
அழுகையும் பற்கடிப்பும் அடுத்தடுத்து.
இனிமேலும் ஒழுக்குக்குள்ள இருக்கேலாது?
மேச்சல சரியா மேயோணும்.
கூரைக்கும் அழுக்கம் போடோணும்,
எந்தக் காத்தும் புடுங்காதமாதிரி.
உடம்பை வெறுத்து,
உயிரை வித்து
கல்லறுத்து சூளை வச்சிருக்கு.
களியோட இந்த முறை சுண்ணாம்பும் சேர்க்கோணும்,
கறையான் கூடு வராமல்.
தம்பியன்தான் எங்கட மேசன்;
கட்டுறதுக்கு பிளான் சொல்ல கனபேர் வருவினம்.
எங்களுக்கும் பிளானிருக்கு;
இருக்கப் போறது நாங்கள்?



◘ சந்திரன்

தூயவன்

# தெளிவு



இளம் பனைவடலிகளுக்கு இடையில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு பதுங்ககழிக்கு அருகில் அவன் படுத்திருக்கிறான். நேற்றைய எறிகணை வீச்சினால் சிதைந்து வேரோடு பிரட்டி விடப்பட்டிருக்கும் அச்சிறு பனைவடலியைப் பார்க்கும் போது ஆச்சரியமும் அச்சமும் கலந்த உணர்வு எட்டிப்பார்க்கவே செய்கின்றது. எவ்வளவு எறிகணை மற்றும் ஏனைய வெடிச்சத்தங்கள் கேட்டபோதும், சேதங்களை விளைவித்தபோதும் வேலை நேரத்தில் அதனைப் பெரிதுபடுத்தாத தன்மையும், பின்னர் நேரடி விளைவுகளைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்வும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதையிட்டு இவன் தன்னுள் பலமுறை வியந்துள்ளான். குடாரப்பு தரையிறக்கம் நடைபெற்று இன்றுடன் பதினைந்துநாட்கள் காலத்தினுள் கரைந்து விட்டது. தொடராக இன்று மதியம்வரை நடைபெற்ற மூர்க்கத்தனமான எதிரியின் உயர்வலு எறிகணைத் தாக்குதலினால் அச்சிறு பிரதேசம் சின்னா பின்னமாக சிதைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஊடறுப்புப் பிரதேசங்களைத் தக்கவைத்தால்தான் ஆனையிறவை வீழ்த்தலாம். அரசியல் இராணுவரீதியில் போராட்டத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்! எனத் தலைவர் முதல் தளபதிகள் வரை விளக்கியதனால் தோற்றம் பெற்ற, தாம் சாகத்துணிந்து, சாதிக்க வந்தவர்கள் எனும் கருத்துருவாக்கம் அவர்களை இயக்கிக் கொண்டிருக்கின்றது என்றால் மிகையாகாது. உயர்போர் அழுத்தம் நிறைந்த சூழலில் தான் ஒரு இராணுவ மருத்துவராக கடமையாற்றுவதும், அதனால் ஏனைய போராளிகளுடன் வழமைக்கு மேலாக ஏற்பட்ட நெருக்கமான உறவும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. எனினும் இதற்கு மேலாக எல்லைப்படை வீரர்கள் அப்பகுதியில் ஆற்றும் விபரணத்திற்கு அபபாற்பட்ட பணியும் இவர்களை உற்சாகம் கொள்ள வைத்துள்ளது. அத்துடன் ... மக்கள் புரட்சி வெடிக்கட்டும் எனும் திலீபண்ணாவின் கூற்று நிதர்சனமாவதும் ஒருவகை ஆத்ம திருப்தியைக் கொடுக்கின்றது.

மேற்படி எண்ணங்களால் சூழப்பட்டவன் எப்படியும் இன்டைக்கு அவருடன் கதைத்துவிட வேண்டும் எனதன்னுள்

எண்ணிக்கொள்கின்றான். இவர்களுடன் இணைந்ததில் இருந்து அவரை இவன் கவனித்த வண்ணமே வருகின்றான். தன்னிலை மீறி உறங்கினால் அன்றி அவர் ஓய்வெடுத்ததே இல்லையென்று சொல்லலாம். பதுங்ககழி வெட்டுதல், காயக்காரர்களை தூக்கி வருதல், தேவையான இடங்களுக்கு உடனடி விநியோகங்கள் செய்தல், காவலரண்களின் முன்னால் நாற்ற மெடுத்துக் கொண்டிருக்கும் பகைப் பிணங்களைப் புதைத்தல் என ஓடியோடி ஏதாவதொருவேலை செய்து கொண்டிருந்தார். இவன் நிலக்கீழறை அமைத்தல் போன்ற கடின வேலைகளைச் செய்ய முற்படும் போதெல்லாம் ''டொக்டர் தாங்கோ' நான்செய்யிறன் நீங்கள் ரெஸ்ற் எடுத்தால்தான் தட்டித்தவறி நான் காயப்பட்டாலும் வடிவாகக் கவனிப்பீர்கள்'' எனக் கூறியபடி இவனிடம் இருந்து மண்வெட்டியைப் பறிக்காத குறையாக வேண்டுவார். இவனும் எதுவுமே கூறாது புன்சிரிப் பொன்றுடன் அதனைக் கொடுத்து விடுவான்.

இன்னும் இருபத்தைந்து போராளிகளளவில் காயப்பட்ருந்தனர். அவர்களுக்கான அவசரசிகிச்சைகளை போராளி மருத்துவர்கள் செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது அவரும் கூடவேநின்று வாகனங்களில் இருந்து இறக்குதல், ஏற்றுகல் போன்ற இன்னோரின்ன உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். ஒருவாறு காயக்காரர்களை பின்னுக்கு அனுப்பிமுடிய இவர்கள் ஓய்வெடுக்கத் தொடங்குகின்றார்கள். அப்பொழுது ஏதோவொரு காவலரண்பகுதியில் ஆட்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என பகுதிப் பொறுப்பாளர் அறிவிக்க இவன் உடனேயே அப்பகுதிக்குச் சென்றுவிட்டான். ஆனால் அவர்கள் இன்று 'ரேண' மாறும் முறை. புதிய அணிகள் உள்ளெடுக்கப்பட இவர்கள் பின்னுக்கு அனுப்பப்படுவார்கள். அவரை அழைத்து வர இன்னொருவன் சென்றிருந்தான். இண்டைக்கு தவறவிட்டால் பிறகு சந்தர்ப்பம் கிடைக்காது இவன் யோசித்துக்கொண்டிருக்கும் போது அவரும் வேறு சிலரும் சில இலகு இயந்திரத்துப்பாக்கிகளைச் சுமந்தவண்ணம் வந்து கொண்டிருக்கிறார்கள். ''இதுகள் ஆமியின்ர பொடிகளோட கிடந்தது' எனக்கூறியவண்ணம் அருகில் கொண்டு வந்து போடுகிறார்கள். ஆயுதங்கள் வாங்க பொன் கொடுத்த மக்கள் இன்று அவற்றைத் தாங்களே அள்ளி வருகின்றார்கள். அப்பொழுது ஒருவன்வந்து சொல்கின்றான். ''டொக்டர் உங்களையும் மெயின் மெடிசினுக்கு வரட்டாம் பிறகு தேவையென்றால் அனுப்பிறதாம்' தனது நெற்றியைச் சுருக்கி ஏதோ கேட்க நினைத்தவன் ஏதுவும் கேட்காமல் எழும்புகின்றான்.

''அண்ணை! கேக்கிறன்என்று குறை நினைக்காதீங்கோ''' எனச்சற்று இழுந்தவன் அவரின் ஆமோதிப்பை எதிர்பார்க்காமலேயே தொடங்குகின்றான் ''நீங்கள் கலியாணம் செய்திட்டீங்களோ?''

''ஓம்

''பிள்ளையள்''

'மூன்றுவயதில் ஒருபெடியனும், ஒருவயதில் ஒருபிள்ளையும் இருக்கு''

A9 பாதையில் இருந்து இவர்கள் தொண்டமனாறு நீரேரிக்கரையை நோக்கி நடக்கின்றார்கள். எதிரியின் எறிகணை, விமான பீரங்கிக்குண்டு வீச்சுக்களினால் சிதைந்தும் எரிந்தும் காணப்படும் பற்றைகளும், ஊடறுப்புத்தொடரை உடைத்து இவர்களை முற்றுகையினுள் கையகப்படுத்தும் நோக்கத்துடன் பலமுறை முனைந்து மூக்குடை பட்டதால் சிதைந்து போய்க்கிடக்கும் பகைவன் கனரக வாகனங்களும், சற்றுத்தள்ளி ஆங்காங்கே புதைக்கப்படாமல் தவறவிடப்பட்டிருந்த அழுகிய பகைவனின் சடலங்களும் ஊதிப்பருத்து வெடித்து வான்நோக்கி கால்கள் நீட்டிக் காணப்படும் இறந்த கால்நடைகளினது உடல்களில் இருந்து வெளிவரும் நாற்றம் என எல்லாம் சேர்ந்து இன்னவென்று சொல்ல முடியாத சூழல் ஒன்றை பிரசவித்துள்ளன. இவர்கள் அவற்றைச் சாதாரணமாக பார்த்தவண்ணம், எதிரி எறிகணை குத்தும் சத்தங்கள் ஏதாவது கேக்கிறதா! எனக் காதுகளைத் தீட்டிய வண்ணம்

தமது சம்பாசணையை தொடர்ந்து கொண்டு செல்கின்றார்கள்.

''நீங்கள் எங்களோட நிக்கேக்க வீட்டுயோசனைகள் வராதோ''?

''வரத்தானே செய்யும்''

''அப்படியிருந்தும் எப்படி எங்களோட அதுவும் இப்படியான இடத்தில் வேலை செய்ய முடியுது''? இக் கேள்விக்குச் சற்றுயோசித்தவர்,

எப்படி வீட்டு யோசனைவாறது தவிர்க்க ஏலாதோ அப்படித்தான் நாங்கள் இன்னேரத்தில் பங்களிப்புச் செய்யிறதும் தவர்க்க முடியாததாகி விட்டது'' எனப் பதிலிறுக்கின்றார்.

''நீங்கள் என்ன சொல்லுறீங்கள்''?

''தம்பி......! இந்த உண்மை எங்கையும் பொருந்தும்''

''எந்த உண்மை?''

'சாகத்துணிந்தவனே வாழத்தகுதி யானவன்,, அதனை வன்னி நிலம் தெளிவாய் வெளிக்காட்டுது'' சொல்வது அவராக இருந்த போதிலும் போராளியான இவன் மனதில் இறக்கை முளைக்கின்றது.

இப்பொழுது தொண்டமனாறு நீரேரியை சிறுபடகு ஒன்றில் கடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் இரண்டு காயக்காரர்களும், வேறுசிலரும் பயணிக்கின்றார்கள். இடையிடையே கடல் மண் தட்டுப்பட இவர்கள் இறங்கி படகைத் தள்ளி மீண்டும் ஏறிச்செல்கின்றார்கள். ஏரியின் நடுவில் நின்று பார்க்கும் போது இரண்டு கரைகளிலும் காணப்படும் பலநூறு பனைமரங்களின் உச்சி வட்டுடன் அறுந்து விழுந்திருந்தது. ஏரியினுள் எறிகணை கிபிர்க்குண்டுகள் வீழ்ந்து வெடித்ததால் உருவான பாரிய பள்ளங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இவர்கள் கரையை வந்தடைந்து விட்டார்கள். அங்கு தயாராகநின்ற 'றக்ரர்' இல் காயக் காரர்களையும் ஏற்றி தாங்களும் ஏறிக்கொள்கின்றார்கள். இப்பொழுது ஓர் வெட்டைப் பகுதியை கடந்து கொண்டிருக்கிறார்கள். அப்பகுதிக்கே உரித்தான அந்த விபரீதம்

## உயிர் பெற்றார்கள்......



வர்க்கப் பரப்பளவுகளை
வானொலி அலைத் தேடலில்
கண்காணித் தொளிரும் புள்ளிகளை
இலக்கு வைத்துப் பீரங்கி வாய்கள்
கந்தகச் சிதறல்களால் அவைகளில்
தீ மூட்டிய போதும் அவர்கள் கலங்கவில்லை.

உணர்வுகள் சுமந்து புதிய வரவுகளிற்காய்
புகார்களை விலக்கி கண்கள் வலிக்க
பயணித்துத் திசையறிய நிலையில்
உணர்வின் உயிர்கள் மடிந்த போதும்
அவர்கள் தம்முள்ளே இறுகினார்களே தவிர
நிலை குலையவில்லை.

மீளவும் அவர்கள் உயிர் பெற்றார்கள்
உணர்வின் கரங்கள் சுமந்த கருவிகள்
கனவுகளை கதை பேச
அவர்களின் தாகங்களை மனதுள் பதித்தபடி
அலை முகடுகளில் கலங்கள் பாய்கின்றன.

அலையிசை

நடக்கின்றது. இவர்களுக்குச் சில நூறு மீற்றர்கள் முன்னால் வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகளும், அதனால் எழும்புகை மண்டலங்களும் இவர்களை நோக்கி விரைந்து வருகின்றது. கண்ணிமைக்கும் நேரத்தினில் நடக்கப்போவதை ஊகித்த அவர்கள் இருவரும் ஓடும் றக்றரில் இருந்து பாய்ந்து நிலத்தில் வீழ்ந்து படுக்கவும் ஒரு எறிகணை றக்றர் இஞ்சினில் வீழ்ந்து வெடிக்கவும், ஏனையவை இவர்களைத் தாண்டிச்சென்று விழவும் புகைமண்டலங்களால் இவர்கள் சூழப்படவும், என அனைத்தும் சில கணங்களினுள் நடந்தேறிவிட்டன. புகையடங்கியவுடன் எழுந்து பார்க்கிறார்கள். சாரதியும் இன்னொருவரும் இறந்திருந்தனர். றக்றர் பெட்டியில் இருந்த காயக்காரரும் மற்றும் சிலரும் சிறுகாயங்களுக்குட்பட்டிருந்தனர். உடனே காயமடைந்தவர்களுக்கான முதலுதவியை செய்கின்றனர். உரிய இடத்திற்கு நிலைமையை வோக்கியில்அறிவிக் கின்றனர். சிறிது நேரத்தில் இன்னொரு றக்றர் வர அனைவரும் அதில் ஏற அது சீறிப் பாய்கின்றது.

அவர்கள் கட்டைக்காட்டுப் பகுதியில் இயங்கிக்கொண்டிருந்த பிரதான மருத்துவநிலையை வந்தடைந்து விட்டார்கள். நொந்து வந்திருக்கும் அவர்களிடம் நிலைமையை விசாரிக்க தெரிந்த முகங்களுக்கு கூடநேரம் இருக்கவில்லை. அப்பகுதி வேகமாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. முகமாலைப் பகுதியில் காயமடைந்து கொண்டு வரப்பட்டிருந்த பல போராளிகளிற்கு அவசர சத்திரசிகிச்சை அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களின் சவரஞ்செய்யப்படாத முகமும், இரத்தச்சிவப்பேறிய கண்களும் அவர்களின் தொடர் வேலைப்பழுவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவர்களுடன் வந்திருந்த காயக்காரர்களிற்கும் உரிய சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இவர்கள் இருவரும் அங்கிருப்பவர்களிற்கு உதவிகள் செய்வதில் ஈடுபடுகின்றனர்.

அம்மருத்துவமனையில் இருந்து வன்னித்தள மருத்துவமனைக்கு காயக்காரர்களை அனுப்புவதற்கான ஒழுங்கு நடைபெறுகின்றது. அப்போது அங்குவந்த எல்லைப்படை வீரர்களிற்கு பொறுப்பான போராளி அவரையும் வன்னிக்குச் செல்லும்படி பணிக்கின்றார். சற்றுத் தயங்கிய அவ்வீரர் இன்னும் சிலநாட்கள் நிற்கப்போவதாக கூறுகின்றார். அந்நேரம் குறித்த பொறுப்பாளரிற்கு, முகமாலை பகுதியில் சண்டை நடப்பதாகவும் ஆட்கள் தேவைப்படுவதாகவும் அறிவித்தல் வருகின்றது. அவர் அம்மருத்துவ நிலையில் உதவிக்கு நின்ற வீரர்களை ஒழுங்கமைத்து உரிய இடத்திற்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபடுகின்றார். அப்பொழுது குறித்த எல்லைப்படை வீரரும் அவர்களுடன் இணைந்து கொள்கிறார்.

மூன்றாம்நாள் விரைந்து வந்து நின்ற வாகனத்தில் இருந்து சிலகாயக்காரர்கள் இறக்கப்படுகிறார்கள். அவசரமான மீள உயிர்ப்பு அளித்தல், உயிர்காத்தலுக்கான சிகிச்சைகள், என்பன செய்யப்படுகின்றன. அப்பொழுதுதான் அம்மருத்துவன் அவ் எல்லைப்படை வீரரையும் கவனிக்கின்றான். அவரிற்கு வலதுகால் முழங்காலிற்கு கீழாக சிதைந்துள்ளது. மயங்கியநிலையில் இருக்கும் அவரிடம் அனுமதிபெறாமலேயே அக்காலை வெட்டியகற்றுகின்றார்கள். சாதாரண மருத்துவமுறைப்படி நோயாளியின் அனுமதி இன்றி இவ்வாறு செய்ய முடியாதுதான், எனினும் வழமைபோல் போர்க்காலத்தில் மீறப்படும் மரபுகளினுள் இதுவும் அடங்குகின்றது பலபேருக்கு இவ்வாறு செய்திருந்த போதும் ஏனோ இவனுக்கு இது அதிகமான கவலையைக் கொடுக்கின்றது. அதேவேளை சிகிச்சை முடிந்து மயக்கமருந்தின் தாக்கத்தில் இருந்து முற்றாக விடுபடாத இவர்களுக்குப் பொறுப்பாகப் போன போராளி ''டேய் எல்லைப்படைக்காரரை பங்கருக்குள் படுக்கச் சொல்லுங்கடா ... காத்துப்படாட்டிலும் பரவாய் இல்லை...'' எனத்திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருப்பது ஏனைய ஈனக் குரல்களையும் தாண்டி வந்துகொண்டிருக்கின்றது.

சிலநாட்களாக இவனுக்கு அவ்எல்லைப்படை வீரரைப் பார்த்து ஆறுதல்சொல்ல வேண்டுமென்ற எண்ணம் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. காயக்காரர்களை ஏற்றிச் செல்லும் வாகனம் ஒன்றில் இவனும் வன்னித்தள மருத்துவமனைக்கு செல்கின்றான். அங்கு அவர் அருகில் இருந்து மெல்லதலையைக் கோதிவிடுகின்றான்; அவர் கேட்கின்றார் ''ஏன்தம்பி வந்தனீங்கள்'' இவன் அதற்கு எதுவும் சொல்லாது கேட்கின்றான்:

''நீங்கள் கால் போனதையிட்டுக் கவலைப்படவில்லையா?''

''எப்படித்தம்பி கவலைப்படாமல் இருக்க முடியும்?''

இவன் எதிர்பார்த்ததிற்கு மாறான பதில் கிடைத்ததால் உருவான கவலைச்சாயை முகத்தில் அப்பிக்கொள்கின்றது. அதனையும் அவதானித்தவர் தொடர்கின்றார்; 'தம்பி நீங்கள் கேள்விப்பட்டீங்களோ தெரியாது' என்றவர் அவனின் அனுமதி இன்றியே தான் அறிந்த சம்பவத்தை சொல்ல தொடங்குகின்றார்:

''இப்படித்தான் மட்டக்களப்பில் ஒரு கடைக்குக் கிட்ட எங்கட பெடியள் கண்ணிவெடி வைக்கப்போனவங்கள் - அந்தக் கடைக் காரரும் எங்கட தீவிர ஆதரவாளர். அப்ப இவையள் சொல்லி இருக்கினம் கடையைப் பூட்டிக்கொண்டு போகச் சொல்லி தாங்கள் அமத்தப் போறம் எண்டு. அதற்கு அவர் சொன்னாராம் தம்பிமாரே நான் கடையைப் பூட்டிப் போட்டுப்போனா வழமையாக வாறவங்களுக்கு சில வேளை சந்தேகம் வந்துவிடும், பிறகு தெரியும் தானே! அதால வழமை போலவே இருக்கிறன் நீங்கள் உங்கட வேலையைப் பாருங்கோ நடப்பதைப் பிறகு பார்ப்பம் என்று, அதற்கு எங்கடை ஆக்களும் ஓமென்று போட்டுப் போயிற்றினம்.

அண்டைக்கு என்று வந்த ஆமிக்காரங்களுக்கு என்ன நடந்ததோ தெரியாது. கடையில் வந்து நின்றவங்கள் அவரையும் தங்களுடன் வரும்படி கேட்டிருக்கிறாங்கள் இவரால் மறுக்க முடியவில்லை. மறுத்தால் அவங்களுக்குச் சந்தேகம் வந்துவிடுமோ என்றபயம். உடனே மனிசியிட்டை போச்சொன்னார், என்னை வரட்டாம் நான்போறன் சில வேளை நான் திரும்ப வராமல் போகலாம் பிள்ளையளை மட்டும் படிப்பிச்சுப்போடு என்று. அவவிற்கும் விசயம் தெரியாது எங்கடை ஆக்களுக்கும் இதுதெரியாது. அவங்களும் அமத்திப் போட்டாங்கள்'' என்று கூறியவர் சிறிது இடைவெளி விட்டு பெருமூச்சோடு தொடர்கின்றார். ''இவையோடு ஒப்பிடுகையில் நாங்கள் எந்த மூலைக்கு?'' என சொல்லியவாறு இவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கின்றார். இவனும் ஏதும் கூறாமலேயே அவரையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

நான் இந்த ஆளுக்கு ஆறுதலாக இருக்கும் என்று வந்தால் இந்த ஆள் எனக்கெல்லோ ஆறுதல் சொல்லுது என இவன் தன்னுள் எண்ணியிருக்க வேண்டும். இவனின் எண்ண ஓட்டத்தை அவரும் புரிந்திருக்க வேண்டும் அவர் கேட்கிறார்;
''தம்பி உங்கட இடத்தில் காயக்காரர் வாறது நிண்டுற்றுதா''

''இல்லை''

'அப்ப ஏன் வந்தனீங்கள்'

''உங்களைப் பார்த்தாத்தான் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கும் என்று தான்''

''எனக்கும் உண்மையில் நீங்கள் வந்தது சந்தோசமாக இருக்குத்தான், ஆனால்......''

''என்ன இழுக்குறீங்கள் சொல்லுங்கோ''

''இல்லைத் தம்பி கேக்கிறன் என்று குறை நினையாதையுங்கோ!''

''பரவாய் இல்லை சொல்லுங்கோ''

''நீங்கள்இங்க நிக்கேக்க அங்க காயக்காரர் தட்டித்தவறிக் கூட வந்தா உங்களிற்கு குற்ற உணர்வாக இருக்காதா'' அவரின் கேள்வி இவனைத் திடுக்கிட வைத்தது.

o



# மண்ணின் மணம்

பெருமாள் கணேசன்

இக்கிகீ...... இக்கிகீ.... ஆட்காட்டியின் அபய ஒலி கேட்டு சடாரென தலையை நிமிர்த்தினான் முனுசாமி, வியப்போடு. ''ம்...என்னா...? யாரையோ கண்டிரிச்சி போளுக்கு'' அவனது மனம் கூற மெதுவாக வலதுகாலை எடுத்து தொட்டாவாடிப் பற்றையை மிதித்து மண்வெட்டியை ஒரு கையில் ஊன்றி சற்றுக் தொலைவில் கறையான் அரித்தும் அரிக்காமலும் பாட்டில் கிடந்த பென்னாம் பெரிய தென்னங்குற்றியில் ஏறி, அந்த வளவுக்கு வரும் ஒழுங்கையை நோக்கினான்.

'ங்... ஒருத்திரியு காளோ ஆக்காட்டி...... கத்திச்சி!' ஓரம் கிழிந்தும், வெனநாளாய் தோய்க்காமலும் தன் தலையில் சுற்றியிருந்த துவாயால், முகத்தில் முத்து முத்தாக கொப்பளித்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு பாதையை மீண்டும் பார்த்தான் முனுசாமி. அவன் பார்க்குந் திசையில் பூவரசு செழித்து கன்னங்கரேலென்று அடர்த்தியாக வேலி நீட்டுக்கும் இருந்தது. மரத்தைப் பார்த்துக்கொண்டிருந்த முனுசாமி. நேரத்தை எண்ணினான். மதியம் பதினொருமணிக்குக் கிட்ட இருக்குமென அவனது மனஞ் சொல்ல, ஏறிநின்ற குற்றியில் அமர்ந்தான் அவன்.

லக்ஸ்ப்பிறேப்பையில் சுற்றிவைத்திருந்த வெற்றிலையை, கையை உள்ளே விட்டு எடுத்து விரித்தான். நடுவிலிருந்த சுண்ணாம்புக்களியை ஒரு வெற்றிலையின் பின்பக்கத்தில் தடவி, பையுள் இருந்த தூள்ப்பாக்கையும் கோலி வெற்றிலையில் வைத்து மடித்தான்.

கீக்கீ... கீக்கீ... ஆட்காட்டி மீண்டும் அலறியது,... வானளாவப் பறந்தவாறே. சிறிது நேரத்தில் 'டொக்.. டொக்' என்று அயல் பற்றைக்கு அப்பால் யாரோ பச்சைமரம் ஒன்றை கோடரியால் கொத்துவது அவனது காதில் விழுந்தது. முனுசாமி ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட்டுக் கொண்டான். அவன் நிற்பது இவனுக்கோ, இவன் நிற்பது அவனுக்கோ தெரியவில்லை. மரத்தை விட்டு நிலத்தில் காலை வைத்து மெதுவாக இறங்கி மீண்டும் மண்வெட்டியால் தொட்டாவாடிப் பற்றையை கொத்தினான். தொட்டாவாடி, நாயுண்ணி, சூரை, நாயுருவி அடர்ந்திருந்தது. ஒரு அடிக்கு அப்பால் எதுவுமே தெரியவில்லை.

முனுசாமிக்கு கிணற்றடிக்குச் செல்வதே இலக்காகவிருந்தது. ஒரு குறிப்பில் வேகமாக மண்வெட்டியைப் போட்டான். ''இன்னிக்கு எப்புடியு... கெனத்த கண்டுபிடிக்கிறது தான்'' நேற்றும் வேலை செய்து முந்தி வீடிருந்த பகுதியெல்லாம் துப்பரவு செய்துவிட்டான் இன்றும் வேலை செய்து கொண்டே இருக்கிறான். வயிறு புகைந்தது.

அந்தப் பகுதி எங்கும் ஆளரவமின்றி நிசப்தமாக இருந்தது. ஒரு நாயின் குரைப்போ, ஒரு மனிதனின் குரலோ அவனது காதில் இன்னமும் விழவில்லை. ''ஒரு அஞ்சி வருஷத்தில இம்புட்டுக் காடப்போச்சே'' அவனுக்கு ஒரே ஆச்சரியமாய்இருந்தது. அவனது மண்வெட்டி சளார் என ஒரு கல்லில் பட்டது. நெருப்புப்பொறிபறந்தது. ''ம்.. கெனத்துக்கு கிட்ட கெடந்த கல்லு தா...ன் கெனோ ஒரு பத்து பாகத்தில இருக்கு... அப்பாடா'' மனதுக்கு திருப்தியாக இருந்தது.

1980 ஆம் ஆண்டு கட்டிய கிணறு அது. அவன் தன்னையறியாமலேயே நிசப்தமாகி நின்று பேரனான். 1977ம் ஆண்டு இனக் கலவரத்தில் வந்தவன் முனுசாமி. நான்கு பிள்ளைகளின் தகப்பன். இரண்டு பெண பிள்ளை, இரண்டு ஆண் பிள்ளைகள். கடைசிப் பையன் கைக்குழந்தையாய் இருக்கும் போது உடுத்த உடுப்போடு வந்து சேர்ந்தவன் முனுசாமி. மனைவி மாரியாயி டாலூட்டும்தாய். ஈவிரக்கமற்ற அந்த இனக்கலவரம் அவர்களை காலியிலுள்ள நாகாவத்தையிலிருந்து இங்கு வரப் பண்ணியது.

நாகாவத்தை அவன் பிறந்த அழகான தோட்டம். தேயிலையும், றபரும் உண்டு. பனியோ மழையோ கடுமையாகத்தாக்காத அழகான மலை முகட்டைக் கொண்டபகுதி. அவன் அங்குள்ள மேட்டு லயத்திலுள்ள ஆறாவது காம்பறாவில் பிறந்தான். அது சிங்கள முதலாளிக்குச் சொந்தமானதாக இருந்தது. சின்னப் பையனாக அவனிருந்த போது லயத்துத் திண்ணையில் மாடாச்சாமியிடம் அரிவரிபடித்தவன் முனுசாமி. அவன் சிறுவனாக இருந்தபோது தோட்டத்துப் பிள்ளைகள் படிக்க வென்று ஒருசிறு பள்ளிக்கூடங் கூட இருக்கவில்லை.

தோட்டத்தில் கொஞ்சம் எழுத வாசிக்கக்கூடியவர்களைக்கொண்டு அங்கிருந்த சிறார்கள் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டார்கள்.

தான் குழந்தையாக இருந்த வேளை தனது தாய், தன்னை பிள்ளைமடுவத்தில் விட்டுச்சென்றது, சற்று வளர்ந்தபின் தன்னந்தனியே லயத்துப் பிள்ளைகளோடு விளையாடிக் காலங்கழித்ததையும் அவன் நினைத்தான்.

''ஐயோ... சங்கூதப்போராங்க எந்திரீங்க நா... வேலைக்கு போறங்கில்லியா... றொட்டி சுட்டு வைச்சிருக்கே... எடுத்துசாப்பிடுங்க...?''

ஒவ்வொரு தாயும் அதிகாலையில் இப்படித்தான் பதட்டப் படுவாள், லயத்தில்.

''சின்னாத்தா பாட்டியோட இருய்யா'' வறக்கட்டுக்கு போய் விழுந்திராத சாமி...'' சின்னாத்தாக்கிழவியோடு அவன் மட்டுமல்ல மற்றச் சிறார்களும் இருப்பார்கள்.

அவன்படிக்க பாடசாலை இல்லாது இளமைக்காலம் கருகி அழிந்தது. மதியம் ஒரு மணித்தியாலம் சாப்பிடவரும் பெற்றோரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் எல்லாக் குழந்தைகளும் குறுக்குப் பாதையை பார்த்திருப்பர் முனுசாமிக்குப் பத்துவயதாகியபோது தாயுடனும் தகப்பனுடனும் ''கொந்தரப்பு'' வெட்ட சின்னச் ''சொறண்டி''யுங்கொண்டு மலைக்குப் போவான்; அது அவனது தொழிலுக்கான முன்பயிற்சியாயமைந்தது.

முனுசாமிக்கு பத்தொன்பது வயதில் அத்தை மகளான மாரியாயியை கலியாணம் செய்து வைத்தார்கள். ''அகம்படியர்'' எனத் தம்மை கூறிக்கொண்ட அவனது பெற்றோர் மற்றய சாதிக்காரர்களை தீண்டத் தகாதவர்களாக வைத்திருந்தனர். முனுசாமியின்தந்தை சாதிகுறைஞ்ச சுக்குரன். உயர்சாதிப்பெண்ணான ஈசுவரியை கேலி பண்ணியதுக்காக அவனை வீடு பூந்து அடித்தவர். சாதி குறைந்தவர்களை திண்ணையில் வைத்துத்தான் கதைப்பார்கள்; சிரட்டையில் தேநீர் கொடுப்பாள் முனுசாமியின் தாய் என அவன் சொல்லுவதுண்டு.

என்றாலும் அந்த இனிமையான நாட்கள் நினைக்க, நினைக்க சுகமாக இருந்தது அவனுக்கு. கலியாணத்துக்கு முதல் ''தள்கஸ்வல'' தோட்டத்தில் இருந்த மாமன் மகள்... மாரியாயியைப்பார்க்க பின்னேர பஸ் எடுத்துப்போவான் போகும் போது பூாதோசி கிதுள்பெனி எலப்ப போன்ற சிங்களவர்களின்பலகாரங்களை வாங்கிக்

கொண்டுதான் போவான்: அவனின் வரவுக்கு காத்திருப்பாள் மாரியாயி. அவளும் ஞாயிற்றுக் கிழமை என்றால் விசேடமான சாப்பாடுகள் செய்து வைப்பாள். தாவணிப் பெண்ணாக இருந்த மாரியாயி தோட்டத்தில் வேலைக்குப் போவதில்லை. ஒரேயொரு பிள்ளை என்பதால் தகப்பன் கந்தையா அவளைச் செல்லமாக வைத்திருந்தார்.

''இன்னிக்கி நாயித்திக் கெலம, எப்புடியு மச்சா வருவாரு'' யெம்மோ... யெம்மா... வரிக்காங் ஒன்னு புடுங்குங்க கறிவெப்பம்'' தாயிடம் கூறுவாள்.

தனது வருங்கால கணவனை உபசரிக்க எப்போதும் விழிப்பாகவே இருப்பாள். பெற்றோரும் அவள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுப்பர்.

முனுசாமியின் இளமைக் காலம், அவனது கண்ணில் நிழலாடியது. ''ம் யாருக்குத்தான் இளமை கசக்கும். வறுமை எவ்வளவு தான் இருந்தாலும் பயங்கரமானதா இருந்தாலும் இளமை இனிமையானதுதான்.

கலியாணம் நடந்து மூத்தவன் ராஜேஸ் பிறந்த பிறகு முனுசாமியின் தகப்பன் மாயழகு பார்த்து வந்த கங்காணி வேலை முனுசாமிக்குக் கிடைத்தது. கொஞ்ச நாளில் மாயழகு செத்து விட்டார். அன்று அந்த மேட்டுலயம், பணியலயம், நடுலயம் எல்லாமே சோகத்தில் மூழ்கி விட்டது.

மாயழகு அந்தத் தோட்டத்தில் ஏறத்தாழ ஐம்பது வருடம் வாழ்ந்தவர். தோட்டத்து துரை ''சொவிசா'' வந்து அஞ்சலி செய்துவிட்டுப் போனார். அயலில் சிங்களக்கிராமத்து மக்கள் அங்கு நிறைந்து விட்டார்கள். சிலர் அழுதே விட்டார்கள்.

''கங்காணம, கங்காணம...'' என்று வானை முட்டும் அழுகை ஒலி அனைவரையும் ஆச்சரியப்படவே வைத்தது. நீண்ட காலம் அந்த ஊரில் வாழ்ந்த படியால் மாயழகு அழகாக சிங்களம் பேசுவார், சிங்களவர்களின் நல்லது கெட்டதுகளில் பங்கெடுப்பார். அதனால் உறவைவளர்த்து வைத்திருந்தார்.

பற்றைக்குள் இருந்த கட்டெறும்பு ஒன்று சுரீர் என கடித்துவிட முனுசாமி தன் நிலைக்கு வருகிறான். கண்களிரண்டும் கண்ணீர் ஒடிச்சிவந்திருந்தன. அவனால் தொடர்ந்தும் வேலை செய்ய முடியவில்லை. அருகே நின்ற வேம்பின் நிழல் மனதுக்கும், உடலுக்கும் இதமாக இருந்தது. அவன் வேப்பமரத்தடிக்குச் சென்று அமர்ந்து கொண்டு ''ரியுப்பில்'' வைத்திருந்த தண்ணீரை மள, மள வென்று பருகி - தனது துவாயை தரையில் விரித்துப் படுத்துக் கொண்டான்.

இதமாக காற்று வந்து அவனை வருடிச் செல்ல

# வெண்புறாவின் வருகை

**ஆத்மரிஷி**

வெண் புறாவே
மீண்டும் உன் வரவின்
இன்ப ஒலிகள் காதில் கேட்கிறது.
இருபுறத்தின் வேட்டொலிகளும்
மெல்லத் தணிந்து நிசப்தம் ஆகிவிட்டது.
வண்ண முழு நிலவை கடற்கரை மணலில்
இளம் உள்ளங்கள் இரசிக்கத் தொடங்கியுள்ளார்கள்;
மனித சஞ்சாரமற்று
உறங்கிப் போயிருந்த பல
தெருக்களில் அச்சத்துடன் சிலர் உலாவருகிறார்கள்.
இன்னும் பச்சை உடைகளும்
வீதித் தடைகளும் அகற்றப்படவில்லை.

குடிசைகளுள் உறங்கிக் கொண்டிருக்கும்
உயிருள்ள எலும்பு கூடுகளின்
கண்களில் சிறு பிரகாசம்;
உணவு வண்டிகள் பல வரும் என்ற
மகிழ்ச்சிப் பிரகாசம்.

பல வீதிகளுக்கு கூட சிறு கனவு;
தங்கள் மீது
இனியாவது, புழுதியடங்குமா? என்றுதான.
கடல் அலைகள் ஆனந்தத்தில் கூத்தாடுகின்றன
அம்பாப் பாடல்களின்
இன்னொலிகள் கேட்குமென்று.

முகில்களின் சந்தோசப் பிரகாசிப்பில்
பறவையினங்கள் ஆனந்தக் கூத்தாடுகின்றன.
காற்றினை அடைக்கும்
கொடூர ஒலியினை எழுப்பும்
போர்ப் பறவைகள் இனி
உலாவராது என்ற எதிர்பார்ப்பில்
எல்லா மகிழ்வும்
வெண்புறாவின் சுதந்திரப் பறப்பிலேயே உள்ளது.

வேப்பமரத்தின் இலைகள் காற்றுக்கு ஆடின. கண்களை மூடிக் கொண்டான் முனுசாமி.

லொக்கு மாத்தியா கடயில் இலயாப்பம் உண்டது, கொண்டகெவுங் உண்டது. வெரலிக்காய் மரத்தடியில் பொறுக்கிச் சுவைத்தது. ஒவ்வொரு ஞாயிறும் ''வந்துறம்பை''யில் சந்தைக்குப் போகும் போது மனைவியுடன் குதூகலமாகப் போய் அப்புகாமி கடையில் தேநீர் குடிக்கும் போது ''களு தொதல்'' உண்டது, எல்லாவற்றிலும் எருமைத்தயிர் முட்டிகளில் வேண்டி வருவது நினைக்க வாயூறிவிட்டது அவனுக்கு. மனைவியின் ஆசைக்காக திருமணம் முடித்த புதிதில் றம்புட்டான், எள்ளுப்பாகு இன்னும் பலவற்றை அவளுக்கு ஆகுதியாக்கியதென்றே அவன் எண்ணி மகிழ்ந்தான்.

நெல்லு விளைந்தவுடன் ஒரு ''உமலில்'' பச்சை அரிசி கொண்டு சிங்களப் பெண்கள் வயத்துக்கு வருவார்கள். அதை வேண்டுவது, அவர்களுக்கு அரிசி மடுவத்தில் வழங்கப்படும் மாசி, செமன்ரின், பம்பாய் வெங்காயம் என்பவற்றை கொடுப்பது. அவனது நினைவுகளைக் கவித்திருந்தது. கடைக் கண்களில் வழிந்தோடிய நீர் காய்ந்திருந்தது. ''ம் இனி அந்தக் காலம் வருமா... அந்த அழகான தோட்டக் காட்டில, அட்டை ஒரு புறம் கடித்து ரத்தத்தை உறிஞ்சிச்சி, பெரகு தொறமாரு குடிச்சாங்க. இருந்தாலும் எனக்கு அது சுகமாத்தான் இருக்கு இப்ப நெனைக்கயிலயும்'

அவன் நிதானமாகவே சிந்தித்தான்.

''மண்ணாசை பிடிச்ச சிங்களவே நம்ம தமிழ் சனத்த ஒப்பந்தம் ஒப்பந்தம், பெரசா உறுமன்னு ஏமாத்தி ஈந்தியாவுக்கு அனுப்பிட்டான் இல்லாட்டி எம்புட்டுச்சனோ இன்னிக்கி இருந்திருக்கும்... எலங்கேல''

''எங்கப்பா கட்டின மாரியம்மன் கோயில் அப்பா, கங்காணியாய் இருக்கயில வெள்ளில பூச நடக்கும். பொங்கச் சோறு தருவாரு பொன்னையா பூசாரி, அடிப்பட்டுச் சாப்பிடுவோ பொங்க சோறு. லயத்தில உள்ள பத்துக் காம் புறாவுக்கும், அப்பா பொங்க சோறு அனுப்புவாரு. எங்க வீட்டு பெரிய பசுமாட்டில பால் எடுத்து மேசை மேல பெரிய பேசனில வெச்சி அளந்து குடுப்பாரு.''

அவனது மூக்கு அடைத்தது. ஒருக்களித்துப்படுத்தான் மூனுசாமி, முதுகு சில்லென்று குளிர்ந்தது வியர்வையில். முனுசாமிக்கு இப்ப ஐம்மத்தி ஆறு வயதாகிவிட்டது. ஏறத்தாழ ஐம்பது வருடங்கள் முன் தொட்டு அங்கிருந்து புறப்படும் வரை, அவனது நினைவுத் திரையில் சஞ்சரித்தன. அவை சுகமாகவும் சுமையாகவும் மாறி மாறி அவனைத் திணற வைத்தது.

''இம்புட்டு வயது போயும் ஏந்தல நறைக்கல ஏங் அம்மா தந்த சாப்பாடு - அவங்கவூட்டு வளப்பு. தலயில நா அந்தக் காலத்தில சவுக்காரோ பூசுறதே இல்ல இப்பதா...ன். யாரு நமக்கு அரைச்சி குளிப்பாட்ட''? ஒரு துளிகண்ணீர் நிலத்தில் விழுந்து பட்டெனக் காய்ந்தது. தாயின் நினைவுகளால், நெஞ்சம் கனத்தது.

''ம். சரி போவட்டு எனக்கு மட்டுமா எளம ஒவ்வொருத்தனு எந்த நிமிஷமும் இளமையை தொலைச்சுக்கிட்டே தாங் இருக்கிறான் கடவுள் அப்புடி படைச்சிபுட்டான் என்னாத்தா இனிக்காணப் போறம்? நடக்கிறத பாப்போம். யேங் ஓடம்பிருந்த மாதிரி அப்ப...! இப்ப மெலிஞ்சிட்டே நாலு புள்ளகி தவப்பேல்லியா. அதுகளயும் அங்கொண்ணு இங்கொண்ணா வுட்டுப் புட்டே... ஆனா ஒரு புள்ளயூ வீனாப் போவல இதுவரைக்கும்.... ம்...ம்''

அவன் தனக்குள் ஆறுதலை வருவித்துக் கொண்டான். கிளிநொச்சிக்கு வந்து அகதியாய் அடைந்தபோது இங்கு இருந்த அரச அதிகாரிகள் அவர்களுக்கு இந்தக் காட்டைக் காட்டிவிட்டனர். ''கனகபுரம், வடக்கில் இருக்கு... பாதையைக் கடந்து தெற்குப் பக்கமா காடு அதில உங்களுக்கு காணி தாறதா இருக்கிறம்'' ஒரு அரச உத்தியோகத்தர் கூறியது மனதில் பளிச்சிட்டது. அதற்குப்பிறகு அவர் சொன்னபடி இந்தப்பகுதி தன்னைப்போன்ற பலருக்கும் காட்டப்பட்டதை அறிந்தான்.

முன்னூறு பேரளவில் உதயநகர் கிராமத்தில் காடுவெட்டிக் குடியேறியிருந்தனர் என்பது இப்போதும் ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு; ''இருபது வருஷத்தக் கடந்துகிட்டு இருக்கு இன்னிக்கி ஆனந்தபுரம், உதயநகர், கந்தன்குளம், கிருஷ்ணபுரம் அப்பாடா...'' என அவன் பெருமூச் சொன்றை வெளியேற்றினான். அயல்கிராமங்களை நினைத்து ''காடு வெட்டி, கட்டபுடுங்கி, காடு கொழுத்தி, பயிர்வச்சி வேலியடைச்சி, பாடு பட்டாங்க எங்களோட வந்தவுங்க''

''எல்லாம் தனக்கு தனக்குன்னு ஒரு கையகலம் நிலம் சொந்தமா வேணு முன்னு தானே! இந்த உலக உருண்டையில் தத்தமக்கு சொந்தமாக ஒரு அடி நிலம் தானும் அவர்களுக்கு அன்று இருக்கவில்லை அந்தத்தாகத்தை இந்த அகதிப் பயணம் ஈடேற்றியது.

முனுசாமிக்கு பிரவுடன் பண்ட் வந்த வேளை கிணறு

வெட்டி விடவேண்டுமென்று ஏழாயிரத்தையும் அதில் முடக்கினான்.

இம்புட்டு நாலும், கோழிப் பண்ணை செல்லத்துரை வீட்டு கெனத்துத் தண்ணி தான் குடிச்சம் ஆனா .. அவுங்க வெச்ச சட்ட திட்டங்கள் எங்களுக்கு சகிக்கமுடியல''

செல்லத்துரை சங்கக்கடை மனேச்சராக வேலை செய்கிறார். வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர், அதிகாலை வெறுங் குடத்தோடு போக ஏலாது வருடம் பிறந்த அன்று தண்ணி அள்ள ஏலாது மாலையானா தண்ணி அள்ள விடமாட்டா நல்லம்மா; அவரின் மனைவி. இந்த நிலையை மாற்ற முனுசாமி முடிவெடுத்தான்.

மனைவியின் நகைகள் அடைவு கடையில்தான் எனினும் மாரியாயி, கிணறு வெட்ட அவன் எடுத்த முடிவுக்கு மறுப்பு கூறவே இல்லை. நினைவுகள் நின்று போக, தனது மீசையை தடவி விட்டுக் கொண்டான் முனுசாமி. ஒரு கிழமையாக சவரம் செய்யாத அவனது தாடியை கைகள் வருடியது.

காணி துப்பரவு செய்ய வந்த முனுசாமிக்கு இந்த மூன்று நான்கு நாளாய் சாப்பாடு, தேனீர் நேரத்துக்கு கிடைக்கவில்லை.

முனுசாமி உயரமான மனிதன். மெல்லிய உடல் வாகு. தளர்வில்லாத நடை. கறுப்போ சிவப்போ அற்ற பொது நிறம். அழகான நீண்ட மூக்கு. கரிய கண்விழிகளும் அடர்ந்த புருவமும் படர்ந்த நெற்றியும். சொண்டு என்னேரமும் சிவந்திருக்க வெற்றிலை குதப்பிய வாயும் அவனை ஒரு அழகனாகவே காட்டியது.

வேலை செய்து செய்தே முறுக்கேறியிருந்த உடலும் கைகளும் தோள்களும் உருக்குப் போல உறுதியைக் காட்டின. தன் திருமேனியின் அழகை மாரியாயியிடம் காட்டி அவளை வெக்கப்பட வைப்பதும் முனுசாமிக்கு விருப்பமான செயல்.

''போங்க நீங்க... பெரிய பயிலுவாந்தா...ன்'' அவள் வெட்கத்துடன் குணட்டுவாள். பிள்ளைகள் இல்லாத நேரம் பார்த்து அவளது கன்னங்களில் ஒரு முத்தம் கொடுப்பான் முனுசாமி. அவனோடு அரை நூற்றாண்டுகள் வாழ்ந்து கொண்டிருந்தவள் என்பதால் அவன் நன்றி தெரிவிப்பதாய் அது. அவனது மூத்த மகன் ராஜேஸ் தகப்பன் முனுசாமியைப் போலவே தோற்றமுடையவன்.

''ம் இந்த கெனத்த வெட்டுற நேரோ... ஏம் பெஞ்சாதி எப்புடியெல்லா கஷ்ரப்பட்டிருப்பா ''லோங்கிஸ்'' போட்டுக்கிட்டு ஆம்பல மாரி கெனத்துள்ளுக்கு எறங்கி மங்கு .. பங்குன்னு வெட்டித் தருவா நானு...ங் குட்டி ராஜேஸ் பயலும்தான் மண்ண அள்ளிக் கொட்டி தண்ணீகண்டோ. அன்னிக்கு எங்க குடும்ப மட்டுமில்ல எல்லா அடுத்த காணி கார குடும்பங்களு சந்தோசப்பட்டிச்சி''

மாரியாயியின் மிடுக்கும் துணிச்சலும் அக்கிராமத்துக்கு ஒரு முன் மாதிரியாயமைந்தது. பலருக்கு அறிவுரை கூறி வழிப்படுத்தி இருக்கிறார்கள். வறுமை அவர்களை வாட்டிய காலம் அவனது கண்ணில் நிழலாடியது.

பழைய நினைவுகள் அவனை விட்டுப் போவதாகவே இல்லை. ''உதயநகரில முப்பது வீட்டுத் திட்டம்னு அரசாங்க முப்பது வீடு கட்டி சனத்துக்கு குடுத்த நேரம் அந்தக் காணிக்கு சொந்தக்காரங்களுக்கு கட்டித்தாறதச் சொல்லி அவுங்கள அப்புறப்படுத்தி வீடு கட்டுனதும் வேற தாவுட்டுக் கட்சிகாரங்களுக்கு

# கொய்யாமரம்

குலை குலையாய் காய்த்த மரம்
குருவிக்கும் அணிலுக்கும் கொடுத்தமரம்
தம்பி பவான் ஒரு பழம் பறிக்கவே
ஐயா அவனுக்கு அடிக்க
அன்று சிரித்த மரம்
இன்று எலும்புக்கூடாய் என்னை பார்க்கிறது.

விறகுக்காக நிற்பதாய்
நிற்குமிந்தக் கொய்யாவுக்கருகில்
செல்லமுடியாது.
தொட்டு வருடவோ
கிளை சுள்ளி முறிக்கவோ முடியாது
அருகில் மிதிவெடிகள்.

▣ கரவை தர்ஷிகா

எம் பி வீடுகள கொடுத்துட்டாரு காணியும் போச்சி, பாடுபட்டது வீணாபோச்சி. அப்ப ஆவுருட்டு ஆட்சி தானே''

''எம்பதாம் ஆண்டு திரிப்பியூம் அதேமாதிரி நாப்பது வீட்டு திட்டமுன்னு காணி பறிக்க பொறப்புட்டாரு. ஜனம் விடல ஜனோ எம்பிக்கி சாணி கரைச்சி அடிச்சி வெரட்டி விட்டிருச். இப்பதா எம்பத்திமூனுக்கு பெரவுதான் நிம்மதியா சொதந்திரமா இருக்கிறோம்''

''அகதீன்னு தென் எலங்கயில இருந்து வந்தவேல்லா நாடு கேட்டு போறாடுறான். இந்தப் போராட்ட யந்திரம் எங்கள உள்வாங்கீரிச்சி. அடைஞ்சி கெடந்த வீரத்த இந்தக்காலம் தட்டி விட்டிருக்கு அங்கிட்டு இருந்து வந்தாலும் இந்த மண் எங்களுக்கு வாழ்க்கய குடுத்திரிச்சி. மானோ மரியாதைக்காக வீரம் பொறந்திரிச்சி. இதுதான் எங்களுட்டு தாய் நிலமா மாரீருச்சி''

''மாரீரிச்சி'' என தன்னை அறியாமலே வாய் விட்டுக் கத்தினான் முனுசாமி. அவனது கரங்கள் முறுக்கேறின. கால்கள் பதறியது. தன் கரங்களின் வலிமையை அவன் உணர்ந்தான் அவனது மூக்கில் பிறந்த பெருமூச்சொன்று காற்றில் கரைந்தது.

குயிலின் இனிய கூவல் அந்த இடத்தைக் கவித்தது. அவனது காதுகளில் அக்குயில் ஓசை இனித்தது. சலனமற்ற நிர்மலமான ஒரு பொழுதாக அது அவனை உறைய வைத்தது. தொடர்ந்து முனுசாமி பற்றைகளை விறுவிறென துவம்சம் செய்தான்.

வானத்தில் பொமர் ஒன்று இரைந்தது. இவன் யாருடைய உயிரைக் குடிக்க போகிறானோ என்று கவலையோடு.

''மாரீத்தாயே யாரும் அகப்படக்கூடாது'' என்று தனக்குள் வேண்டிக் கொண்டான்.

ஊசியால் குத்தப்பட்டிருந்த செருப்பு அறுந்துவிட்டது. அதனைச் சரி செய்தான் முனுசாமி.

அந்த நேரம் கிளிநொச்சி ஒரு தனி மாவட்டமாய் இருக்கவில்லை. அப்போது திருநகர், ஜெயந்திநகர், கோழிப்பண்ணை என்பன இடைக்கிடை சனம் வசித்த குடியேற்றங்கள்.

உதயநகர்க் காட்டை இந்த அகதிகளுக்குக் கொடுக்கக் கூடாதென கொலனிக்காரர்களான பண்ணைவாசிகள் புறுபுறுத்தனர். எனினும் காடு வெட்டப்பட்டது.

''இங்கவா சிவராசா இப்ப அவங்களுக்கு காணி குடுக்கிறதால எங்களுக்கு நட்டமே இல்ல பாதுகாப்புத்தான்''

''எங்களுக்கெல்லே ரவுனுக்க காணியில்லாமல் போப்போகுது. ஒரு காலத்தில கரைச்சி, பட்டினமாகேக்கை... நாங்கள் இதுகளை விட ஏலுமே தருமு''?

''இஞ்சேர் சிவராசா விட இப்ப பண்ணைக்க, கொலனிகாணீக்க எத்தினை தென்னை நிக்கிதுசொல்லு?

''பத்துப்பிள்ளை நிக்குது''

''எத்தனை வெச்சநீ சொல்லு''

ஐம்பத்திஏழு வெச்சனான் நாப்பத்தேழு பிள்ளையை யானை அடிச்சிப்போட்டுது.

''ம் அதுக்குத்தான் இப்ப இவங்களுக்கு காணி குடுத்திட்டா எங்களுக்கு யானை, பண்டித் தொல்லை இராது. அதுமட்டுமல்ல எங்கட மிளகாத்தோட்டத்தில கூலிக்கும் ஆக்கள் கிடைக்கும்...இ...இ...இ...''

''பாத்தியா ஒருகல்லில இரண்டு மாங்கா''

அவர்கள் கோழிப்பண்ணைவாசிகள் கள்ளுத் தவறணையில் அவர்கள் மனம்விட்டுக் கதைத்ததைக் கேட்டுக் கொண்டிருந்ததாக வீரையா முனுச்சாமிக்குச் சொன்ன ஞாபகம்.

''சரி என்னாத்த கொறயப் போறம். இந்த தேகம் இருக்கு வரை எலங்க மண்ணுக்குன்ன ஆண்டவே எழுதிட்டான்''

முனுசாமி தான் அன்று அங்கலாய்த்ததை நினைத்துப் பார்த்தான். அன்று இவர்களை மாற்றானாகப் பார்த்த சேவியர், சண்முகம், கனகேந்திரம் ஆகியோரின் குடும்பங்கள் இன்று இந்த மண்ணில் இல்லை.

சிவராசாவின் குடும்பம் சிவராசாவை முதுமையில் தனியே விட்டுவிட்டு ஜேர்மனிக்குப் போனபின் சிவராசா தட்டத்தனியே வாழ்ந்து முடித்ததும்; அனாதையாகச் செத்ததும், முனுசாமியும் அயலவர்களும் மரணச்சடங்கை நடாத்திவைத்ததும் அவனது எண்ணத்தில் வந்து போயிற்று:

முனுசாமிக்குத் தன்னையறியாமலேயே உற்சாகம் பிறந்தது. வெயிலின் கொடுமையையும் பொருட்படுத்தாமல் மண்வெட்டியை பற்றைமீது மூர்க்கமாக பாச்சினான். கிணற்றுப் பற்றையை துப்பரவு செய்யாமல் இன்று சாப்பிடுவதில்லை என கங்கணங்கட்டிக் கொண்டு வெட்டி எறிந்தான் பற்றைகளை:

ஆனையிறவுப் போரில் மாவீரனான தன் மகனின் முகம் அவனுள் புகுந்து கண்கள் நிறைந்துவிட்டது. பற்றைகள் எங்கும் அவனது முகம். அவன்

பொதுசன நூ
யாழ்ப்பாணம்

# காலநீழ்ப்பில் அந்தகார இருட்டின் வெளிச்சங்கள்



அடிக்கடி.
அந்த வீடுகளின் ஒளியை
இருள்
தின்று கொண்டிருந்தது.
வானத்து நட்சத்திரங்கள்
வானரக்கனுக்கு பயந்து
ஒளிந்து கொண்டன,
பேயறைகிற
ஒவ்வொரு தினத்திலும்
ஒவ்வொரு வீட்டுச்
செடிகளும் கொடிகளும்
கருகி விடுகின்றன.
முற்றத்து மல்லிகைகள்
முகாரி இராகத்திற்கு
அபிநயத்துக் கொண்டிருந்தது.
பேயல் செபூலின்,
எவருமே சகிக்க மாட்டாத
எவருமே சமரசமில்லாத
கதறலினால்
ஒவ்வொரு வீட்டு வாசலிலும்
தத்தம் காவற் தெய்வங்களுக்கு
அழைப்பு விடும்.
விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு,
செபூலின்
சீடர்களுடைய
அழைப்பு வரும்.
இறைவனின் பாதாரவிந்தங்களுக்கு
சென்று விட்டதாக
பெயரளவில்
கண்ணீர்ப்பூக்கள் காணிக்கையாக்கப்படும்.
கனத்துப் போன
மனச் சுமைகளுடன்
வானரக்கன் பற்றிய
திகில் அதிகரித்துக்கொண்டேயிருந்தது.
இரவுகள்
சொல்லிப்போன செய்திகள்
நிஜத்தை விட
அலங்கோலமாகிப் போனது.
கால நீழ்ப்பு
அவர்களுக்கென்றானதாயிற்று.
செபூலின் கோட்டையின்
இஞ்சி இடுக்கெல்லாம்
மின்மினி பூச்சிகள்
புகுந்து கொண்டன.
எவருமே
ஊகிக்க முடியாத
அந்தக் கணத்தில்
அது நிகழ்ந்து முடிந்திருந்தது.
இநளை
அந்தகார இருட்டின் வெளிச்சங்கள்
விழுங்க ஆரம்பித்திருந்தன.
பூபாள ஒலி
உச்சஸ்தாயியில்
இசைத்துக் கொண்டிருந்தது.

யாத்திரீகன்

பேயல் செபூல் - பிசாசுகளின் தலைவன்

கால்பதித்து விளையாடிய காணி இதுவென்று மனம் அழுதது. வரிப்புலியுடையும், வாகனம் ஓட்டும் பாணியும் முனுசாமிக்கு குதூகலத்தைத் தந்தவேளை அவனது வீரமரணம் அவனை துயரக்கடலில் தள்ளிவிட்டது. ''அப்பா இந்தப் பூமி மனிதர்கள் எல்லோருக்கும் சொந்தம்' பகுதி பகுதியாக குத்தகைக்கு எடுத்துக் கொண்டு இனங்கள் அடிபடுகுது. தவிர்க்க முடியாதபடி எங்கட இயக்கமும் போரிடுகுது. இது சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் மீது பூசப்பட்ட போர்... உங்களை, நீங்கள் பிறந்த 'குளுகாகந்தை' தோட்டத்தில இருக்கவிடாமல் இங்கு வெறுங்கையோடு அனுப்பினதும், ஆதே சிங்கள இனவாதம் தான். அதால தான் அதுக்கு எதிரா போராட, இந்த மண்ணில தலை நிமிர்ந்து எங்கட சந்ததிவாழ, நான் போராடப் போனேன்''

கடைசியாக மகன் திலகன் வீட்டுக்கு வந்தபோது கூறியவை அவை. அது முனுசாமியின் காதில் றீங்காரமிட்டது.

இங்கு முனுசாமியின் குடும்பம் அகதியாக வந்தபோது மாரியாயி அயலவரிடம் கூலிக்குச் செல்ல, முனுசாமி, இந்தக் காணியை களனியாக்கினான்:

தென்னையும், வாழையும், பலாவும், பூமரங்களும் நாலு வருடத்தில் அவனுக்கு மகிழ் வளித்தன.

அது அரிவு வெட்டுக்காலம். மூன்றாம் வாய்க்கால் ராமநாதன் கமத்தில், கூலிக்கு உழைத்து மிகவும் கருகலில் தான் மாரியாயி வீட்டுக்கு வருவாள். அப்படி வந்த நாளில் ஒரு நாள் மாரியாயியை வெகு நேரமாகக் காணவில்லை என்று முனுசாமி அயலவரின் உதவியுடன் தேடிச் சென்ற போது. வழியில் அவளது பை சிதறிக் கிடந்தது. அதற்குள் குழந்தைக்கு ஒரு லெக்ரோஜன் மாப்பெட்டி, அரிசி, மரக்கறி என்பன கொட்டிக்கிடந்தன. அவளது சேலைத் தலைப்பு வீதியோரத்திற் கிழிந்து தொங்கியது அருகிலுள்ள பற்றைக்குள் அவள் கிடந்தாள், வாயில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. முனுசாமி கட்டியணைத்துக் கதறினான். வைத்தியசாலையில் அவள் பேச வில்லை. கைளால் தன் நான்கு பிள்ளைகள் என சைகைகாட்டினாள். அவளது கதை முடிந்தது. கைக்குழந்தைக்குப்பாலூட்ட ஓடோடி வந்த அவளை அலியன் யானை புகையிரத வீதிக்கருகில் வைத்து தாக்கி ஏறிந்து விட்டது.

அன்றிலிருந்து மிகக் கஷ்ரப் பட்டான் முனுசாமி. தன் செல்வங்கள் நான்கையும் அவன் நம்பிக்கையோடு வளர்த்தான். 1996 இல் இலங்கை இராணுவம் கிளிநொச்சி மீதான படையெடுப்பை மேற்கொண்டது. அன்று இடம் பெயர்ந்து அம்பலப் பெருமாள் குளத்தில் குடிலமைத்தான் முனுசாமி. மீள்குடியமர்வுக்காக தன்காணியைத் தூப்பரவு செய்ய இந்தக் கிழமை முனுசாமி, தன் பிள்ளைகளிடம் விடைபெற்று காணியில் வேலையை ஆரம்பித்திருந்தான்.

அவனையறியாமலே அவனுக்குள் ஒரு சம்பவம் உறுத்திக் கொண்டே இருந்தது. அந்த உறுத்தலைக்களைய முடியாது தத்தளித்தான் முனுசாமி. இத்தனை நினைவு விசிப்புக்குப் பின்னால் அது மறைந்து இருந்தது.

அவசரமாக இந்தக் காணியை ஏன் துப்பரவு செய்ய வந்தான் முனுசாமி.

''இந்த ஒரு ஏக்கர் நெலத்தயு டவுனமைக்க எடுத்திட போறாங்களே அன்னிக்கி கூட்டத்தில கதைச்சாங்க, ஒரு கையளவு நெலங்கூட இல்லாம நான் சாகப் போறேன் எம் புள்ளைங்களுக்கு ஏம்புட்டுன்னு என்னா இருக்கு''

அவனது மனச்சாட்சி ஓலமிட்டது. கண்கள் பனித்தன. அவனது மனம் களைத்துப் போனது. ஒரு கணம் நிமிர்ந்து தூரத்தில் தெரிந்த கோயிலை நோக்கினான், செடிகள் மண்டிக் கிடந்தது அந்தக் கோயில் மேடு.

''இல்ல இந்த நிலத்தை நான் விடவே ஏலாது எங்கிட்ட யாரும் பறிக்கவராதீங்க.. இது எம் பெண்சாதி பாடுபட்ட சொத்து. அவ வெட்டுன கெனம். அவ வெச்ச பெலா மரோ... அவ வெச்ச ஒரு தென்னையும் இல்லியே '' மண்வெட்டியை எறிந்தான். அருகில் நின்ற பாலை மரத்தைக் கட்டிப் பிடித்து அழுதான் முனுசாமி.

ஏதோ நினைவில் வர தலையை நிமிர்த்தினான் முனுசாமி. தன் இளைய மகன் இன்று வருவான் வீட்டுச் சாப்பாட்டோடு... அவன் நினைத்தான்.

முகம் வீங்கி இருந்தது... மூக்கு அடைத்திருந்தது. பசி வயிற்றைப் பிறாண்டியது, தாகம்.

''அப்பா... அப்போ...'' முனுசாமி காதுகளைக் கூர்மையாக்கினான், தன் மகன் தான் எனத் தீர்மானித்தான்.

''யாரு...கண்ணா ... கண்ணா வா'' என்ற குரலோடு ஒழுங்கையை எட்டிப்பார்க்க ஒரு அடி இரண்டு அடி எடுத்து பத்தை மீது வைத்தான்.

டூமீல்... பேரதிர்வோடு மிதிவெடியொன்று வெடித்தது...

ஐயோ— ஐ மகன்... கண்ணா... ஓடி... வா...

முனுசாமி இரத்த வெள்ளத்தில் கிடந்தான். o

# சுழல்கள்

வசந்தன்



அன்று எல்லாமே சற்று மாறுபாடாக இருந்தது. வாசலில் காவலுக்கு நின்ற சிப்பாய்களில் வழமையான விறைப்பு இல்லாமல் சாதுவான இலகுத்தன்மை இருந்தது.

ஆளைச் சோதிப்பவன் தலை அசைத்து அனுமதித்து விட்டு சுவரில் காலை முண்டு கொடுத்து நின்றான்.

சற்றுத் தயங்கி நின்ற செல்லப்பு சிரித்து சமாளித்து நடந்தார். சேணல் நாற்காலியில் சாதுவாக சாய்ந்திருந்தான். முகத்தில் வழமையான இறுக்கம் தளர்ந்து ஏதோவொரு மாறுதல் தென்பட்டது.

கிழவரை அமரும்படி கூறினான். தேனீருக்கு உத்தரவு கொடுத்து விட்டு சினேசபூர்வமாக புன்னகைத்தான்.

கிழவரிடமிருந்து வழமையான பயம் கலந்த, சமாளித்து வெற்றி கொள்ளும் சிரிப்பே எதிரொளியாக இருந்தது.

அது நடிப்பு என்பதை சேணல் அறிவான். அவன் கிழவரை நன்றாகவே எடை போட்டிருந்தான். அவரின் பணிவு, பௌவியம் எல்லாம் இராஜதந்திரமானது என்றும் அந்த, முதியவரின் நினைவெல்லாம் தன் மக்களின் நலனில் மட்டும்தான் எனபதையும் அவன் அறிவான். மற்றும்படி அந்தக் கிழவனின் எண்ணததில் வேறு எதுவுமே இல்லை என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்.

அவனுக்கும் இது விருப்பமான பணியல்ல. இத்தொழிலுக்கு விரும்பியும் அவன் வரவில்லை.

ஆனந்தா கல்லூரி மைதானத்தில் நிற்கும் போதெல்லாம் எதிரியின் பந்து வீச்சை எப்படி சிதறடிப்பதென்பதே அவன் கனவாக இருந்தது.

கிறிக்கட், கிறிக்கட், அதுவே அவனது நினைவு முழுவதும் நிரவி இருந்தது!

அவனைப் பொறுத்தவரை, அதுவொரு அருமையான விளையாட்டு. கவனத்தை ஒருமைப்படுத்தி, பந்தின் வேகம், திரும்பல் ஆகியவற்றை நுணுக அவதானித்து பந்தை அதன் போக்குக்கேற்ப திருப்பி அல்லது அடித்து ஓட்டங்களை குவிக்க வேண்டும். நினைப்பது மாதிரி இதொன்றும் இலகுவானதல்ல. கவனத்தில் சின்ன சிதறல் அல்லது ஓர் சிறு தவறு ஆள் அவுட்.

அவன் நல்லதொரு துடுப்பாட்ட வீரன். விளையாட்டு மைதானத்தைவிட்டு விலகி இவளவு நாட்களாகியும் அது கற்றுத்தந்த பாடங்களை அவன் மறப்பதில்லை.

ஆனால், வெற்றிகளையே எப்போதும் அவன் விரும்பினான், தோல்விகளை ஏற்க முடியாமல் தடுமாறினான்.

அது விளையாட்டு, இது யுத்தம், ஆனந்தா கல்லூரி மைதானம் போன்று இது சுகமானதல்ல. இங்கு வெற்றியையும் தோல்வியையும் தீர்மானிப்பது சிந்தப்படும் இரத்தம். ஆனால் அவனது பலவீனம் இங்கும் தொடர்ந்தது, தோல்விகள் அருகில் வரும்போது இப்போதும் அவன் தடுமாறினான்.

சேணல் கடவாய்ப் பல்லுக்குள் சாதுவாக சிரித்துக் கொண்டே 'நாங்கள நாளை போகிறோம்' என்றான் ஆங்கிலத்தில்.

கிழவர் தாக்குண்டார். மனதிற்குள் பரவசம் பற்றிப் படர்ந்தது. 'அப்போ, இனி விடுதலையா?' கேள்வி எழுந்து விஸ்வருபமாடியது அடுத்த நொடி அவரின் சிறு மகிழ்ச்சி சிதறியது.

''நாளை புது றெஜிமென்ட் இந்த பகுதியை பொறுப்பேற்கும், நாங்கள் உங்களை விட்டு விலகுகிறோம்'' என்றான் கேணல்.

கிழவர் எதுவும் பேசவில்லை. சிறு மௌனத்தின் பின்பு அவனே தொடர்ந்தான்.

நான் உங்களை..., உங்களை மட்டும் மதிக்கிறன், உங்களோட மனம் விட்டு பேச விரும்புறன். அதற்காகத்தான் வரச் சொன்னேன'' அவன் நிறுத்தினான்.

கிழவர் நிமிர்ந்திருந்தார். முதன் முதலாக இவன் பேச சந்தர்ப்பம் தருகிறான் ஏனென்று தெரியவில்லை. ஏதோ தெரிந்து கொள்ளவிரும்புகின்றான். நல்லது, இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாதுஎன்ற முடிவோடு ''சரி, பேசலாம்'' எனறார் கிழவர்.

''நீங்கள் ஏன் எங்களை புரிந்து கொள்கின்றீர்கள் இல்லை. உங்களை விடுவிக்கதானே நாங்கள் இவ்வளவு கஸ்ரப்படுறம்.''

கிழவர் அவனை நன்றாகப் பார்த்தார். அவன் இந்தமுறை பயன்படுத்திய 'நீங்கள்' என்ற வார்த்தை தன்னைக்குறிக்கவில்லை என்றும் அக்கேள்வி தன் இனத்தை நோக்கி கேட்கப்பட்ட கேள்வி என்பதையும் கிழவர் உணர்ந்து கொண்டார்.

''விடுவிப்பு என்று எதை நீங்கள்குறிப்பிடுகிறீர்கள், அதை யார் தீர்மானிக்க வேண்டும். என்னுடைய விடுதலை எது என்னுடைய சுதந்திரம் எது என்பதை நான் அல்லவா முடிவு செய்யவேண்டும்'' அவனது விழிகளிற்குள்ளால் அவனது உணர்வுகளின் மாறுபாடுகளை அனுமானித்துக் கொண்டே கிழவர் தொடர்ந்தார்.

''அதெல்லாம் இருக்கட்டும் எங்களை நீங்கள் யாரிடம் இருந்து விடுவிக்கப் போகிறீர்கள்'' கிழவர் கேணலின் முகத்தைவிட்டு விழிகளை அகற்றவில்லை. அவன் மௌனமாகவே இருந்தான்.

''இது நான் பிறந்து வளர்ந்த மண், இப்ப எனக்கு எழுபத்தைந்து வயது, நான் அறிய அப்ப இங்க ஒருத்தரும் ஆயுதங்களோட அலையேலை. இப்போ மட்டும் இப்பிடி ஏன்''

கேணல் கையை உயர்த்தி நிறுத்தினான்.

''இந்தச் சின்னத்தீவில இரண்டு நாடு...'' நிறுத்தி முகத்தைச் சுழித்தவன் கேட்டான்,

''தேவையா''

''ஆருமே கேட்கவில்லையே'' கேணலின் விரிந்த விழிகளைப் பார்த்துக் கொண்டே கிழவர் தொடர்ந்தார்.

''அந்த நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது.., உங்களால'' கடைசிச் சொல்லை சற்று அழுத்திச் சொல்லிவிட்டு குனிந்தவர் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே,

'இதில் வேதனை என்னவென்றால் இங்கு ரெண்டு நாடுகள் இருந்தது உங்களுக்கு நல்லாவே தெரியுமல்லவா'' என்றார்.

அவன் சாதுவாக சிரித்தான், 'அரசியல் வேண்டாம்' என்று தலையசைத்தான்.

அரசியலுக்காகவே காலம் காலமாக இங்குயுத்தம் யுத்தமே அரசியல்தான். இந்நாட்டின் அரசியல்தான் இவனுக்கு இந்த உடையை மாட்டி இங்கு வீசிவிட்டிருக்கிறது. இது இவனுக்கு தெரியாததல்ல. ஆனால், பேச்சை மாற்ற விரும்புகிறான் என்பதை உணர்ந்து கிழவர் நிறுத்தினார்.

அவன் தடுமாறி இருப்பது தெரிந்தது. குழம்பிய கண்கள் சிவந்திருந்தன.

ஊர்திரும்புதல்



# ஊற்றை நோக்கித் திரும்புகிறது ஆறு

நகரத்தை சூழ்ந்து மறைத்தது வனாந்தரத்தின் நிழல்,
நடந்து திரிந்த தெருக்களிலும குடியிருப்புகளிலும்
கற்றாழைகளும் கள்ளிச் செடிகளும் முளைக்கத் தொடங்கின.
வீட்டின் கதவுகள் அகாலத்தில் ஊரினுள் நுழைந்த
கொடிய விலங்குகளின் பற்களால் குதறப்பட்டன.
சலனமற்று பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கும்
நதியில் ஊற்றுக் கண்கள் வற்றத் தொடங்கும்.
வைகறையில் முகாரியில் பாடத் தொடங்கின குயில்களெலாம்.

வற்றத் தொடங்கிய நதியைப் பெயர்த்தெடுத்து.
பெரு நிலம் நோக்கி அழைத்துச் சென்றனர் தேவர்கள்.
புதிய நிலங்களையெல்லாம் வளப்படுத்தியது
நடந்து வந்த நதி.
தேவர்களின் வானம் கார்மேகங்களால் நிறைந்திருந்தது.
மின்னல்களின் ஒளியினால் சூரியன் நிறமிழந்திருந்தான்.
எப்போதும் வர்ஷித்துக் கொண்டிருந்தது வானம்.
புதிய அருவிகளும் சிற்றாறுகளும் பெரு நதியில் கலந்தன.
பெரு நதியோ புதிய கிளைகளை உற்பவித்தது.

நகரத்தை சூழ்ந்திருந்த வனாந்தரத்தின் நிழல் நிறமிழந்து
சுருங்கத் தொடங்கி விட்டது; ஆனாலும்
கற்றாழைகளும் கள்ளிச் செடிகளும் அப்படியே இருந்தன.
நகங்களை மறைத்துக் கொண்ட கொடிய விலங்குகள்
மழலைகளைப் போல் வேஷமிட்டு சிரிக்கின்றன.
எப்போதும் போல வர்ஷித்துக் கொண்டே இருக்கிறது வானம்.

மீண்டும் ஊற்றுக் கண்களை நோக்கி
பெருக்கெடுத்து திரும்பத் தொடங்கி விட்டது நதி.
மனது நசிய நதிக்கரையோரம் குந்தியிருக்கிறேன் நான்;

ப்ரியா ஜெயக்குமார்

''நான் உங்களிடம் தோத்துவிட்டேன்'' என்று சொல்லி மௌனமானான். திடீரென, மேசை லாச்சியை திறந்து கோப்பொன்றை எடுத்து மேசையில் போட்டான்.

''உங்களுக்கு விருப்பமென்டா இதை திறந்து பாருங்கோ...'' சிறிது நேரம் அக்கோப்பையே பார்த்தவன் உணர்ச்சி வசப்பட்டவனாக நிமிர்ந்தான்.

''ரெண்டு வருசம்... ரெண்டு வருசம், இதற்குள்ள நான் முப்பது சோல்டியேசை இழந்திருக்கிறன், முப்பது... சண்டை இல்லாமல், எந்த வெடிச்சத்தமும் கேட்காமல் முப்பதுபேர்..., இங்கு நாங்கள் ஆரோட சண்டை பிடிச்சம், என்னத்தோட சண்டை பிடிச்சம், நிலவு, நிழல், இருள், சத்தம், சரசரப்பு எல்லாத்துக்கும் சுட்டம், எல்லாவற்றோடும் சண்டை பிடிச்சம்... இந்த பைலை பாருங்கோ தவறுதலான சூட்டில் மட்டும் ஐந்துபேர் '' அந்தக் கோப்பை விரித்து மேசையில் வீசினான்.

கிழவரில் சலனமில்லை. இவன் தன் இராணுவ விடயங்களை ஏன் தன்னுடன் பகிர்ந்து கொள்கிறான் என்பதுதான் அவருக்குப் புரியவில்லை. ஆனால், மனதால் நன்றாக தாக்கப்பட்டு விட்டான் என்றுமட்டும் புரிந்தது.

''நீங்க ஒவொருவரும் எங்களை வெறுக்கிறீங்க. குடிக்கிறதற்கு தண்ணி தரேக்கைகூட ஏதோவொருவிருப்பமின்மையை சிரித்துக்கொண்டே வெளிப்படுத்துறீங்கள்...உங்கட சின்னதுகளுக்கு கூட இதை கற்றுத் தந்திருக்கிறீங்க... ஓர் அன்னியத்தன்மை, விலகி ஒதுங்கும் இயல்பு... இதுகளால என்ர ஒவ்வொரு படைவீரனும் பாதிக்கப் பட்டிருக்கிறான் தெரியுமா?' எறிந்த கோப்பை திரும்பவும் கையில் எடுத்து தாள்களைத் தட்டினான்.

''மனநிலை சீரில்லா படைவீரர்களை வைத்துக்கொண்டு யார்தான் என்ன செய்ய முடியும்..? மூளை குழம்பிப்போன ஒருவனால என்னுடைய மூன்று பையன்கள்.. அவனோடுசேர்ந்து நாலுபேர்...'' சொல்லி விட்டு கோப்பை திரும்பவும் மேசையில் வீசினான்.

அவனுடைய தேகம் படபடத்தது, கண்கள் மேலும் சிவந்து கலங்கிப் போயிருந்தன. முகமும் தேகமும் வியர்த்திருந்தது. அவன் தன்நிலை இழந்திருந்தான்.

''என்னைப் பொறுத்தவரை உங்கள் ஒவ்வொருவரையும் தேடி தேடி ஓட ஓட விரட்டிச் சுட வேண்டும் என்பதே விருப்பம்''

இறுதியாக அவன் தன்னை வெளிக்காட்டினான். இங்கு கூத்தாடும் பேரினவாதப்பேயின் சின்னங்களில் அவனும் ஒருவன்.

சாதாரண மனிதனாக அவன் மாற விரும்பினாலும் அவனால் முடியாது. ஏனெனில் அது அவனுக்குள் விதைக்கப்பட்டு விட்டது. அப்படியே இவன் மாறினாலும் ஆகப்போவது எதுவுமே இல்லை. இவன் கருவி; இயக்குபவனை விடுத்து கோடரியை கோவிப்பதில் அர்த்தமில்லை. இவனது மூலம் வேறு. அது திடமானது, கல்லுப்போன்ற உறுதியானது, உணர்வோ உணர்ச்சியோ அற்றது.

இவன் இவனது படைவீரர்களோடு போகலாம், வேறொருவன் அவனது ஆட்களோடு வரலாம். இதனால் மாறுதல்கள் எதுவும் நிகழப்போவதில்லை; மாறுதல்கள் தானாக நிகழ்வதுமில்லை. மாறும்; மாறாதது என்று எதுவுமில்லை.

கிழவர் வெளியில் வந்தார். நெஞ்சிற்குள் ஏதோ இலகுவாக இருந்தது. தன்னையுமறியாமல் நெஞ்சு நிமிர்ந்திருந்தார். கர்வம் தலைக்கேறி இருந்தது.

இந்த இரண்டு வருடமாக தன்னுடைய சனம் மௌனமாகவே ஒரு பெரும் போராட்டத்தை நடத்தி இருக்கின்றது, அதுவும் இந்த கர்வம்பிடித்த கேணலே ஒப்புக்கொள்ளுமளவிற்கு நடந்திருக்கின்றது என்பதை நினைக்க அவருக்கு பெருமையாகவும் இருந்தது.

வாசலில் காவலர்கள் சாதுவான சிரிப்புடன் போகச் சொல்லினர். அருகில் அந்த வால் மடங்கிய வெறி நாய் நின்றது; வாயில் மாலையாக வீணீர்வடிந்தது.

திகைத்து நின்றார். அதன் வாயிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. நெஞ்சு திக்கென்றது. கண்களை திரும்பத் திரும்ப வெட்டிப்பார்த்தார். வெள்ளையாகவும் சிலநேரங்களில் சிவப்பாகவும் மாறி மாறி அதுகோலம் காட்டியது. அது வீணீராகத் தான் இருக்கவேண்டும். திடமான முடிவுக்கு அவரால் வரமுடியவில்லை.

அவர்கள் போகும்போது இதனை கூட்டிச் செல்ல மாட்டார்கள் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

இதற்கு இந்த மண்தான் நிரந்தரம். அடுத்த பெரும் மழைக்கு எங்காவது வீதியில் செத்துக்கிடக்கும்.

கிழவர் தன்னையுமறியாமல் வானத்தைப் பார்த்தார். மழை வருவதற்கான குணம்குறி இல்லை.

வெறி நாயை மீண்டும் பார்த்தார். அதற்கு ஆயுள் சில நாட்கள் கூடவாக இருக்கலாம் என நினைத்தபடி நடந்தார். O

# அப்பப்பா சொன்ன அக்காக்கள்

ஆதித்தநிலா

சுரிய சுருள் முடி. ஊடுருவும் துருதுரு கண்கள்; பார்த்துக் கொண்டே இருக்கக்கூடிய மொனலிசா ஓவியம் போல அவள். படு சுட்டியாய் இருப்பாள் போல. நான்கு வயதிற்கு மேல் மதிப்பிடவே முடியாது.

வாணி மதியம் 12.00 மணியிலிருந்து 4.00 மணிவரைசிறப்புப் பேருந்துக்காய் காத்திருந்தாள். தலை ஏனோ வலித்துக் கொண்டிருந்தது.

சிறிய கடை. சாப்பாட்டுக் கடையா...? எண்ணெய்க் கடையா...? எல்லாம் தான்.

கடையின் அருகில் கற்பக தருவாய் கிளை விரித்து நிழல் தந்துகொண்டிருந்தது பாலை மரம்- வாணி அதன் கீழ்தான் நின்றுகொண்டிருந்தாள். பஸ்சை அவதானிக்க அதுதான் சரியான இடமாயிருந்தது. அவதானிப்புத் தவறின் காற்றின் இரைச்சலில் பஸ் வரும் சத்தம் அமிழ்ந்துபோக தவறவிட்டுவிட வேண்டிவரும்.

''பிள்ளை நானும் பார்க்கிறன் எவ்வளவு நேரமாய் நிக்கிறாய், இதைப் போட்டிட்டு இரன''

''மெத்தப் பெரிய உபகாரமம்மா...'' அவர் தான் அந்தச் சிறிய பலசரக்கு கடையின் சொந்தக்காரியாய் இருக்க வேணும்.

''பிள்ளை ரீ குடிக்கிறியே...'' அவரது கரிசனையான வார்த்தைகள் அவளைத் தொட்டன. ஆனாலும் அவள் காத்துக் கொண்டிருந்த அவ்வளவு நேரத்திலும் விற்பனை எதுவும் நடைபெறாததும் நினைவில் பளிச்சிட்டது.


''குறை நினைக்காதையுங்கோ அம்மா... பஸ் இப்ப வந்திடும்...'' அவர் சரியாய் புரிந்து கொண்டிருப்பார்.

'நானும் தான் பார்க்கிறன் பிள்ளை எத்தினை பஸ் போகுது வருகுது உதில ஒண்டில ஏறன். எங்களுக்காகத்தானே கிடந்து உலயிறியள்.''

''இண்டைக்கு எங்களுக்கு பஸ் இருக்கம்மா. எங்களுக்கு பஸ் இருக்கிற நாளில சிலர் ஏத்தமாட்டினம்.''

''போராளிகளுக்கு எண்டு போற சிறப்பு பஸ்சைத்தானே சொல்லுறாய். அது சில நேரம் வரும், வராது, சரியான நேரத்திற்கும் வராது... உதில ஒண்டில் ஏறுபிள்ளை''

அவரின் புரிதலை எல்லோரிடமும் எதிர்பார்க்க முடியாது சிறப்பு இருக்குத்தானே சினந்து கொள்பவர்களை அவள் எதிர்கொண்டிருக்கிறாள். மறிக்காமலேயே மலர்ந்த முகத்தோடு இல்லாவிடினும் ஏற்றிக் கொண்டு செல்பவர்களையும் கண்டிருக்கிறாள், எது எப்படியிருப்பினும் அவள் சிறப்பு இருக்கிற நாட்களில மற்றைய வாகனங்களைத் தவிர்த்துக் கொண்டுதான் வந்திருக்கிறாள்.



ஆனால்... இன்று, சிறப்புவருவதற்கான சாத்தியமே இல்லைப் போல் இருந்தது. A9 பாதை திறப்போட போக்குவரத்து அதிகம்தான். நிறைந்து பிதுங்கிப் போகும் வாகனங்களை அவள்

மறிக்கவே இல்லை. எனியும் சிறப்பு வரும் என்ற சாத்தியம் இல்லையென்ற நிலையில் அவள் அந்த வாகனத்தை மறித்தாள். நெரிசல் குறைவாய் இருந்தது. பளையிலிருந்து புறப்பட்டிருக்க வேணும். ''இரண்டு பேர் ஏறுங்கோ' என்ட நிபந்தனைக்கு அவளும் அந்த வாகனத்தில் ஏறிக்கொண்டாள்.

''வழமையான முணு முணுப்புக்கள், இறப்பு இருக்குத்தானே என்ற கேள்விகள் அதிலிருக்க வில்லை. தலைவலியுடன் ஏறியவளுக்கு தலைவலி பறந்து போனது.

அவளுக்கேனோ காரில்லையென்று சித்தப்பாவின் திருமணத்திற்குப் போகாதிருந்தது, கார் வந்த பின்னர்தான் போனதெல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

அவள் காலத்தின் கட்டளையை ஏற்று தேசத்தின் விடுதலைப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாள். போராட்ட வாழ்வில் இணைவதற்கு முன்னரான அவர்களது குடும்ப வாழ்வில் பஸ்பயணம் செய்ததாய் நினைவிலில்லை அவளது சொந்த வாகனத்திலேயே சென்றிருக்கிறாள். கறாரான வார்த்தைப் பிரயோகங்களை அவள் அறியாதிருந்தாள். அவர்களது வாழ்வு அத்தகையது.

இன்று அவள் மக்களுக்காய்... அன்றைய அந்நாளிலிருந்து அவள் எல்லாவற்றுக்குமே பழக்கப்பட்டுப்போனவள் அனிச்சையாய் சுருங்கி விடுபவள் அல்ல எல்லாம் மக்களுக்காகத்தான்.

தலைவலியுடன் ஏறியவளுக்கு தலைவலி பறந்து போக அவளது உணர்தல் அல்ல காரணம். தேசத்திற்காய் தேய்ந்துபோவதில் அவள் நிறைவைக் கண்டு பழக்கப்பட்டுப் போனவள்

வலி நிவாரணி 4 வயதுகளே மதிப்பிடக்கூடிய கீர்த்துக் குட்டிதான். அல்லிராணியாய். அவன் இருக்கையிலிருந்தாள். ''அக்கா பிள்ளைய மடியில வச்சிருக்கிறன் என்ன? மறுப்பின்றி உரிமையோடு ஒட்டிக் கொண்டான், தீர்க்கமாய் பார்த்தாள்.

''ஏன் நீங்கள் சேட் போட்டிருக்கிறியள்?''

''நீங்களும் போட்டிருக்கிறியள் தானே?''

''நான் பஞ்சாபி எல்லோ போட்டிருக்கிறன்?''

''எனக்கு சேட் விருப்பம்''

''சிந்தனை வசப்பட்டவளாய் அப்ப ஏன் தோடு போடேல்ல?,,

''அம்மா வேண்டித் ''தரேல்ல...''

''அப்ப என்ரய தரட்டே? அவள் கழற்ற முயற்சித்தாள்.

''இல்லையம்மா அக்கா சும்மா சொன்னனான் எனக்கு விருப்பமில்லை'' சமாதானம் அடைந்தவளாய் தெரியவில்லை.

ஏன் தலையை இப்படிக் கட்டியிருக்கிறியள்?''

''எனக்கு விருப்பம்''

அவள் தன் தலையை தடவிப் பார்த்தாள். நீட்டாய் வளர்க்க வேணும் அவளே சொல்லிக் கொண்டாள்.

''அங்க பாருங்கோ அந்த மரத்தை! அவள் சுட்டிய இடத்தில உயர்ந்த மரம்.

''என்னமாய் ஒட்டகம் போல வளர்ந்திருக்கு.'' அவனது ஒப்புநோக்கு... அசரவைத்தது.

''ஒட்டகம் கண்டிருக்கிறியளோ கீர்த்து?''

ஓம் ரீவியில பார்த்திருக்கிறன்'' என்றவன்

''கங்காரு தெரியுமோ?'' அவனே தான் கேட்டான்.

''இல்லை, தெரியாது- நானும் ரீவியில பார்த்திருக்கிறன் கீர்த்து.''

'மான் வன்னியில இருக்கா'?

''இருக்கு''

''யானை இருக்கா?''

''இருக்கு''

''ஒண்டும் செய்யாதா?''

''குழப்படிக்குப் போனால் செய்யும்'' வாணி தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டாள் 'தன் சுதந்திரத்திற்கு இடையூறு வந்தால் பூனை கூட புலியாகும்.''

அடுத்தடுத்துத் தாமதமின்றி கேள்விகளால் துளைத்தவன், எது பற்றியோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான் அவனின் கூர்மதி, ஒப்புநோக்கு, தாமதமின்றிய கேள்விகள், நின்று நிதானிக்கும் சிந்தனை ஆற்றல் வாணிக்கு ஆச்சரியமாய் இருந்தன.

''கீர்த்து, அப்பப்பா சொன்ன அக்காக்கள், இவையள் தான்'' அவளது அப்பம்மாதான் அவளுக்குச் சொன்னார்.

அப்பம்மாவுடன் தான் அவள் வந்திருந்தாள். அறியாதவர்களாயிற்றே என்ற தயக்கமின்றி இலாவகமாய் சாய்ந்து நெஞ்சோடு ஒட்டிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தவனை வாணியின் கேள்விகளைத்திருக்க வேணும். நிமிர்ந்து திரும்பி கூர்ந்து பார்த்தாள்.

''கீர்த்து என்ன சொன்னவர் அப்பப்பா?''

''அப்பப்பா இல்லை அம்மா சொன்னவா.''

''என்ன சொன்னவா?''

''நானும் அக்காக்களை மாதிரித்தான் வருவன்'' என்று

அவள் அப்பம்மாதான் விபரம் கூறினார்.

''இவளின்ரை அப்பப்பா வீடு பார்க்கப் போனவர் பிள்ளை... இன்டும்தான் இல்லை'' என்ன... ஏது... நடந்தது... எதுவும் தெரியாது. ம்... அவரது ஏக்கப் பெருமூச்சு, கலங்கிய கண்கள் வாணியைச் சுட்டது.

நீடித்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு அவரே தொடர்ந்தார்.

''இவள் அப்ப பிறக்கவேயில்லைப் பிள்ளை... முடிஞ்சவரைக்கும் ஒன்றையும்விடேல்லை. காணாமல் போனவர் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் .. அது இது என்று அலைஞ்சம். எங்களால முடிஞ்சது அவ்வளவுதான்''

''ம்... அப்பத்தான் இவள் பிறந்ததும். இவளும் பிறந்திருக்காட்டி நான் எப்பயோ பைத்தியமாய்ப் போயிருப்பன்''

கீர்த்துவின் கூர்நோக்கை வாணி அவதானித்துக் கொண்டுதானிருந்தாள். அவளது கவனம் யாவும் அவள் அப்பம்மாவின் கதையைக் கிரகித்துக் கொண்டிருப்பதில் தெளிவாய்ப்புரிந்தது.

''அந்தாளின்ர படத்தைக் காட்டித்தான் இந்தச் சுட்டிக்கு சாப்பாடு தீர்த்துவன் அதில ஒரு நிறைவு. எனக்கு ஒரே மகன் தான் பிள்ளை. பேரப்பிள்ளையைப் பாக்கவேணும் எண்டு எவ்வளவு ஆவலோட இருந்த மனுசன். இது படு சுட்டி பிள்ளை இது கேக்கிற கேள்வியள்... எனக்குப் பயமா இருக்கும். இதுகின்ர வயதுக்கு இதென்ன கேள்வியள்... ஊரே போட்டுக் கொள்ளுது. அந்தாள்தான் இதுகின்ர ரூபத்தில வந்திருக்கோ எண்டு தோன்றும்''

கீர்த்து விழிகளை உருட்டி என்னையும் அவள் அப்பம்மாவையும் மாறி மாறிப்பார்த்துக் கொண்டிருந்தாள். பஞ்சவர்ணக் கிளி ஒன்று கண்களை உருட்டிக் கொண்டிருக்கும் அழகாய் இருந்தது அவள் கண் உருட்டல்.

''இவளின்ர தாய் சொல்லுவாள்' நீ அவளுக்கு அந்தாளின்ர படத்தைக் காட்டிக் காட்டி ''அவள் அந்தப் பிள்ளைகளைப் போல'' ஆகப் போறாள் எண்டு.''

''இதோட நீ இருந்து பார்க்கவேணும். தாய் சொன்னதை உனக்கு நான் 'அப்பப்பா சொன்னது' எண்டு மாறிச் சொல்லிப் போட்டன் எண்டதை நினைவில் வச்சு சொல்லுது பார் 'அப்பப்பா இல்லை அம்மாவாம்' எனக்கு எப்பவும் அந்தாளின்ர நினைவு தான் பிளளை. என்ன துன்பப்பட்டுதோ... என்னவோ... எதைச் சொன்னாலும் அந்தாள் சொன்னது எண்டு சொல்லிப்போடுவன்...'' இயல்பு தானே?...யாராலும்.எதனாலும் மாற்றி.விட முடியாத சோகம். வாணிக்கு அவளைப் பார்ர்த்ததுமே புரிந்தது. தொடர்பாடலின் வளர்ச்சியில் இன்றைய குழந்தைகள் படு சுட்டிகள்தான் ஆனால் இவள் அதிகப்படிதான்.

இந்தச் சுட்டியின் துல்லியமான மதிநுட்பக் கேள்விகள், அவள் அப்பம்மாவின் ஏக்கங்கள் தாபங்கள்... வாணி இலயித்திருக்கையில்.

அவள் தான் கேட்டாள்.

''எங்கட அப்பப்பாவைக் கண்டனியளோ?'' இவளுக்கு எப்படிப் பதில் சொல்லுவது?... வாணி அவளுக்காய்பதில் தேடிக் கொண்டிருக்கையில், ''நான் அப்பப்பாவை படத்தில தான் பார்த்தனான்'' அவளேதான் சொன்னாள். ''அப்பப்பா கிளிநொச்சிக்கு வீடு பார்க்கப்போனவர் வருவார் எண்டுதான் அப்பம்மா சொல்லுறவா... அப்பப்பாட்ட சொல்லுங்கோ நாங்கள் வந்திருக்கிறமெண்டு ..''

வாணி அவள் அப்பப்பாவை அறிந்திருக்க நியாயமில்லை. கிளிநொச்சியில வீடு பார்க்கச் சென்று திரும்பாதவர்களில் அவரும் ஒருவர்.

'இப்ப எல்லாம் படத்தில தான் கூடு கலைக்கப்பட்ட உறவுகள். அங்கொன்றும் இங்கொன்றுமாய்... தப்பிப் பிழைத்தவரும் தப்பிப் பிழைக்காதவருமாய் .. எல்லாம் படத்திலதான். இந்தப் பிஞ்சால் புரிந்துகொள்ள முடியுமோ ? வாணி தோன்றும் எண்ணங்களை ஒதுக்கிவிட்டு அவள் கேள்விக்குப் பதில் தேடுகையில் அவள் இறங்க வேண்டிய இடம்.

''சரி சொல்லுறன்'' —?

''அன்ரி போட்டு வாறன்...'' அவள் போய்விட்டாள்.

கீர்த்து போன பின்பும் கூட வாணிக்கு அவளின் கேள்விகள் .. திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டேயிருந்தன.

முகாம் வந்து நாட்கள் பலவாகியும் கீர்த்திக் குட்டியின் கேள்விகள் சுழன்று சுழன்று நினைவுக்கு வந்தன. எங்கட அப்பப்பா எங்க? . நாங்கள் வந்திருக்கிறம் எண்டு சொல்லி விடுங்கோ .. அந்தாள் என்ன துன்பப்பட்டுதோ .. பேரப்பிள்ளையைப்பார்க்கஎவ்வளவு ஆசையாயிருந்தவர் .. ஆரிட்ட சொல்லுறது ? அவருக்கு மட்டுமல்ல ஆருக்குமே புரியவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்து பல மாதங்களாகியும் கூடகாணாமல் போனவர்கள் காணாமல் போனவர்கள்தான் செய்திகள் எவையுமில்லை.

''ஏன் சேட் போட்டிருக்கிறியள்?... ஏன் தோடு போடேல்ல...

ஏன் இப்படிக் கட்டியிருக்கிறியள்?...''

''விருப்பம்... விருப்பம் .. விருப்பம்...'' 00

# வழிப் போக்கனின் குறிப்பேட்டிலிருந்து...

சுஜிந்திரா

நிழலற்ற வீதியில் நீண்டதூரம் ஓடிக்கொண்டிருந்தேன். சீரற்ற பாதை. ஆனால் இது ஒரு நெடுஞ்சாலை. சிதைந்து போய்க்கிடக்கிறது. யுத்தத்தின் காயங்கள்தான் வழிநெடுக.

ஒட்டுசுட்டானிலிருந்து மாங்குளம் வீதியில் போய்க் கொண்டிருக்கிறேன். வழியில் பல கிராமங்களைக் காணவில்லை. சிலஇடங்களில் ஒன்றிரண்டு சிறுகுடிசைகளும் ஓரிரண்டு மனிதர்களும் தெரிகின்றன. தொலைவுக்கொரு சிறு கடை. ஆட்கள் வருகிறார்களோ இல்லையோ அடுப்புப் புகைகிறது.

நான் அம்பகாமம் போய்க் கொண்டிருக்கிறேன். மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் ஒலுமடுவிலிருந்து ஐந்து மைல் தொலைவில் (இங்கே இன்னும் மைல் கல்தான் உண்டு) இருக்கிறது அம்பகாமம். தனித்திருக்கும் காட்டுக்கிராமம்.

முரசுமோட்டை 20½மைல் என்று கைகாட்டித்தூண் காட்டிய பாதையில் மிதிவண்டியைத் திருப்பினேன். செப்பமான செம்மண் தெரு அது. இருமருங்கும் அடர்வனம். மனதுள் ஒருவகை அச்சமும் கூடவே இருந்தது. வீதியில் போவோர் வருவோர் எவரையுமே காணவில்லை. கரை நெடுக இராணுவ இருப்பைக் காட்டிய தடயங்கள் ஏராளமாயிருந்தன. இராணுவத்தின் ஒரு கோட்டையாக இந்தப்பகுதி இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றியது. மிதிவெடி அச்சம் கலவரமூட்டியது. கரையிலே மிதிவண்டியை விடாது நடுவாலேயே ஓடினேன். என்னை அறியாமலேயே இன்றைய பயணம் வேகமாக இருந்தது. இருமருங்கும் பார்த்தபடி 35 நிமிடங்கள் மிதித்திருப்பேன். கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு ஓலைக்கூரை தென்பட்டது. இதயம் சற்று அமைதியடைய, அவ்விடத்தை அண்மித்தபோது அது ஒரு ஆலயம் என்பதைத் தெரிந்து கொண்டேன். போரால் அந்த ஊர்பட்ட துன்பத்தை அந்த ஆலயத்தின் இடிபாடுகள் சொல்லாமல் சொல்லி நின்றன. உடைந்த ஓட்டுத்துண்டுகளை பொறுக்கிக்கொண்டு ஒரு முதியவர் அங்கே நின்றார்.

அவரிடம் ஐயா இந்த இடம் எது? என்று மெல்லப் பேச்சுக் கொடுத்தேன். ''இதுதான் தம்பி அம்பகாமம். புள்ளையாரிட்டையே வந்தனி. நேத்தி ஏதும் கட்டோணுமே ராசா'' என்றார் ''இல்லை. என்று மொட்டையாய் சொல்லி அவரது எதிர்பார்ப்பைச் சிதைக்காது ''இந்த ஊரைப்பாப்ப மெண்டு வந்தனான் ''என்றேன். ''நல்லது தம்பி ''என்று தொடர்ந்தார் முதியவர். அவருடன் உரையாடியதிலிருந்து அதுதான் மம்மில் பிள்ளையார் கோவில் என்பதையும் மிகவும் புதுமையானதாக அவர்கள் அதை நம்புகின்றார்கள் என்பதையும் இந்தக் கிராம மக்களும் அயற்கிரமங்களில் உள்ளவர்களும் நோய் நொடி,

பொதுசன
யாழ்ப்பா

பாம்புக்கடி எதுவானாலும்
இங்கு வந்து நூல்போட்டுத்தான்
மாத்துவார்களாம் என்பதையும்
தெரிந்து கொண்டேன்
அவர்தான் அந்தக்கோயில்
பூசகர்.

பெரியவரிடம் விடைபெற்று
நகர்ந்தபோது, கண்ணில் பட்டது
மண்டைஒடு ஒன்றல்ல முன்னாலிருந்த
வேலியில் அங்கங்கு சிவப்பும்
வெள்ளையுமாய்மண்டையோட்டுக்குறிகளும்
எச்சரிக்கை அறிவிப்புகளும்.
வெடிபொருட்கள் கவனம்,
மிதிவெடி கவனம் (எங்களின் பசிய
காடுகளுக்கு பகை கொடுத்த பரிசுகள்
(இங்கு பாரபட்சமின்றி
இருகின்றனவோ?) அப்படியே 100 m
தூரம் சென்றிருப்பேன். வெள்ளை
அடிக்கப்பட்ட ஒற்றைக் கட்டிடத்தில்
பாடசாலை. அது மு/அம்பகாமம்
அ.த கூவித்தியாலயம் - புதிதாக
இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது.
அயலில் வீடுகள் எதையும் காணவில்லை.
வளைந்து சென்ற பாதையால்
சற்றுத்தூரம் சென்றபோது தூரத்தூர
குடிசைகள் தென்பட்டன.

காய்ந்துபோன தொண்டையை
நனைக்க எண்ணி ஏதாவது ஒரு
வீட்டில் தண்ணீர் குடிப்போம் என்று
போனபோது மாமர நிழலில் ஒரு
அம்மா கை மாத்தி மாத்தி நெல்லுக்
குத்திக்கொண்டு நின்றா.
என்னைக் கண்ட அந்த அம்மா
இன்முகம் காட்டி 'வரவேற்று தண்ணீர்
கேட்ட எனக்குப் புளித்தண்ணீர் தந்து
உபசரித்தார். நான் மரத்தின் கீழ்
கிடந்த குத்தியில் இருக்க மீண்டும்
நெல்லைக்குத்தத் தொடங்கினா.
நான் அவவிடம் கதைகொடுக்க ''தம்பி
இஞ்ச ஒரு முப்பத்தஞ்சு குடும்பம்
இருக்குது ராசா. உந்தப்பாழாப் போன
ஆமியால நாங்கள் ஊரவிட்டு ஓடி
இப்பதான் திரும்பவும் பயிர் பச்சையள
வைக்கிறம். போனதுகள் கொஞ்சம்
இஞ்சால இன்னும் வரேல்ல. எனக்குத்
தெரிஞ்சபடிக்கு உந்தப்பள்ளிக்கூடம்
36 ஆம் ஆண்டு வந்தது. இண்டைக்கும்
உந்த ஒரு கட்டிடமும், எண்டைக்கும்
ஒண்டு அல்லது ரெண்டு வாத்திமாரும்
ஒரு முப்பத்தஞ்சு நாப்பது
பிள்ளையளும்தான் படிக்கிறவ.

# அவர்களுக்காக..... வருந்துகிறோம்

குருவிகளே
நீங்கள் சிறகசைக்க போன
வானமே வலையாக
மாறிய போது
உங்கள் வாழ்க்கை இருண்டு கொண்டது;
இருந்த வெளிச்சமும்
வெளியேறிக் கொள்கிறது.

குற்றமில்லா நீங்கள்
குற்றவாளிகளால் தாக்கப்படுகிறீர்கள்.
விசாரணை
தூரத்தில் தெரியும்
துரும்பாகி விடுகிறது.

விடுதலைத் திகதி
கலண்டரில் இருந்து
கழன்று விழுகிற...

இளமைப் பறவை
இரும்புக் கம்பிகளுக்குள்
சிறகு உதிர்க்கிறது.

கூடப்பிறந்த குற்றத்திற்காக,
கனவுகளை உறவுகள்
கவிகாரித்து கொள்கின்றன.

உண்பதே உடம்பில்
ஒட்டாத போதும்
விடுதலைக்காக அதனையும்
விடுவித்து கொள்கிறீர்கள்;
ஆனால்
விடுதலை வானம்தான்
புலப்படாமல் போய்விடுகிறது.

த. டே. இஸ்காட்

அஞ்சு மட்டும் படிச்சிட்டு கொஞ்சம் நிக்கும், மிச்சம் ஒலுமடுவோ, மாங்குளமோ போகுங்கள். ஒலுமடு அஞ்சு கட்ட, மாங்குளம் எட்டுக்கட்ட சயிக்கிளிலதான் போகோணும். நானும் உந்தப்பள்ளிக்கூடத்தில எங்கட யாழ்ப்பாண வாத்தியாரிட்ட காதில மூருக்கு வாங்கினனான்'' (இதைச்சொல்லும்போது அம்மா பெருமிதப்படுவதை நான் உணர்ந்தேன்) தனது ஊர்பற்றியும் தங்கள் வாழ்வியல் பற்றியும் ஏதோ தனக்குப்பட்டதெல்லாத்தையும் என்னிடம் ஒரு நட்புணர்வுடன் அந்த முதியபெண் பகிர்ந்து கொண்டார். அதுமட்டுமன்றி ''தம்பி பகலில திரியிறது பரவாயில்லை இரவில இதுவழிய திரியாத ராசா. பொழுதுபட்டா உந்தப்பாதயளில பெரிசு நிக்கும் (பெரிசு என்றால் யானையாம்) சிலவேளை புலியும் வரும்'' (நிச்சயமாக அது காட்டுப்புலி) என்று என்னை எச்சரிக்கவும் செய்தா.

அவரிடம் விடைபெற்றுக் கொண்டு அப்பாலே செல்கையில் இன்னொரு முதியவரைக் கண்டேன். காய்ந்து கிடக்கும் வயல் வெளியில் மாடுகளை ஓட்டி வந்தார். அவரை மறித்து உரையாடினேன். அவர் மறக்க முடியாதபடி சில விடயங்களைச் சொன்னார்.

அம்பகாமத்தில் ராணுவம் நிலை கொண்டிருந்தபோது அங்கிருந்த குளத்தின் உட்பக்கமாக அவர்கள் அரண் அமைக்க குளக்கட்டை வெட்டியிருக்கிறார்கள். அதனால் குளம் உடைந்து விட்டது இப்போது வயலுக்கோ சிறு பயிர்ச்செய்கைக்கோ போதிய நீரில்லை எல்லா இடமும் வரண்டு காய்ந்து போய்க் கிடக்கிறது. இந்த ஊருக்கே அந்தக் குளம் ஒரு பெரும் செல்வம். வன்னியின் அநேகமான குடியிருப்புக்கள் குளத்தை ஆதாரமாக வைத்தே அமைந்திருக்கின்றன.

இப்போது இங்கே சரியாக விவசாயத்தில் ஈடுபடவும் முடியவில்லை. வேட்டைக்கு, தேன் எடுப்பதற்கு என்றும் போக முடியாது. இன்னும் மிதிவெடி அச்சம் நீங்கவில்லை.

முன்பு பெரும் காடாக இருந்த இந்த இடம் இப்பொழுது உருக்குலைந்து போயிருக்கிறது. அழகான அமைதியான, நிறைவான அம்பகாமம் பீதி நிரம்பித் தனித்துக்கிடக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு எல்லா ஊடகங்களிலும் பெரும் கவனிப்பைப் பெற்றிருந்த இந்தக் கிராமம் யார் பார்வைக்கும் தெரியாதிருக்கிறது;

ஜெயசிக்குறுவின் போது பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மையம்' உக்கிர சமர்க்களமாயிருந்த பகுதி இன்று அமைதியில் உறைந்திருக்கிறது.

பிரித்தானியர் ஆட்சியின் போது கண்டிவீதி அம்பகாமம் ஊடாகவே போனது. இப்போது பழைய கண்டி வீதியாகிவிட்டது.

வயல் வெளியைத்தாண்டி சென்ற போது சிறு வீடுகள். அவை கழிய மீண்டும் அடர்காடு. இரண்டு மைல் தூரம் சென்றிருப்பேன் மீண்டும் ஒரு சிறிய கிராமம் அது புலுமச்சிநாதகுளம் என்று அம்மா சொன்னது ஞாபகம் வந்தது. அதனையும் கடந்து ஓடினேன்; சரியாக இருபது நிமிடங்கள் கழிய கிழக்கு மேற்காகச்செல்லும் மாங்குளம் முல்லைத்தீவு வீதியை அடைந்தேன். ஒலுமடுப்பக்கமாக மிதிவண்டியைத் திரு. பி பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலை முன் இருந்த இடத்தில் வீதியருகில் நின்ற புளிய மரத்தின் கீழ் சற்று இளைப்பாறினேன்.

மனதுள் ஆயிரம் கேள்விகள்; ஒரு பனடோல் வாங்கக்கூட 5 மைல் போக வேண்டும். வாத்தியார் சந்தோருக்கு 18/20 மைல் போக வேண்டுமா? சந்தை என்றால் நீண்ட பெருங்காட்டுக்குள்ளால் சிரற்ற காட்டுப் பாதையால் வட்டக்கச்சி அல்லது மாங்குளம் வந்து மல்லாவி. கிட்டிய வைத்தியசாலை 16 மைலில் எந்தவொரு அடிப்படை வசதியுமின்றி இந்த மக்கள் எப்படி வாழ்கிறார்கள? உலகம் கிராமமாகியும், தகவல் தொழில் நுட்பம் வளர்ந்தும் மானிட சமுதாயம் மகத்தான சாதனைகள் படைக்கின்ற புதிய மிலேனியத்தில் குட்டித்தீவுகளாய் எத்தனை கிராமங்கள். ஜெயசிக்குறு காலத்தில் உலக ஊடகவியலாளர்களின் பார்வை மையமாக இருந்த அம்பகாமம் இன்று யாராலும் திரும்பிப்பார்க்கப்படாமல் கிடக்கிறதே! அரசுகள் மாறியென்ன ஆட்சியாளர்கள் மாறியென்ன அம்பகாமங்களும், பாலைப்பாணிகளும் அப்படியேதான இருக்கப்போகின்றனவோ!

வரலாற்றில் கால் பதித்த இந்தக் கிராமம் வாழ்வதற்காய் தவம் கிடக்கிறது.

o

# உயிர்ப்பின் ஒலி

▷ சி.மயூரன்

வாழ்வின் ஆழத்தை வியக்கும் ரேகைத்தனமாய்
எம்முகவரிகள் வேர் நிறைத்தன- அவ்
வாழ்வின் பதிவுகளுடன்
எண்ண அடுக்குகளில் மாட்டிக்கொண்டு
உசாவும் உறவுக் கிளையாய்
சாவரை தளைக்கும் மண்ணின் நினைப்பு.

மண்ணின் நினைப்பில்
சொந்தங்களைச் சுமந்ததால்
சுகித்திருந்தது பூரிப்பாய்.
முலையூறி விம்மும் தாய்மையாய்
மூண்ட நினைவுகளுடன் முட்டிக்கொண்டு
பாசங்களைச்சுமக்கும்
பிஞ்சுகளாய் நாமன்று
தளர்நடையிட்ட தாய்மேனி.

தாய்மேனியின் உயிர்நாடி
ஓடுமுடல் எங்களது.
புதையும் மணலில் பாவித்திரிந்த பாதங்களுடன்
கதைபேசிக் காத்திருந்த கரைவெளி
எல்லாம் எங்களது.

எங்களது சுரண்டப்படும் நினைவுகளால்
துன்பமாய்க் கரைந்தன பொழுதுகள்.


ஆசை பொதிந்த மண்ணுக்காய்
உயிர்ப்பைப் பொழியும் வெளிக்காய்
ஆவி கலந்து உப்புக்காற்றுடன்
அசையும் எம்முயிர்க் கணுக்களின் கனவிது.

கனவின் வெளிகள் திரையின்றித் தூலமாய்
விரியும் பொழுதுகள் நம்மண்ணிலும் படிந்தன.

முழங்கிய சங்கநாதத்தின் ஒலி
முடியாமல் அலையாய் நீண்டிங்கு
வெம்பித்தகித்த வெளியெங்கும்
உயிர்ப்பாய் ஒலித்தது.

மீண்டும்-
புதையும் மணலில் பாவித்திரியும் பாதங்களுடன்
கதைபேசிக் களித்திருப்போம் நாம்.





# ஒரு பிடி அரிசி

வல்வை ந. அனந்தராஜ்

மார்கழி மாதக் கடுங்குளிர் அந்தப் பிரதேசத்தையே உறைய வைத்துக் கொண்டிருந்தது. உயர்ந்து, அடர்த்தியாக வளர்ந்திருந்த காட்டு மரங்களிடையே வெள்ளைப் பஞ்சுகளைத் தூவி விட்டது போல், ஆங்காங்கே பனிமூட்டம் பரவி இருந்தது.

அந்தக் காலை நேரத்தில் வன்னி மண் இன்னும் விழித்துக் கொள்ளவில்லை... அந்த அளவுக்கு குளிர்காற்று எல்லோரையும் உலுப்பிக் கொண்டிருந்தது.

காட்டுக் குயில்களின் மனதைக் கிறங்க வைக்கும் மெல்லிய ஓசை மட்டும் காற்றில் கலந்து இதமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த இனிய ஒலிக்கு மேலாக, ''கீச்சு.. கீச்சு'' என்று குரங்குக் குட்டிகளை வயிற்றில் காவியபடி மரங்களிடையே தாவித்திரியும் மந்திக் குரங்குகளின் சத்தங்களும், தூரத்தில் எங்கோ காட்டுப் பகுதிக்குள் இருந்து இடையிடையே விட்டு, விட்டுக் கேட்டுக்கொண்டிருக்கும் துப்பாக்கிச் சத்தங்களும் தான், அந்த மண்ணின் இயற்கை ஒலிகளாகி விட்டன.

வன்னிப் பெரு நிலப் பரப்பில் உள்ள மாவட்டங்களில், முல்லைத்தீவு மாவட்டம் என்றதுமே, அடங்காத் தமிழன் பண்டார வன்னியனின் பெயர் தான் நினைவுக்கு வரும்... தூங்கிக் கிடக்கும் குழந்தை கூட ஒரு கணம் தன்னுடைய உடலைச் சிலிர்த்துக் கொள்ளும்.

அன்று யாழ்ப்பாண அரசு, அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரப்பட்ட பின்னரும் கூட, வன்னிமையை அடிபணிய விடாது, இறுதிவரை போராடி அந்த மண்ணைக் காத்த மாவீரன் பண்டாரவன்னியன் திரிந்த மண்ணல்லவா அது..

அதனால் தானோ என்னவோ, இன்றும்கூட அந்தமண் வளையாது நிற்கின்றது..

வந்தாரை வாழ வைக்கும் மண் என்றும், வீரத்தின் விளை நிலம் என்றும் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் பேசப்பட்டு வந்த மண்... இன்று!

அவலம் நிறைந்த மக்களால் நிரம்பிப்போய் சிவந்து காணப்படுகின்றது .. யாழ்ப்பாண மண்ணைக் கைப்பற்றி, அதன் பாரம்பரியத்தையும், தனித்துவத்தை

யுமே வேரோடு அழித்துவிட வேண்டுமென்பதற்காகவே மேற்கொள்ளப்பட்ட 'ரிவிரெச' படை எடுப்பு, அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சிங்களப்பெயரிலும் அமைந்த இராணுவ நடவடிக்கைகளும் அந்த மண்ணையே இன்று அல்லோலகல்லோலப் படுத்தி விட்டன...

காலம் காலமாகத் தமது சொந்த வீடுகளில் உண்டு, உறங்கி வாழ்ந்த மக்களை ஒரே இரவில் விரட்டி அடித்து, அகதிகளாக்கிவிட்ட அந்த அவலத்தைச்சுமந்து நின்ற யாழ்ப்பாணத்தை விட்டுக் கண்ணீருடன் வெளியேறிய இலட்சக்கணக்கான தமிழர்களில் செல்லம்மாவும் ஒருத்தியாக ஓடிவந்த அந்தத் துயரம் நிறைந்த இரவுகளை அவளால் எப்படி மறக்க முடியும்.

''அம்மா... இன்னும் வயிற்று நோக் குறைஞ்சதாத் தெரியேல்லையம்மா வரவர அடிவயிறு எரியிறமாதிரிக்கிடக்குதணை ... ஆ...கடவுளே... வலி தாங்க மூடியேல்லை...''

செல்லம்மாவின் மூத்த மகள் வானதி அடி வயிற்றை அழுத்திப் பிடித்தபடி, அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். ஒரு வாரத்திற்கு மேலாகச் சாப்பிடாமல் இருந்ததால், கடந்த மூன்று நாட்களாக வயிற்று வலியினாலும், தொடர்ச்சியான வாந்தியினாலும் துடித்துத் துவண்டு போய் இருந்தாள்...

''பிள்ளை இப்பத்தானை தேத்தண்ணி குடிச்சனீ .. இன்னும் கொஞ்சத்தாலை எல்லாம் குணமாப் போயிடும்...''

கடந்த மூன்று நாட்களாகப் பழகிப் போய்விட்ட, அந்த முனகல் செல்லம்மாவுக்குப் புதிதாகத் தெரியவில்லை.

செல்லம்மா ஏதோ ஒரு சாட்டுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது... ஒரு நாளைக்கு, ஒரு நேர உணவினையாவது அரைகுறையாக நிரப்பித் திருப்திப்படுத்த வேண்டிய வயிற்றை, எத்தனை நாட்கள்தான், வெறும் பனங்கட்டித் தேநீரைக் காட்டி ஏமாற்ற முடியும் ?

பலாலியில் இருந்து ஏவப்பட்ட மூர்க்கத்தனமான எறிகணைத் தாக்குதல்களினால் நெல்லிப்பளையில் இருந்தும் இடம்பெயர்ந்து, நவாலி சென். பீற்றேர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தபோது, வீசப்பட்ட 'புக்காரா'போர் விமானங்களின் குண்டுகள், அந்தப் புனித கத்தோலிக்கத் தேவாலயத்தை மட்டுமாதாக்கி அழித்தன...?

அந்த ஆலயத்தினுள் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், பெண்கள், வயோதிபர் என்று நூற்றுக் கணக்கான அப்பாவிகளின் உடல்கள், சிதறிப் பலியானபோது, அவளுடைய கணவனையுமல்லவா பறிகொடுத்துவிட்டு நிர்க்கதியாக நின்றவள்.

அன்று, அவள் அனுபவித்த, அந்தவேதனையின்கொடூரத்தை விட, இன்று அந்த அகதி முகாமில் அனுபவிக்கும் துயரமோ மிகவும் கொடூரமானது.

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அகதிமுகாமில் கழித்த அந்த ஆறு மாத அவல வாழ்க்கையில் அவள் அனுபவித்த துயரங்களோ ஏராளம்.

பாயில் படுத்திருந்தபடியே, வலி தாங்கமுடியாது முக்கி முனகிக் கொண்டிருந்த, வானதியின் கோலத்தைப் பார்த்ததுமே, செல்லம்மாவின் பெற்ற வயிறு பற்றி எரிந்து கொண்டிருந்தது... சேர்த்தது வைத்த

பணத்தைச் செலவழிக்க வழி தெரியாது, உண்டு குடித்துக் கழித்து வாழ்பவர்களுக்கு அதனாலேயே நோய்களும் வந்து விடுகின்றது... ஆனால் வானதியைப் போன்று நிர்க்கதியாக்கப்பட்டுவிட்ட ஏழைகளின் 'பசிப்பிணிக்கு' யாரால் தான் மருந்து கொடுக்க முடியும்...?

''சே என்ன வடிவாய் இருந்த பிள்ளை .. ஊரை விட்டு வந்து தேப்பனையும் பறிகுடுத்திட்டு இப்பிடிக் கோலம் மாறிப் போய்... கடவுளே .. நான் என்ன பாவம் செய்து பிறந்திட்டன் .. கலியாணம் முடிக்க வேண்டிய வயதில், இப்படி எலும்பும் தோலுமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறதைவிட, அண்டைக்கே அவரோடை செத்துத் துலைஞ்சிருக்கலாம் ''

நீண்ட பெருமூச்சு விட்டபடியே தன்னையே நொந்து சபித்துக் கொண்டாள்... முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என்று அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைளினால், யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களாலும், 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களாலும் அந்த அகதி முகாம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

அங்கேதான், அவர்களுக்கும் ஒரு சிறிய பகுதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்தது... ஒரு வகுப்பறையினுள் மூன்று குடும்பங்கள் எப்படியோ இருந்தே ஆக வேண்டும்.

''அம்மா ...என்னம்மா...? இண்டைக்கும் சாப்பாடு தரமாட்டியளோ ...? ரெண்டு நாளா வெறும் தேத்தண்ணியைக் குடிச்சுக்

குடிச்சு வாயெல்லாம் கைக்குது .. இன்டைக்குப் பள்ளிக்கூடத்திலை வகுப்பேற்றச் சோதனை என்றும் சொல்லி விட்டவை...''

படுக்கையில் இருந்தும், எழும்ப மனமில்லாமல் சோம்பலை முறித்துக் கொண்டே எழுந்த பிரதீபன், தாயின் முகத்தையே பார்த்து அனுங்கிக் கொண்டிருந்தான்.

அவன் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான்... எந்தக் கஷ்டம் வந்தாலும் அவனை எப்படியும் படித்து ஆளாக்கிவிட வேண்டும் என்ற ஆதங்கம் செல்லம்மாவிடம் இருந்தாலும், அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க மட்டும் அவளால் முடியவில்லை...

''என்ரை ராசன்... இன்டைக்கு மட்டும் போய்ச் சோதனையைச் செய்துட்டு வா நான் எப்பிடியும் இன்டைக்கு கால் கிலோ அரிசியாவது கொண்டு வந்து கஞ்சி வைத்துத் தருவன்...''

''சும்மா போணை... நேற்றும் இப்படித்தானை சொல்லிப் போட்டுப் போய் மத்தியானம் வெறுங்கையோடை வந்தனிங்கள் ஏன் இப்படி ஒவ்வொரு நாளும் ஏமாத்திறியள்—?''

பிரதீபனின் ஆற்றாமையும், பசியின் கொடூரமும் அவனை அப்படிப் பேசவைத்து விட்டது.

''தம்பி .. அம்மாவை அப்படிப் பேசாதை... பாவம் அவ என்ன செய்வா...? தன்ரை கழுத்திலை, காதிலை கிடந்த நகை எல்லாத்தையும் வித்து இவ்வளவு காலமும் சமாளிச்சா... அதுக்குப் பிறகும் கூட பக்கத்துச் சனங்களிட்டைப் போய்ப் பிடி அரிசி சேர்த்துக் கஞ்சி காய்ச்சித் தந்தா... எத்தினை நாள் வீடுகளுக்குப் போய், அரிசி இடிச்சுக் கொடுத்து எங்களுக்குச் சாப்பாடு போட்டிருப்பா ... இதெல்லாம் தெரிஞ்சும் ஏன் இப்படி, கதைச்சு அவவின்ரை மனதை நோக வைக்கிறாய்...ம்... எங்கடை தலைவிதி, இப்படி எங்களை அலைக் கழிக்குது...''

வானதியின் மூச்சு இளைத்துக் கொண்டிருந்தது... படுக்கையில் இருந்தும், மெதுவாக எழும்பி இருந்த வானதி. அந்த வயிறு எரியும் நிலையில் இருந்தும் கூடத் தன்னுடைய தம்பியைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

''அக்கா... என்னைக் கோவிக்காதீங்கோ.. அம்மா பாவம் எங்களுக்காக கஷ்டப்படுறதை நான் உணராமல் இல்லை அக்கா . இது எங்கடை விதி மட்டுமில்ல... இந்த நாட்டிலை தமிழனாய்ப் பிறந்ததாலை ஏற்படுத்தப் பட்ட சதி அக்கா... அந்த விதியை நாங்கள் தான் மாற்றி அமைக்க வேணும்...''

தாயுடன் சேர்த்து நாட்கணக்காகச் சாப்பிடாமலேயே இருக்கும், அவர்களுடைய வயிற்றில் மூன்டெழுந்த அந்தப் பசித்தீயை மட்டும் அவர்களால் எப்படி அணைக்க முடியும்?

# விடிவிளக்குகள்

எத்தனை முகங்கள்
எத்தனை உறவுகள்
எத்தனை கனவுகள்
எல்லாம் ஒரே
இலட்சியத்திற்காய்,
மின்னலென ஒளிர்ந்த - இந்த
மின்மினிகளால் இரவுகள்
மட்டுமல்ல - இன்னல்களும், அடிமை
மண்ணுங் கூட
விடுதலைக்காணும்.
விடிவிளக்காய்
விண்ணகம் சென்ற மாவீரர்களால்
விடிவு கிட்டும்;
ஈழம் மலரும்.

இ. றோமியல்

செல்லம்மாவுக்கும், எங்காவது வேலைக்குப்போய், கூலி வேலையாவது செய்து அன்றாடம் செலவுக்குத் தன்னும் உழைக்கவேண்டும் என்ற ஆசை தான்...

இன்று, வன்னிப் பெருநிலப் பரப்பில் வளம் கொழிக்கும் நூற்றுக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள், இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும், எறிகணை வீச்சு எல்லைக்குள்ளும் கொண்டுவரப்பட்ட பின்னர் அவை எல்லாமே இன்று வானம் பார்த்த பூமிகளாகி விட்டன. இந்த நிலையில், எத்தனையோ உடல் வலிமையுள்ள ஆண்களுக்கே வேலை வழங்கமுடியாத நிலையில், வலுவிழந்து மெலிந்து, எலும்புக்கூடாகி விட்ட செல்லம்மாவுக்கு, அங்கே யார்தான் வேலை கொடுக்கப் போகிறார்கள்?

வன்னிப் பெருநிலப்பரப்பைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாத நிலையில், அங்கே வாழ்கின்ற மக்களைப் பட்டினி போட்டுப் பணிய வைப்பதற்கு உணவுத் தடையைப் பேராயுதமாகப் பயன்படுத்தும் அந்த, அநாகரிகம் உலகில் வேறு எந்த நாட்டிலுமே நடந்திருக்கமுடியாது...

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்தவர்களுக்குச் சில மாதங்கள் வரை ஏதோ பெயரளவில் வாரத்திற்கு முன்னூறு ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை நிவாரணமாகக் கொடுத்து வந்தார்கள். அதற்குப் பிறகு மாதத்திற்கு ஒரு தடவையாகக் குறைந்து. இப்போது 'அகதிகளுக்கான நிவாரணம்' முற்றாகவே நிறுத்தப்பட்டு விட்டது.

அகதிகளுக்கென வெளிநாடுகளில் இருந்து வரும் உதவிகள் தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கின்றன... ஆனால், அந்த ஏழைகளின் வயிறுகள் மட்டும் வெறுமையாகிக் கொண்டு வந்தன...

''தம்பி... எழும்பித் தேத்தண்ணியைக் குடிச்சிட்டுப் போயிற்று வா... நான், என்ன சும்மாதிரிஞ்சிட்டே வாறன்... நேற்றுக்கூட ஒரு கொத்து அரிசிக்காக அலையாத இடமில்லை... ஏறி இறங்காத படலை இல்லை... உண்ணாணை இண்டைக்கு எப்படியும், உனக்குக் கஞ்சி காய்ச்சி வைப்பன்''

அவள் உறுதியாகக் கூறிக் கொண்டே, மகனின் தலையை வாஞ்சையுடன் தடவி விட்டாள்.

''சரி... அம்மா, நான் இண்டைக்கு போறன்... அம்மா... நான் கதைச்சதைப் பற்றிக் கவலைப்படாதையுங்கோ ஏதோ, தெரியாமல் கதைச்சிட்டன்...''

அவன் இப்படிக் கூறியதும், செல்லம்மாவின் நெஞ்சுக்குள் அடக்கி வைத்திருந்த துயரம் இன்னும் பீறிட்டுக் கொண்டு வந்தது... சேலைத் தலைப்பினால் வாயையும், கண்களையும் மூடிக் கொண்டு விம்மி, விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

அவர்களுக்கு எதிரில், பாயில் படுத்திருந்தபடியே, பிரதீபனையே பார்த்துக் கொண்டிருந்த வானதியின் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது... அவளுக்கு, அந்த நேரம், 'ஓ'வென்று' வாய் விட்டே கதறி அழவேண்டும் போல இருந்தது. தன்னுடைய முகத்தை அடுத்த பக்கம் திரும்பிச் சட்டைத் தலைப்பினால், வழிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

ஆம்... அங்கே, பசிக்கும், பாசத்திற்கும் இடையே அவர்களுடைய உணர்வுகள் போராடிக் கொண்டிருந்தன...

அந்த அகதிமுகாமின், 'ஒருலயம்' மெல்ல, மெல்ல விழித்துக் கொண்டிருந்தது. அந்த முகாமில் உள்ளவர்கள், அன்றும் வழமைபோலக் கலகலப்பாக இயங்கத் தொடங்கி விட்டனர். செல்லம்மா மட்டும், அந்த விடியப் போகும் பொழுதை நினைத்து நடுங்கிக் கொண்டிருந்தாள்.

''பிள்ளை இண்டைக்கு எங்கையாவது போய்ப் பிடி அரிசி சேர்த்தெண்டாலும், கொண்டு வாறன்...''

சேலைத் தலைப்பினால் கண்களைத் துடைத்துக் கொண்டே எழும்பினாள்.

தெல்லிப்பளையில் இருந்த பொழுது, அவளுடைய கணவன் ஒரு முழு நேர விவசாயியாக இருந்து, வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கெல்லாம், தாராளமாக உணவைக் கொடுத்து அனுப்பும் அளவுக்கு வீட்டில் நெல்லை மூடை மூடையாக அடுக்கி வைத்திருப்பான்.

இன்று வீடு வீடாகச் சென்று, அவர்கள் சமைக்கும் அரிசியில் இருந்து, ஒரு பிடி அரிசியாகச் சேர்த்துக் கஞ்சி காய்ச்சி வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதை நினைத்துப் பார்த்ததும் செல்லம்மாவின் உடல் கூனிக் குறுகியது......

போர் நெருக்கடிகள், அரசின் உணவுத் தடை என்பவற்றால் வன்னியின் பல வீடுகள் இன்று அரிசிக்காகவும், மாவுக்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில், பிடி அரிசி கொடுக்கின்ற நிலையில் எத்தனை பேர் இருப்பார்கள்...?

''அம்மா... எனணை! அப்பிடி வீடு வீடாச் சென்று பிச்சை எடுக்கிற மாதிரிக் கேட்க

# இம்முறையும்...

இம்முறையும்
உன்மீதான மறுதலிப்பு அற்றுப்போக
சிறைக் கதவூடே
வெளியே வந்தாய்.
ஓயாது நீளும் நம் துயருக்கும்
உனக்கான கொடூரத்துக்கும் முடிவாய்
நீதிமன்றின் ஆணை ஒலித்தது.
நண்பனே!
நீ வெளியே வந்தாய்
கம்பி வரிகளைவிட்டு நிரந்தரமாகவே.

இன்று சூரியன்
அதிகம் பிரகாசித்தொளிர்ந்தது.
இனிய பறவையின் கானத்தில்
எம் காதுகள் நிரம்பின.
துப்பாக்கி முனையில் நீ
கொழுவுண்டு போகப்பட்டபோது
அவர்களுக்கான காலமாயிருந்தது.
எம் ஆர்ப்பரிப்புக்கள், அமைதிகள்
எவையும் செயலற்று
காற்று வெளியில் வரைந்த 'கோடுகளாயின.

இப்போது,
நமக்கான காலமெனில்
மறுபடியும் சிறைக்கதவுகளூடே
வேறும் பலர் வரக்கூடுமா?



ஞாபகன்

---

வேணும்...? இண்டைக்கும், அந்த உதவி அரசாங்க அதிபரிட்டையே எங்கட நிலைமையைச் சொல்லிக் கேட்டுப் பாருங்கோ..."

வானதி, இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, அடிவயிற்றில் பலமாக வலி ஏற்பட்டதால், வயிற்றைஅப்படியே அமுத்திப் பிடித்தபடி படுத்திருந்தாள்.

"சரி... பிள்ளை... எதுக்கும் இண்டைக்கு ஒருக்கால் போய் அவரிட்டையே கேட்டுப் பார்த்துட்டு வாறன்... ஏதோ கடவுள் விட்ட வழி .."

செல்லம்மா கொடியிலிருந்த சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டு, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் போவதற்கு ஆயத்தப்படுத்தினாள்.

இதயத்தை அமுத்திப் பிடித்த துயரத்துடன், அந்த முகாமை விட்டு வெளியேறிய செல்லம்மா ஒருவாறு நடந்து சுமார், ஒரு மைல் தூரத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனையை அடையவும், அங்கு அலுவலகப் பணிகள் ஆரம்பமாகவும் சரியாக இருந்தது.

வசதிகளும் வாய்ப்புக்களும் நிறைந்த நகரப் புறங்களில் கிடைக்கின்ற வளங்களை. எல்லாம் அனுபவித்துக் கொண்டு, ஏனோதானோ என்று இருக்கின்ற அதிகாரிகளைப் போன்றவர்களை அங்கே, வன்னியில் காண முடியாது... அவர்களை யாருமே மேற்பார்வை செய்வதில்லை.. ஆனால் பற்றுறுதியோடும், மனிதாபிமானத்தோடும் பணியாற்றுகின்ற மனிதர்களைக் கொண்டுதான். அங்கே உள்ள அலுவலகங்கள் எல்லாமே இயங்குகின்றன.

''என்னம்மா... இண்டைக்கும் நேரத்தோடையே வந்து விட்டியள் போல கிடக்கு சரி உள்ளை நடவுங்க. நான் சைக்கிளை விட்டுட்டு வாறன்...''

அந்த அலுவலகத்தினுள் தனது, மோட்டார் சைக்கிளில் வந்து சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் சிவானந்தா, தூரத்தில் வரும்பொழுதே செல்லம்மாவைக் கண்டுவிட்டார்.

வழமையாகவே சோகத்துடன் வந்துபோகும் செல்லம்மாவைக் கண்டதும் அன்றும் அவரையறியாமலேயே அவள் மீது ஒருவித இரக்கம் ஏற்பட்டது. அலுவலக அறையை நோக்கி நடந்து கொண்டிருந்த சிவானந்தாவைத் தொடர்ந்து செல்லம்மாவும் தயங்கித் தயங்கிய படியே பின் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தாள்.

''சண்முகம்... அந்த அம்மாவை இன்னும் கொஞ்சநேரத்திலை உள்ளை அனுப்பு''

வாசலில் எழுந்து நின்ற வாச்சரிடம், கூறியபடியே, கதவைத் திறந்து தனது அலுவலக மேசையை நோக்கிச் சென்ற சிவானந்தா, அன்று மேற்கொள்ளவேண்டிய வேலைத் திட்டங்களை மேலோட்டமாக ஒரு தடவை பார்த்துக் கொண்டார்.

அன்றைய பணிக்கான தனது ஆரம்ப வேலைகளை முடித்துவிட்டு, வாசலில் நின்ற சண்முகத்தைப் பார்த்துச் சைகை காட்டினார்.

அவரது அனுமதி கிடைத்ததும். சண்முகம் செல்லம்மாவை உள்ளே செல்லுமாறு கூறிக் கதவைத் திறந்து விட்டான்.

உதவி அரசாங்க அதிபரின் அலுவலக மேசையை நோக்கி மெதுவாகச் சென்று கொண்டிருந்த செல்லம்மா அவருக்கு அருகே வந்ததும் கையைக் கட்டிக் கொண்டு அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

''அம்மா... இந்தக் கதிரையிலை இருங்க...''

அச்சம் கலந்த பார்வையுடன், அவரையே பார்த்துக் கொண்டிருந்த செல்லம்மாவையே பார்த்துக் கொண்டிருந்த அந்த இளம் உதவி அரசாங்க அதிபருக்கே, அரசு மேற்கொள்ளும் பாரபட்சமான நடவடிக்கைகளை நினைத்துப் பார்த்ததும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''சே...என்ன போக்கிரித்தனமான வேலை... சந்தோசமாகத் தங்கடை, தங்கடை வீடுகளில் இருந்து உழைத்துச் சாப்பிட்டு நிம்மதியாக வாழ்ந்த சனத்தைத் சமாதானத்திற்கான யுத்தம் என்ற போர்வையிலை துரத்தி அடித்து அகதிகளாக்கிவிட்டு, பட்டினி போட்டுக் கொல்லும், இந்தக் கொடுமையை ஆரிட்டைப் போய்ச் சொல்லி அழுகிறது ?''

அவருடைய இதயம் குமுறிக் கொண்டிருந்தது. இதனை வாய்விட்டு எவரிடமும் கூறினாலோ. அல்லது அறிக்கையாக அனுப்பி வைத்தாலோ 'ராஜத் துரோகி' என்ற பெயரும் சூட்டப்பட்டு தண்டனை இடமாற்றமும் கிடைத்துவிடும் என்பதால் அவருடைய உள்ளத்து உணர்வுகளை இதயத்திற்குள்ளேயே அமுக்கிக் கொண்டார்.

''ஐயா... என்ரை பிள்ளைகள் இரண்டும், நாலு நாளா அன்னத்தைக் காணாமல் அப்பிடியே வாடி வதங்கிப் போய்க் கிடக்குதுகள். இந்த முறை மட்டும் ஏதோ பார்த்து நிவாரணம் தந்தியள் என்டால் உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்...''

அவருடைய காலில் விழாத குறையாக, சர்வாங்கமும் ஒடுங்கிக் கண்ணீர்விட்டுக் கொண்டிருந்த சொல்லம்மாவின் கைகள் தளர்ந்து நடுங்கிக் கொண்டிருந்தன.

''அம்மா.. நீங்கள் இப்படிக் கதைக்கிறதைப் பார்க்கவே எனக்குக் கஷ்டமாக இருக்குது...எனக்குத் தாறதுக்கு விருப்பமில்லை என்று நினைக்காதீங்க... அரசாங்கந்தான் இரண்டாம் கட்ட நிவாரணத்தை நிறுத்திட்டுது.. அப்படியிருந்தும் இடைக்கிடை எங்களுடைய வேறு நிதியில் இருநதுதான், உங்களுக்கு நிவாரணம் தந்தனாங்கள்...''

சிவானந்தா ஒரே மூச்சில் கூறிவிட்டு தனது கோவையில் இருந்து சில படிவங்களை எடுத்து எதையோ எழுதிக் கொண்டிருந்தார். அவருடைய செய்கை, செல்லம்மாவுக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுத்தது... அவரையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா... உங்கடை கஷ்டம் எனக்கு விளங்குது... இண்டைக்கு உங்களை மாதிரி ஆயிரக்கணக்கான சனங்கள் இதே மாதிரிச் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருக்குதுகள்... என்ன செய்வது, இண்டைக்கு எங்கடை வேறு உதவி நிதியில் இருந்து. உங்களுக்கு நானூற்றைம்பது ரூபாவுக்குரிய உலர் உணவுப் பொருட்களை வாங்குவதற்குப் 'பெர்மிட்' தாறன்... இதற்கு மேல் என்னாலை ஒன்றுமே செய்ய முடியாது உங்கடை அடையாள அட்டையையும் அகதிக் காட்டையும் எடுத்துத் தாங்க ''

அவர் இப்படிப் 'பெர்மிட்' தருவதாகக் கூறியதும், செல்லம்மாவின் தலையில் இருந்து உள்ளங்கால் வரை மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது ஏதோ. 'ஜாக்பொட்' பரிசு கிடைத்துவிட்டது போல் குதூகலித்தாள்.

இப்படி ஒரு பெரியதொகைக்கு 'நிவாரண பெர்மிட்' தருவார் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

''ஐயா நீங்கள் நல்லா இருக்க வேணும்... தெய்வம் போல வந்து இண்டைக்குச் செய்த உதவியை என்னால மறக்கேலாது அந்தப் பெர்மிட்டுக்கு அரிசி வாங்கினன் எண்டால், கடவுளே என்ரை பிள்ளையளுக்கு ஒரு நேரக் கஞ்சியைத் தன்னும் கொஞ்ச நாளைக்குக் காய்ச்சிக் கொடுப்பன்''

'பிடி அரிசியை' எதிர்பார்த்து வந்தவளுக்கு, கொத்துக் கணக்காக அரிசி கிடைக்கப் போவதை நினைத்ததும், கைகால் புரியாத மகிழ்ச்சி...

அவளுடைய அந்த மகிழ்ச்சியைக் கண்டதும் சிவானந்தாவின் கண்கள் குளமாகிக் கொண்டு வந்தன. செல்லம்மா, தன்னுடைய பையில் இருந்தும் தேசிய அடையாள அட்டையையும், அகதிகளுக்கான அடையாள அட்டையையும் எடுத்துக் கொடுத்தாள். அங்கே உள்ளவர்கள், எப்பொழுதாவது இருந்து விட்டுத்தான் இப்படி ஏதாவது ஒரு தேவைக்கு அடையாள அட்டையைக் காட்ட வேண்டி வரும். ஆனால் வன்னிக்கு வெளியே வாழ்கின்றவர்களைப் பொறுத்தவரையில் அடையாள அட்டை இல்லாமல் எங்குமே செல்ல முடியாது. அந்த அளவுக்கு ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை... நாய்களுக்கு பட்டி கட்டி இலக்கமிடப்பட்டிருப்பது போல். மனிதருக்கும் அந்த அடையாள அட்டையில்தான் உயிரே இருக்கின்றது.

நாய்களின் கழுத்தில் பட்டி இல்லாவிட்டால், நகரசபைக்காரர்கள் பிடித்துக் கொண்டு போய்ச் சுட்டுப் புதைத்து விடுவார்கள். ஆனால் மனிதர்களின் கைகளில் அது இருந்தாலும் கூட சிலவேளைகளில் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்.

செல்லம்மாவிடம் இருந்து பெற்ற அடையாள அட்டையையும், அகதிகளுக்கான அடையாள அட்டையையும் வாங்கிப் பதிந்து விட்டு, அவற்றுடன் நானூற்றைம்பது ரூபாவுக்கான நிவாரணப் பெர்மிட்டையும், சேர்த்துச் செல்லம்மாவின் கைகளில் கொடுத்தார்.

அதை, அவரிடமிருந்து வாங்கிய செல்லம்மா, கண்ணீர் கனக்க, கையெடுத்துக் கும்பிட்டு விட்டு அங்கிருந்து வெளியேறி, கூட்டுறவுச் சங்கக் கடையை நோக்கி நடந்தாள்.

'முருகா...இண்டைக்குத்தான் உன்ரை கண் திறந்திருக்குது... ஐயோ, என்ரை பிள்ளைகள் எத்தினை நாளாச் சாப்பாடு இல்லாமல் துடித்துக்கொண்டிருக்குதுகள். போன உடனை கஞ்சி காய்ச்சிக்கொடுத்து அந்தப் பிள்ளையள் சிரிக்கிறதைப் பார்க்க வேணும்''

மனதிற்குள் நினைத்தபடியே இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கினாள்.. அவளுக்கு எங்கிருந்து தான் அந்த உத்வேகம் வந்ததோ தெரியவில்லை இன்னும், இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

கூட்டுறவுச் சங்கக் கடையில் இருந்தும், அரிசியை வாங்கிக் கொண்டு. ஆனந்தபுரம் அகதி முகாமை நோக்கி ஓட்டமும், நடையுமாகச் சென்றடைந்தாள்.

ஒரு நாளா இரண்டு நாளா... பத்து நாட்கள் அல்லவா... வானதி பசியால் துடித்துக் கொண்டிருக்கின்றாள்... எப்பொழுதாவது, இடையிடையே கிடைக்கின்றவற்றை ஆண் பிள்ளை என்றபடியாலோ என்னவோ பிரதீபனுக்குக் கொடுத்து விட்டு, வெறுங் கண்ணீருடன் கனன்று கொண்டிருக்கும் வானதியின் வயிற்றில், வெறுங் கஞ்சியையாவது வார்த்துவிட வேண்டும் என்ற ஆதங்கம், அவளை ஒரு புதிய உலகத்திற்கு இழுத்துச் செல்வது போல் இருந்தது.

''பிள்ளை ..... பிள்ளை ..... வானதி இஞ்சை அரிசி கொண்டு வந்திட்டன்... எழும்பிக் கெதியாய் வாணை...''

செல்லம்மாவின் கால்கள் ஒரு நிலையில் நிற்கவில்லை.. கொண்டு வந்த அரிசியை காய்ச்சிக் கொடுக்க வேண்டும் என்ற ஆவலில் அவள் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

அந்த வகுப்பறையின் வாசலையும் தாண்டி சேலைத் துணியினால் மறைப்புக் கட்டியிருந்த அந்த 'அறையை' எட்டிப்பார்த்தாள். நீண்ட நேரம் வயிற்று வலியினால் துடித்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, அந்தப் பாயில் அப்படியே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் ○

---

## பூஜைக்கு முன்பே...

உதய காலப் பூஜைகள்
தொடங்க
ஆயத்த மணிகள் சப்திக்கின்றன;
காற்றில்,
மங்கள வாத்தியங்களின் இசைவெள்ளம்
சப்தஸ்வரங்கள் உடைபடாமல்
பிரவகிக்கின்றன.
வேதங்கள் ஓதுவார் கருப்பக்கிருகத்துள்;
புஸ்பாஞ்சலியோடு
தீபாராதனைகளும் நிகழ
வானை முட்டும பிரார்த்தனை ஒலிகள் பரவி
பக்திப் பரவசமாயிற்று...

சந்நிதி வாசலில்;
கொடிக்கம்பமருகில்
எருக்கலம் பூக்களும், பட்டிப் பூக்களும்
தட்டுகளில் ஏந்திய படிக்கு
ஓர் கூட்டம் சன்னதம் கொள்கிறதா?
றோஜாப் பூக்கள் மிதிபட,

வன்னிவாசன்

பொதுசன

# இரவு தின்னப்போகும் உனக்கான இரங்கல் பாடல்

குளிர்கால இரவில்
நீ தூங்கிக்கொண்டிருக்கிறாய்

இரவு உன்னை வருடிக்கொள்கிறது
என நினைத்து
ஒரு சூரியனை
ஏதிர்பார்த்து காத்திருக்காத நீ
தூங்கிக்கொண்டிருக்கிறாய்.

இருளோடு
எப்போதிருந்து வசிக்கத்தொடங்கினாய்?
அதன் புதிர் ஆழத்துள் புதைந்திருக்கும்
வஸீகர வர்ணங்களின்
மூச்சொலி
ஒரு ஓவியமாகுமென நீ நம்புகிறாயா?
நீ சொல்லக்கூடும்
இரவு அமைதியானதென்று;
நான் சொல்கிறேன்
இரவு
சப்தங்கள் எல்லாவற்றையும் தின்றுவிட்டு
காத்திருக்கிறது உனது குரல்வளை அருகில்.

எனக்குத் தெரியும்
இரவின் கரிய நிறத்துள்
எந்தப் புள்ளியுமற்று
முடிந்துபோகப் போகிறது உனது வாழ்வு.

நான் கவலைகொள்வதெல்லாம்;
இரவிடம் கொடிய அலகுகள்
உள்ளன என்பதை
உனக்கு நம்பவைப்பது பற்றியே



□ சித்தாந்தன்

# தேவதைக் காலத்தின் மரணம்

யாருடைய வேண்டுதல்களுமற்று
யன்னல்களை உதைத்துச் சென்றது
எல்லையற்ற காற்று.
நிலா ஒளியில் பாதி மினுமினுப்புடனிருந்த
மலைகளின் கவிதைகளும்
அருவிகளின் பாடல்களும்
எவரும் எடுத்தெறியாமலேயே
காணாமற் போயின.

நீ பேசவில்லை;
மௌனம் இருளாய் சொற்களை
மூடியிருந்தது.
உனது உதடுகளில்
ஆயிரம் இதழ்களும் வற்றிய
புன்னகையிருந்தது.
(நான் நினைக்கிறேன் எனது உதடுகளிலும் இதே புன்னகையையே
...நீ கண்டிருக்கவும் கூடும்)

வார்த்தைகளால் எப்போதுமே நிறைந்திருக்கும்
இந்த அறையை ஒரு மோகினி
சபித்துப் போனாள் என்பதை
நான் நம்பவில்லை.
சாத்தான் தனது சாவறையும் கைகளால்
எம்மை தடவிச் சென்றிருக்கலாமென
எவரேனும் சொல்லிடவும் கூடும்.

எதுவுமேயில்லை
தேவதைகள் செத்துப்போயின
எங்கள் மனங்களுக்குள்.

**இரண்டு கவிதைகள்**

நானும் நீயும் செய்யவேண்டியதெல்லாம்
எங்கள் மனங்களுக்குள் செத்துப்போன
தேவதைகளை எழுப்ப வேண்டும்.
வறண்ட மௌனத்தின் ஆழத்தினுள்
கிழிந்து கிடக்கும் சொற்களில்
ஒன்றையாவது
அர்த்த ஒலியுடன் பேசவேண்டும்.
நிச்சயமாக
நீயும் நானுமாக.

# சுதந்திரம்



வேணி
சின்னத்தம்பி

இண்டைக்கு தேர்த்திருவிழா.
விடிஞ்சதிலையிருந்து இந்தத் தேரைப் பற்றித்தான் ஊருக்குள்ளை கதைக்கினம். எங்கடை மாவடி முருகன் தேர் மாதிரி இந்தத்தேர் கோயில் வீதியிலை மட்டும் சுத்துற தேரில்லையாம்.

இந்தத் தேர் ஊருக்குள்ளை வருமாம். ஒவ்வொரு குச்சொழுங்கைக்கையும் வருமாம். எல்லாற்றை வீட்டுக்கும் வருமாம்,

ஒரு கிழமைக்கு முதலே இந்த தேர்த்திருவிழாக் கொண்டாட்டம் ஊருக்கை களை கட்டத் தொடங்கி விட்டது.

எல்லா வீடுகளிலையும் தோரணங்கள் தூங்குது.

தெருவில சிவப்பு மஞ்சள் கொடியள் காத்தில பறக்குது.

சந்தியளில பந்தலுகள் போட்டு பெரிய சத்தத்தில பாட்டுக் கேட்குது.

எல்லாச் சனமும் குளிச்சு புது உடுப்புப் போட்டுக் கொண்டு தேரைப் பார்க்க தெருவுக்கு போகினம்.

எங்கடை மாவடி முருகன் தேர் மாதிரி இந்தத் தேரும் புனிதமானது தானா.

இந்தத் தேருக்கு வடம் பிடிக்கிறவனும் புனிதமானவன் தானாம்.

''கணபதியப்பு... .... தேர் பார்க்க வரலையே... .. ?''

கடைக்கார மணியம் கைமுட்ட சேட்டுப் போட்டுக் கொண்டு பவுடர் பூசி சிரிச்ச முகத்தோட என்னைக் கடந்து போறான். வெயில் எண்டாலும் வீட்டுக்கை போர்த்துக்கொண்டு கிடக்கிற சோம்பேறி தேர் பார்க்கப்போற அழகைப் பார்க்க எனக்கு சிரிப்பு வருது

''எட....... கணபதி.. ...... என்ன இஞ்சை நிற்கிறாய். தேர் பார்க்க ஆசையில்லையே''?

பால்க்கார சின்னாச்சிக் கிழவி என்னைப்பார்த்துக் கேட்கிறாள்.

பஞ்சுத்தலையை சின்னக் குடும்பியாய் சேத்துக்கட்டிக் கொண்டு கூன் விழுந்த முதுகோடை குனிஞ்சு குனிஞ்சு நடந்தபடி தேர் பாக்கப் போறாள்.

எனக்கும் தேர் பாக்க ஆசைதான்.

எங்கடை மாவடி முருகன் பச்சை நிறத் தேரிலை ஏறி பச்சை மாலைகளோட பச்சைக் கல் நகையளோடை சுத்தி வாற அழகை பாத்துப் பாத்து ரசித்தவன் நான். முந்தி எங்கடை முருகன் கோயில் கொடியேறினால் இருபத்தொரு நாளும் மச்சத் தண்ணியை நான் நினைச்சுக் கூட பாக்கு மாட்டேன். பட்டு வேட்டி கட்டி பட்டுச் சால்வை சுத்தி பட்டையாய் விபூதியைப் பூசிக் கொண்டு கோயிலுக்குப் போனால் திருவிழா முடியத்தான் வீட்டை வருவன்.

அப்ப எனக்கு பத்தொன்பது வயதுதான் இருக்கும் கலியாணம் முடிச்ச முதல் வரியம். புதுப் பட்டு வேட்டி சால்வையோடை நான் தேர் பாக்கப் போறன். எனக்குப் பின்னாலை சிவப்புக் கூறைச் சீலையோடை வெக்கப் பட்டுக் கொண்டு பொன்னி என்ரை மனுசி வாறாள்.

கோயில்லை சனம் நிறைஞ்சு வழியிது மேளங்கள் நாதஸ்வரங்களோடை மாவடி முருகனை தேரில இருத்தினம்.

பச்சை நிறமாய் அலங்கரிச்ச தேரில இருந்த படி பச்சை சாத்தின மாவடி முருகன் என்னைப் பார்த்து சின்னனாய் சிரிக்கிறான்.

எனக்கு மெய் சிலிர்க்குது. கண் சட்டெண்டு கலங்கிப் போகுது. ஒரு நொடி தான்.

வெறி பிடிச்சவனைப் போல நான் தேரை நோக்கி ஓடுறன்; வெள்ளம் மாதிரி நீண்ட சனத்தை இடிச்சுக் கொண்டு முன்னாலை போறன்.

மாவடி முருகன் என்னைப் பார்த்து சின்னனாய் சிரிக்கிறான்.

''வா...... வந்து வடத்தைப் பிடி''

எண்டு சொல்லுற மாதிரி சிரிக்கிறான்.

நான் வேகமாய் நடக்கிறேன். நீண்டு போன அந்த வடத்தை இறுக்கமாய்ப் பிடிக்கிறன்.

பத்தொன்பது வரியமாய் இந்த வடத்தை பிடிக்கவேணும். எங்கடை மாவடி முருகனை இந்தத் தேரிலை இருத்தி ஊரெல்லாம் இழுக்க வேணும் எண்ட கனவு நிறைவேறிப்போன சந்தோசத்திலை நான் நிமிர்ந்து நிக்கிறேன்.

என்ரை சக்தி எல்லாத்தையும் ஒண்டாய்த் திரட்டி 'அரோகரா' எண்டு கத்திக் கொண்டு தேரை இழுக்கிறன். தேர் மெல்ல மெல்ல அசைஞ்சு கொண்டு முன்னாலை வருது.

இரண்டு மூன்று நிமிசந்தான் இழுத்திருப்பேன்.

அடுத்த கணம்... ஆரோ என்னை இழுக்கிற மாதிரி உணர்வு.

திரும்பினன். கண்கள் சிவக்க மீசை துடிக்க ஆத்திரத்தோடை என்னைப் பாக்கிறார் வேலுப்பிள்ளை.

''எளிய சாதி..... என்ன துணிவிலை வடத்திலை கைவைச்சாய் ...வாடா இஞ்சாலை ''

அவ்வளவு சனத்துக்கை நாயை இழுக்கிறமாதிரி என்னை வேலுப்பிள்ளை இழுத்துக் கொண்டு போறார்.

பொன்னி பெரிய குரலிலை கத்திக் கொண்டு என்னை வந்து இழுத்துப் பிடிக்கிறாள்.

அண்டைக்கு வீட்டுக்கை போய் விழுந்து விழுந்து குழறியதுக்குப்பிறகு மாவடி முருகனை தேரிலை பாக்க வேணும் எண்ட ஆசை எனக்கு இல்லாமல் போச்சுது.

இண்டைக்கும் தேர்.

ஊரே திரண்டு தேர் பாக்கப் போக நான் பேசாமல் என்ரை வீட்டை போறன். வீட்டுப் படலையோடை பொன்னி நிற்கிறாள். ஒட்டிப போன உடம்பிலை இறிசலாய் நைந்து போன சிவப்பு நிற கூறைச் சீலையைக் கட்டிக் கொண்டு என்னைப் பார்த்து சிரிக்கிறாள்.

''தேர் பார்க்கப் போகேலையே ?'

அவளின்ரை கேள்விக்குப் பதில் சொல்லாமல் நான் வீட்டுக்கை நுழையுறன். ''இது எங்கடை மாவடி முருகன் தேர் போல இல்லையாம். வேறு தேராம்.. வெளிக்கிடுங்கோ போய்ப் பாத்துக் கொண்டு வருவம்''

பழைய பட்டுவேட்டி சால்வையை கையிலை தாறாள் பொன்னி. பொத்தல் விழுந்து கசங்கிப் போனாலும் மினுக்குக் குறையாத அந்தப் பட்டு வேட்டி சால்வையை நான் வெறிச்சுப் பாக்கிறன் திரும்பவும் ஒரு தேர்த்திருவிழாவா? ஐம்பது வரிசத்துக்கு முதல் நடந்ததெல்லாம் நினைவுக்கு வர நான் பொன்னியை நிமிர்ந்து பாக்கிறன்.

''கெதியாய்க் கட்டிக் கொண்டு வாருங்கோவன். தேர்வரப் போகுது'

பொன்னியின்ரை அதட்டலோடை நான் தேர்பாக்க வெளிக்கிடுறன்.

தெரு முழுக்க சனம் நிறைஞ்சி வழியுது. எல்லாரும் சந்தோசமாய் சிரிச்சபடி கும்மாளம் போடுகினம். சிறிசுகள் பெரியகுரலிலை ஏதோ பாட்டுக்கள் பாடுகினம்.

கிட்டத்திலை – எங்களுக்குப் பக்கத்திலை துவக்குச் சத்தங்கள் படபடவெண்டு கேக்குது.


''தேர் வந்திட்டுது .. தேர் வந்திட்டுது ..'' எல்லாரும் தெருவுக்கு ஓடினம் தள்ளுப்பட்டு நெரிபட்டு கத்திக் குளறிக் கொண்டு தேருக்குக் கிட்டப் போகினம். பொன்னியின்ரை கையைப் பிடிச்சுக்கொண்டு நடக்க சனத்தோடை சனமாய் நானும் தேருக்குக் கிட்டவந்திட்டன்.

என்ரை மனதுக்கை மாவடி முருகன் பச்சைத் தேரிலை ஏறி பச்சை நிற அலங்காரத்தோடை என்னைப் பாத்துச் சிரிக்கிறான்.

''அங்கை பாருங்கோவன் தேரின்ரை வடிவை...''

பொன்னி வியப்பாய் கத்த நான் தேரை வடிவாய் உத்துப் பாக்கிறன்.

இது தேர்தான்: எண்டாலும் மாவடி முருகன் தேர்மாதிரி இஞ்சை மேளங்கள், நாதஸ்வரங்கள் இல்லை துவக்குச்சத்தங்கள் படபடவெண்டு கேக்க. பெரிய எறிகணையள் தொம்,



# நிழலின் வரவு

வெள்ளெருக்கை மேவும்
மல்லிகையின் வளர்வாக
இந்த மண்ணேன் இப்போது மகிழ்கிறது?

தாயற்று வெம்பும் குழந்தையின் மனதோடும்
தாகங்கள் தீராத முகங்களோடும்
தவிப்பு மேலிட அலைவுற்ற காலங்களின் முடிவாய்

நீங்களற்ற
எமது நகரம் சுமந்த வதைகளும்
வலிந்த புன்னகைகளும் சிதையேறும் கணங்களாக
உங்களின் வரவு நிகழ்கிறது.
சாட்சுவதமான வாழ்வின் மிளிர்வை
உங்கள் காலடிகளில் இருந்து ஏற்றுவோம்.

உயிரணுக்கள் நோக
எம்மில் மோதிய கொடூர விழிகளின் தகிப்பு
தணிந்தோயாப் பொழுதிலும்
உங்கள் நிழல்கண்டு குளிர்வுறுவோம்.

தொன்மங்களாகிப் போகும்,
ஒரு விடுதலையின் படிமங்கள் துலங்க
சித்திரங்கள் நிரையென வரையலாகும் பொழுதுகள்
விழியுருக்குமெனிலும்
ஆத்மாவின் நிறைவு
அதில் உண்டல்லவா?

□ புஸ்பதேவன்

தொம் எண்டு வெடிக்க தேர் அசைஞ்சு அசைஞ்சு மெதுவாய் வருது. இந்தத் தேரிலை மாவடி முருகன் இல்லை. ஆனால் தமிழீழத்தின்ரை தேசப்படம் தெரியுது மாவடி முருகன் கோயில் தேர் மாதிரி இருக்கிற பச்சைத்தான்.

சிவப்பு, மஞ்சள் கொடியாலையும் துவக்கு ரவையளாலையும், பெரிய பெரிய ஆயுதங்களாலையும் அலங்கரிச்சு அந்தத்தேர் பளபளவெண்டு மினுங்கிக் கொண்டு முன்னாலை வருது.

மாவடி முருகன் தேரைவிட எவ்வளவோ, பிரகாசமாய், என்ரை கண்ணாலை பாக்கேலாத அளவுக்கு வெளிச்சமாய் அந்தத் தேர் அசையுது.

தேருக்கு முன்னால நீண்டு போயிருக்கிற அந்தப் பெரிய வடத்தை பச்சைச் சீருடையும், பச்சைத்தொப்பியும், கறுத்தைச் சப்பாத்தும் தோளிலை துவக்கும் தூக்கின கனபேர் ஒண்டாய் நிண்டு இழுக்கினம். செருவிலை பாத்துக் கொண்டு நிக்கிற ஆக்களும் வடத்துக்குக் கிட்டப் போய் அதைத் தொட்டுப் பாக்கினம். சிலபேர் சேர்ந்து இழுக்கினம். என்னை மாதிரி கூன் விழுந்து பல்லுப் போனதுகள் கூட அங்கை இளந்தாரியள் மாதிரிநிண்டுகொண்டு தேரை இழுக்கினம்.

அவையள் இழுக்க இழுக்க மெதுமெதுவாய் அசைஞ்சு வாற அந்ததேரின்ரை அழகிலை நான் மெய்மறந்து நிக்கிறன்.

"அங்கை .. அங்கை பாருங்கோவன் எங்கடை மூத்த பேரன் வடம் பிடிச்சு இழுக்கிறான்" பொன்னி பெரிய சத்தத்திலை சொன்னதைக் கேட்டு நான் திகைச்சுப் போறன்.

"என்ரைபேரனோ... என்ரை பேரன் வடம்பிடிக்சு இழுக்கிறானோ?"

நான் நம்பாமல் பொன்னியைக் கேக்கிறன்.

'அவன்தான்... எங்கடை பேரன்தான்.. பச்சை உடுப்போடை சிரிச்சுக் கொண்டு தேரிழுக்கிறது எங்கடை பேரன்தான் அங்கை பாருங்கோ வடிவாய் உத்துப் பாருங்கோ...'

பொன்னி காட்டின திசையிலை பாத்து நான் திகைச்சுப் போறன். என்ரை பேரன் நிமிர்ந்து நிக்கிறான். பச்சை உடுப்போடை தோளிலை துவக்கும் தொங்கதன்ரைதைரியத்தை எல்லாம் ஒண்டாச் சேத்துக் கொண்டு தேரை இழுக்கிறான்.

ஓ... எனக்குக் கண்கள் கலங்குது பச்சை சாத்தின எங்கடை மாவடிமுருகனை தேரிலை இருத்தி வடமிழுத்த மாதிரி எனக்கு உடம்பு சிலிர்க்குது.

இந்தச்சனங்களை இடித்துக் கொண்டு ஓடிப்போய் வடம் பிடிச்சிருக்கிற என்ரை பேரன்ரை கையளை கட்டிப்பிடிச்சு கொஞ்ச வேணும் போலை எனக்கு ஆசை வருது. தேருக்கு முன்னாலை வடத்தைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு போற அவன்ரை காலுகளை தொட்டு கும்பிட வேணும் போல கிடக்கிறது. இவ்வளவு சனத்துக்கையும் அவனைத் தூக்கி தோளிலை இருத்தி ''இவன் என்ரை பேரன்...... இவன் என்ரை பேரன்...'' எண்டுகத்த வேணும் போல வெறி வருது.

நான் இருபது வயதுப் பெடியன் மாதிரி துள்ளி குதிக்கிறன். சந்தோசத்தில் கண்ணிலை இருந்து வழியிற கண்ணீரை துடைக்கக் கூட மறந்து.

நான் என்ரை பேரனையே பார்த்துக் கொண்டு நிற்கிறன்.

''இஞ்சாருங்கோ... ''
பொன்னி என்ர காதுக்குள் மெதுவாய் குசுகுசுக்கிறாள்.

''எங்கடை பேரனோடை வேலுப்பிள்ளையற்றை பேத்தியும் ஒண்டாய் நிண்டல்லே தேர் இழுக்கிறாள். அங்கை பாருங்கோ...''

அவள் சொன்னதைக் கேட்டு நான் அதிர்ந்து போறன்.

என்ரை பேரனோடை வேலுப்பிள்ளையற்றை பேத்தியோ? ஒண்டாய் நிண்டு தேர் இழுக்கிறாளோ?

நான் திடுக்கிட்டுப் போறன் எட்டி நிண்டு உத்துப் பார்க்கிறேன்.

பச்சை உடுப்பும், தோளிலை துவக்குமாய் வேலுப்பிள்ளையற்றை பேத்தி என்ரை பேரனோடை சிரிச்சுச் சிரிச்சு என்னவோ கதைக்கிறாள். அவனும் சிரிச்சுக் கொண்டு அவளோடை சேர்ந்து வடத்தைப் பிடிக்கிறான். இரண்டு பேருமாய் சேந்து இழுக்க தேர் மெல்ல மெல்ல அசையுது

நான் அமைதியாய் நிற்கிறன். எண்பத்தொன்பது வரியமாய் எனக்குள்ளை அடிச்ச புயல் இண்டைக்கு ஓஞ்ச மாதிரி நான் பேசாமல் நிற்கிறன். ''அங்க வேலுப்பிள்ளையை பாருங்கோ.. உங்களைத்தான் பாத்துக் கொண்டு நிற்கிறார்''

பொன்னி சொல்ல நான் நிமிர்ந்து பாக்கிறன்.

தூரத்தில வேலுப்பிள்ளை என்னையே பாத்துக் கொண்டு நிற்கிறார். நானும் வேலுப்பிள்ளையை உத்துப் பாக்கிறன்.

தேர் எங்களைக் கடந்து வேகமாய்ப் போகுது.


OO

## விடிவிலோர் மகிழ்வு

காரிருள் விலகிட சூரியன் உதித்தது.
வாடிய பூக்களின் முகங்களும்
மலர்ந்து சிரித்தன,
பட்சிகள் யாவும் உயரப் பறந்து
சிறகுகள் அசைத்திட,
பார் அனைத்துமே
புதுமையிலுறைந்து மகிழ்ந்து வியந்தது.
தமிழர் யாவர்க்கும்
வாழ்வு பிறந்ததென வானம் சொன்னது;
பூவுலக தென்றல் வந்து எம் மேனி தொட்டது.
கூடு பிரிந்த குருவிகள் புகுந்திட
வாசல் கதவும் தானாய் திறந்தது...
பாதை யாவும் புதிய பூக்கள் மலர்ந்திட
அனைத்து தேசமும் வியந்து பார்த்தது.
விடிவின் செய்திகேட்டு
உலக தேசமே உண்மையைச் சொன்னது.
விடிவின் மகிழ்வில் மனங்கள் நிறைந்திட,
நாளைய பொழுதிலும் சூரியன் உதிக்குமா...
என எண்ணம் சுமந்துமே வாழ்வு நீண்டது?

ம. அருள்ஜோண்சன்

# நீரோடிருத்தல்



அவனுடைய பாசையில டோராக்காரன்
சுத்தப் பயந்தாங்கொள்ளி. நல்லாத் தெரியும்
அவங்களைப்பற்றி. பயத்துக்கெல்லாம் அவன்
பயப்படுறதேயில்லை. கடைசிப் பயமே
சாவுதான். அது பலதடவை முன்னால நீண்டு
பயமுறுத்தினதுதான். இப்ப நல்ல சினேகிதம்.
பைபிள்ள வாற தோமையப் போல; காணாம
எதையும் விசுவசிக்கிறதில்லை.
கனவொண்டிருக்கு அவனுக்கு. விடுதலை
அத்தனை தமிழருக்கும் அத்தனை
அடிமைத் தனத்திற்கும்.

சங்கீதன், எல்லாருக்கும் பிடிச்ச பெயர்.
பேரை மாதிரித்தான் குரலும் எண்டா பொய்.
அடுப்பில போட்ட உப்புக்கல்.
கதை சொன்னா சிரிச்சு குடல் அறும்.
''சங்கீதண்ண இந்த பிளக் சரியான ரைற்''
''நாளைக்குனக்கு டபிள் பட்ஜெட்''
பெற்றோலக் குடிச்சிட்டாளண்ண''
''பெற்றோலுக்கு எவ்வளவு கஷ்டம்
தேங்காய்ப்பால் குடுத்து வெளியில எடுங்கோ''
''அண்ணோ ஓய் உவட்டில பிடிக்கிறியள்
நாளைக்குது''
''மீன் குஞ்சுக்கென்னடா போர்வை''
அவன்ர பகிடிகளுக்குள்ள பாடமுமிருக்கும்
பாசமுமிருக்கும். கட்டளை போட்டால்
சொல்லு மட்டும் நேவி துரத்துப்படும். வாய்
திறக்கும் மட்டும் ஆயுதங்கள் வாய்மூடியிருக்கும்,
வோக்கிக் கொமாண்டில கடற்கரைச்
சண்டையின்ர மணம் மணக்கும் ''ஒட்டுக்
கேக்கிறவனுக்கும் காதடைக்கும்'' அம்மட்ட
சிங்களம் புலம்பும். சிங்களத்துக்குத்தான்
அவன் சிக்கல். அன்பில, அவன் சிக்கிடுவான்.
ஐயாவும் அம்மாவும் அக்காவும் தம்பியும்
அண்ணனும் தங்கச்சியும் ஊர் முழுக்க; அவன்
காலடி பதியாத அந்தக் கடற்கரைக் கிராமத்து
மணலே இல்லை; ஒரு நெக்கலி. எப்பவும்

கண்ணுக்குள்ள, சிரிப்பிருக்கும் கோபமே வராது.
வந்தா சிங்கத்தோடதான். உள்ளுக்குள்ள
பெரிய நெருப்பிருக்கு.

ஒட்டுக் கரை வழிய மூடி அடைச்சு முன்னுக்கு
கூர்வச்சு ராடர் பூட்டி ரைபிளோட படகு
வருகுதெண்டா அலை வந்து கால் நனைக்கிற
தூரத்தில நிண்டு சின்ன வாலுகள் கத்திக்குளறிக்
கைகாட்டி சந்தோசமாய் போவான் சங்கீதன்.
இண்டைக்கென்னமோ நடக்கப்போகுது. கடற்
கரைப்பெருநண்டுகள் கதைக்கும் அது நடக்கும்.

இண்டைக்கும் கரை வழிய ஓடி
வருகுதொருபடகு. கடற்கரைக் கண்களுக்கு
தெரியும். அது இடியனெண்டு கைகாட்டுறதார்?
சங்கீதன். கடற்கரை கனத்துப்போச்சு.
வாலுகளும் வாய் திறக்கவேயில்லை.
கைகாட்டிக்குறை. தெரிஞ்சுபோச்சு.
நாளைக்கவன் வரான் நாண்டு கொண்டு
நிண்டழும் மனசு. ஏமாத்திப் போட்டான்
எல்லாரையும் இன்னொருநாள் பூண்டிக்குள்ள
அதே சின்னக் கறுப்பு கரை வழிய வருகுது.
ஆர்? அவனோ? அவன் தான். ஏய்,
ஆச்சரியம் கடற்கரைக்கு. நெஞ்சில தண்ணி,
பயந்த மாதிரியில்லை.

நாலஞ்சு கிழமை கழிச்சு.
இன்னுமொருக்கா போனான். பழையபடி
கடற்கரை கலகலப்பு. இண்டைக்கவன்

முல்லையேசுதாசன்

சொல்லிக் கொண்டுதான் போனான். எத்தனை தடவை துரத்தியாச்சு இண்டைக்கிடிப்பன். நம்பிக்கை. நாளைக்கொருதரும் நம்பமாட்டினம்.

✻ ✻ ✻ ✻

"நானும் கடலோடிதான்" ராவுராவா நனைஞ்சு தோஞ்சு, இப்பிடி என்னால கடலுக்க கிடக்கேலாது. சரியான மண்டையன்தான். அது ஊருக்குள்ள பட்டப்பேர் அவனுக்கு. எல்லாரும் உயரவலை விட்டா அவன் கரைய வலை படுப்பான். எல்லாரும் கரைய எண்டா அவன் உயர. எதிர் மாறுதான் எப்பவும். ஊரோட ஒத்தோடவே தெரியாது.

எடித்தாராவுக்கிடிச்ச நேரம். கடல்ல கறுப்பெண்டா நேவிதான் கரைய வந்து அடிப்பான். டச்சப் ராக்கற் கடற்கரை கொட்டில்கள்தான் அடிக்கமுழவக் கூட ஆரும் வரார் கரைக்கு. வாட மாறினாத்தான் கரைக்குவருவான் நேவி, உயர ஓடித்திரிவான். அப்பத்தான் கல்லு வலையாவது கடல்ல இறங்கும். நண்டு நாறலெண்டு வித்து அண்டண்டாடு சோத்துலையேறும். எவர்சொல்லியும் மண்டையனுக்கு ஏறாது. ஏறினா புளூஸ்டார் (BLuE STAR) பூட்டினாப் புதுப்பதினெட்டு (எஞ்சின்) கிழக்க அஞ்சு லீட்டருக்காவது ஓடவேணும். தனியத்தான் போவான். மீனோடதான் வருவான். ஊருக்கு கறி இலவசம் சனம் கேக்கும் "என்னடா சாகப்போறியோ" எண்டு. "சும்மா சாவனே" சிரிப்பான்.

நடந்தே போச்சுது அது. ஊரே அண்டைக்கு செத்துப் போச்சு. கலகல என்று விடிஞ்ச நேரம் ஓட்டுக் கரைக்குள்ள நேவி. கண்ணில தெரிஞ்சதுக்கெல்லாம் சூடு. கல்லுவலை படுத்தவனுக்கும் கழுத்தில வெட்டு காணப்படாதவை நீந்திவர கரைய நிண்டவைக்கும் சூடு. ஓலைக் கொட்டிலெல்லாம சரி முண்டும் குழியுமாய். கொழுந்து விட்டு நெருப்பு. கரைக்குள்ளதான் ரெண்டு துலைவாரும்.

கரையில கட்டுமரக் காப்பில அப்பான்ர கண்கள் அரையிருட்டில மகனைத்தேட வெள்ளாப்பு வெளிச்சத்தில அவன்ர போட்டு. "துலைவான் கண்டுட்டான் அடிக்கப் போறான் மண்டையன் ஏனிப்பிடி செய்யிறான் தண்ணிக்க பாயடா தம்பி,, அவர் கதைக்கிறது அவனுக்கு கேட்குமோ? மண்டையனை நோக்கி நேவி போக. நேவியைப்பாத்து மண்டையன் போக. "சரணடைஞ்சாலும் சாகக் சொல்லுவானடா தண்ணீக்க பாயடா தம்பி. கடவுளே என்ர பிள்ளையைக்காப்பாற்று கண்ணை மூடிட்டார். அதிசயம் அது. துரத்துறது மண்டையன். ஓடுறது நேவி. எடித்தாராவுக்கிடிச்ச பயமோ அவங்களுக்கு. வெறும் வள்ளத்தில பதினெட்டு கோசில உவட்டோட வேகமா மண்டையன் வர எடித்தாராவுக்கிடி விழுந்த பயம் போல, ஓடிக் கொண்டே இருக்கிறாங்கள்

✻ ✻ ✻ ✻ ✻ ✻

"இண்டைக்கு விடமாட்டன்" நாளைக்கொருதரும் நம்பவேமாட்டினம் கட்டாயம் இண்டைக்கிடிப்பன், நாளைக் கொருதரும் நம்பமாட்டினம் நாண்டு கொண்டு நிண்டமுழவினம்" நான் இடிப்பன் இடியன் போய்க்கொண்டிருக்கு கரை வழிய.



## படைப்பாளிகள் வாசகர்களுக்கு

ஆர்வத்துடன் நீங்கள்
எழுதியனுப்பும் படைப்புக்களை
யும் கடிதங்களையும் கண்டு
'வெளிச்சம்'
மகிழ்ச்சியடைகின்றது;
நன்றியையும் தெரிவிக்கின்றது
உங்களின் படைப்புகள்
தொடர்ந்து வெளிச்சத்தில்
பிரசுரமாகும்.
ஆனால்
உங்களின் படைப்புகள்,
விமர்சனங்கள்
மற்றும் கடிதங்களை
தெளிவாக எழுதி
அனுப்புங்கள்.

☆ ☆ ☆

**தொடர்புக்கான முகவரி:**

**"வெளிச்சம்"**

விடுதலைப்புலிகள்,
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப்பணியகம்,
4ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு,
ஈழமுமம்,

# எப்படி மறக்கமுடியும்....

நான் பிறந்த சின்னாஸ்பத்திரி
காவிக் கலர்ச்சுவரும்
சோம்பேறி மடத்து
பூவரசமர நிழலும்
பகலில் கேட்டும்
இரவில் கேளாமலும் பிடுங்கும்
சொபியா வீட்டு விளாட் மாங்காயும்
எப்படி மறக்க முடியும் ..

கலண்டரில் திகதி கிழிக்கச் சொல்லும்
பெரிய கோவில்
திருநந்தாதி மணிச்சத்தமும்
இருட்டிவிட்டதென
வீட்டுக்குப் போகச் சொல்லும்
குணசிங்கம் கடையின்
கொத்துரொட்டிச் சத்தமும்
எப்படி மறக்க முடியும்....

வாசிகசாலை விகடன் புத்தகத்தை
சொக்கலிங்கம் விதானை
மகளுக்குக் கொடுத்து
ஜெராட் அண்ணையிடம்
பேச்சு வாங்கியதும்
அலுமாரித் திறப்பை வாங்கிவிட்டு
மறுநாள் கூப்பிட்டு தந்ததும்
எப்படி மறக்கமுடியும்...

அருமை அண்ணைக்குத்தெரியாது
சவுக்காலைச் சுருபத்தின்
கண்ணாடி கழட்டி
மீன் தொட்டிசெய்ததும்
பெரியகானுக்குள் பிடித்த
குஞ்சுமீனை அதற்குள்விட்டு
வடிவு பார்த்ததும்
எப்படி மறக்கமுடியும்....



யாழ். சுதா

# எனது யாழ்ப்பாணத்தை...?

இதுவரையிலும் நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பிய 'வெளிச்சம்' இதழ்களையும், வெளியீடுகளையும் இப்பொழுது பெற்றுக்கொள்ள ஒரு நல்லவாய்ப்பு

ஈழத்தமிழர் வாழ்வில் 1990க்குப் பின் ஏற்பட்ட மாற்றங்களும் விளைவுகளும் நெருக்கடிகளும் பிரச்சினைகளும் போராட்டமும் போரும் போர்வாழ்வும் எப்படி இருந்தன என்பதனை அறியவொரு வாசலாக இந்தப்படைப்புகள் இருக்கின்றன. அரசியல், சமூகவியல் கலை, இலக்கியம், தத்துவம், சூழலியல் என எல்லாவாற்றிலும் பலரும் முன்வைத்த பார்வைகள்.

## வெளிச்சம் வெளியீடுகள்

வெளிச்சம் சிறுகதைகள்
வெளிச்சம் கவிதைகள்
செம்மணி
வாசல் ஒவ்வொன்றும்
ஆனையிறவு

மற்றும், இதுவரை வெளிவந்த

வெளிச்சம் இதழ்கள்
சிறப்பு மலர்கள்

முத்தமிழ்விழா மலர் (1991)
முத்தமிழ்விழா மலர் (1992)



விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்,

நடுவப்பணியகம், புதுக்குடியிருப்பு - 04, முல்லைத்தீவு